# தமிழரசு

16-7-1986 ரூ. 1





# வீரன் வாஞ்சி

இந்திய நாட்டின் விடுதலை நாடி
எழுந்தனர் இளைஞர் கோடி-அன்னார்
சிந்திய ரத்தம் நதியாய்க் கூடி
தேசத்தை மீட்டது ஓடி

இளைய வீரன் வாஞ்சி நாதன்
இணைத்தனன் தன்னைக் களத்தில்-வெள்ளையர்
தலையை வீழ்த்தி, தானும் வீழ்ந்தான்
தாயகம் காத்திடும் தொண்டில்

தேவியைத் துறந்து சேயை மறந்து
தேசப் போரினில் குதித்தான்-மேலாம்
ஆவியை நீத்து தியாகம் புரிந்து
அனைவரின் நெஞ்சினில் நிலைத்தான்



செங்கோட்டையில் வாஞ்சிநாதன்
சிலைத் திறப்பு விழா (17.6.1986)





## வாழ்க்கைப் பாடம் படித்தவர்

—பேரறிஞர் அண்ணா

காமராஜர் தமது பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார்; தமிழர்கள் பெருமைப்படத் தக்க நல்ல காரியங் களைச் செய்தார்.

கல்லூரியில் அவர் படித்துப் பட்டம் பெற வில்லையே தவிர, படிக்கவே இல்லை என்று பொருள் கொள்ளக்கூடாது. அவர் தமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்துக் கொண்டுதான் இருப்பார். இதை, ஆறடி மேடையில் மாலை நேரத்தில் பொதுக் கூட்டங் களில் மட்டுமே பார்ப்பவர்கள் புரிந்து கொள்ள முடியாது.

## எதிர்நீச்சல் போட்ட தலைவர்

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்

தியாகத்தின் அடையாளச் சின்னம் காமராஜர். போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர். காமராஜர் முதல்வராக இருந்தபோது வீணாக சட்டப் பிரச் சனையை வைத்து அவர் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப் போட்டதில்லை. மக் களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.

# பாபுவுக்குப் புகழஞ்சலி



ஈடு இணையற்ற தலைவராக இந்திய அரசியல் வானில் சுடர்விட்டுப் பிரகாசித்த ஜோதி அணைந்து விட்டது. எழுச்சி மிக்க இளைஞராக 78 வயதிலும் அரசியலில் அயராது பாடுபட்ட பாபு ஜெகஜீவன்ராம், 6-7-86 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு இந்திய நாடே அதிர்ச்சிக்குள்ளானது.

மூன்று நாள் துக்கம் கொண்டாட மத்திய அரசு உத்தரவிட்டது. நாடு முழுவதிலும் அரசு அலுவலகங்கள் ஒரு நாள் மூடப்பட்டன. தமிழக அரசு தனது அலுவலகங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் ஒரு நாள் விடுமுறையளித்து, மறைந்த தலைவருக்குத் தனது மரியாதையைச் செலுத்தியது.

தேசியத் தலைவர்கள் பாபுவுக்குச் சூட்டிய புகழஞ்சலிகளில் சில:

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்**

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறி இருப்பதாவது:

''நாட்டுப் பணியில் நீண்ட காலம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். மிகச் சிறந்த ஜனநாயகவாதி, தேர்ந்த நிர்வாகி, 40 ஆண்டுகளாக மத்திய அரசில் பல்வேறு பொறுப்புகளை நிர்வகித்துப் பெயர் எடுத்தவர். அரசியல் வாழ்வில் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தவர். எல்லோருக்கும் இனிய நண்பர்.

''தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும், ஏழைகளுக்காகவும் பாடுபட்டவரை நாம் இழந்து விட்டோம். பிற்படுத்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு அவர் நம்பிக்கையின் சின்னமாக விளங்கினார். அவரது வாழ்க்கை இளைஞர்களுக்கு எழுச்சி தரும் ஊற்று ஆகும்.''

**மாண்புமிகு இந்தியப் பிரதமர்**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் தமது செய்தியில் கூறி இருப்பதாவது:

''காந்தி, நேரு ஆகியோரின் அரசியலால் ஈர்க்கப்பட்ட ஜெகஜீவன்ராம் இந்தியாவை நவீனமயமாக்கப் பெரிதும் பாடுபட்டார். தேசியப் பற்றுமிக்க தலைமுறையின் தளபதி அவர். முன்னேற்றத்துக்கான போராட்டத்தில் முன்னணித் தலைவராக இருந்தவர். எந்த இலட்சியங்கள் அவரை ஈர்த்ததோ, எதற்காக அவர் போராடினாரோ, அவற்றை அடைய நாம் தொடர்ந்து போராட வேண்டும்.

''பாபுஜி என்று இலட்சக்கணக்கான மக்களால் அழைக்கப்பட்ட ஜெகஜீவன்ராம் இன்று இல்லை. ஆனால் அவரது பெயர் நமது விடுதலைப் போராட்டத்துடன் என்றும் இணைந்து நிற்கும்.''

**மேதகு தமிழக ஆளுநர்**

மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் கூறி இருப்பதாவது:

''ஜெகஜீவன்ராம் மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும். சுதந்திரப் போராட்ட வீரரான அவர், மதச்சார்பின்மைக் கொள்கை மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றின் பாதுகாவலராகவும் இருந்தார். பல்வேறு பொறுப்புகளில் இருந்து பணியாற்றியவர். ஏழை மக்களின் உரிமைக்காகப் பாடுபட்டவர்.''

**மாண்புமிகு தமிழக முதல்வர்**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் கூறி இருப்பதாவது:

''ஜெகஜீவன்ராம் மரணச் செய்தி கேட்டு வருத்தம் அடைந்தேன். சுதந்திரப் போராட்ட வீரராகவும் சிறந்த நிர்வாகியாகவும் இருந்து அவர் இந்தியாவின் மறுமலர்ச்சியில் பெரும் பங்கு கொண்டார். அவர் நாட்டு விடுதலைக்காகப் போராடியது மட்டும் அல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் வாழ்நாள் முழுவதும் போராடினார்.

''தமிழ்நாட்டின் மீது அவர் தனி ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதும் அனைவரும் அறிந்ததே. அவருடன் என்னுடைய அலுவலக மற்றும் தனிப்பட்ட தொடர்புகளின் போது அவர் என்மீது காட்டிய அன்பையும், மதிப்பையும் நான் மறக்க முடியாது.

''அவரது மரணத்தால் இந்தியத்தாய் தனது தலைசிறந்த மகன்களில் ஒருவரை இழந்து விட்டாள். தமிழக அரசு சார்பாகவும், தமிழக மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

# தன்னிகரற்ற தலைவர்

ஜி. கே. மூப்பனார்

பொதுச் செயலாளர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி



புதிய தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தலைவர் காமராஜரின் 84-வது பிறந்த நாளை இன்று இந்த நாடு கொண்டாடுகிறது. அவருடைய வரலாறு தமிழகத்தின் அரசியல் வரலாற்றுக்கு ஒரு தனிப் பாதை காட்டியது. பணம் படைத்தவர்கள், செல்வாக்கு மிகுந்தவர்கள், சாதிப் பெருமை பெற்றவர்கள் மட்டுமே அரசியலில் தலைமையேற்க முடியும், பதவிபெற முடியும் என்றிருந்த நிலையை மாற்றியமைத்தவர்.

எளிய தொண்டனாக, ஆர்வமுள்ள சுதந்தரப் போராட்ட வீரனாக காங்கிரஸ் இயக்கத்தில் இணைத்துக் கொண்ட அவர் தன்னுடைய சொந்தச் சேவையினால், சலியாத உழைப்பினால் தலைமை நோக்கி நடை போட்டவர். காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைமை அவரைத் தேடிவந்தது. மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பு எதிர்பாராத சூழ்நிலையில் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவருடைய 10 ஆண்டுக் கால ஆட்சி, தமிழகத்தின் பொற்காலம். அடித்தள மக்கள் சமுதாயத்தினுடைய அடித் தளத்தைத் தாங்கி நிற்கின்ற ஏழைகளும், நலிந்தவர்களும், பிற்படுத்தப் பட்டவர்களும், பின் தங்கியவர்களும், படிக்காதவர்களும், படிக்கும் துடிப்புப் பெற்றிருந்தவர்களும் காமராஜருடைய ஆட்சி, தங்கள் நலம் காக்கும் ஆட்சி எனக் கருதினர். மின்சாரம் கிராமங்களுக்குச் சென்றது. விவசாயத்தை வளர்த்தது. உணவு உற்பத்தியைப் பெருக்கியது. நாளுக்கொரு தொழிற்சாலை என மாநிலத்தினுடைய தொழில் துறை முன்னேற்றப்பாதையில் வேகமாக நடைபோட்டது. கல்விக் கூடங்களின் கதவுகள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டன. இலவசக் கல்வி. சீருடை. எனப் பல திட்டங்கள் தமிழகத்தினுடைய கல்வித்தரத்தை உயர்த்தின

பண்டித நேருவின் வேண்டுகோள் காமராஜரை டெல்லிக்கு ஈர்த்தது. அகில இந்திய காங்கிரசின் தலைவராகப் பொறுப்பேற்றவர் நாட்டின் ஜனநாயகத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சோசலிச சமுதாய அமைப்புக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இந்தியாவிற்கு அன்னை இந்திராகாந்தியின் தலைமையை அடையாளம் காட்டியவர். தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவர் தேசத்தலைவராக உயர்ந்து நின்றார். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், உணவு உற்பத்தியில் அவர் காட்டிய ஆர்வம் சிறப்புக்கு உரியது.

இந்திய ஜனநாயகம் இன்றைக்கு அவராலே வாழ்கிறது. பாரதத்தின் பிரதமரை மூன்று முறை தேர்ந்தெடுக்கின்ற பெரும் பொறுப்பினை ஏற்றவர் அவர். தமிழகத்தின் செயல்பாட்டுத் திறமைக்குப் பெருமை தேடித்தந்த பெருந்தலைவர் அவர். இன்று அவரை நாம் போற்றுகிறோம். அவர் வழிநடப்போம். நாட்டைக் காப்போம்.

---

## ஆற்றல்மிக்க தலைவர்

—பண்டித ஜவகர்லால் நேரு

'உண்மையான தலைவன் என்பதற்கு எடுத்துக்காட்டத் தக்கதோர் உதாரணம்; மக்கள் மத்தியில் உருவானதோர் தலைவன்; தான் ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்பை நிறைவேற்றத்தக்க ஆற்றல் கொண்ட தலைவன்; செயலில் தன்னை மறந்து ஈடுபடும் தலைவன் சிலையைத் திறக்கிறேன். உயிரோடு இருப்பவர்களுக்குச் சிலை அமைப்பதை நான் விரும்புவதில்லை. மறைந்தபின் மரியாதை செலுத்துவதே ஏற்றது என எண்ணுபவன் நான். ஆனால் காமராஜ் என் நண்பர் என்ற முறையிலும், அவர் மக்களிலிருந்து தோன்றிய மக்கள் தலைவர் என்ற முறையிலும், அவரது உருவச் சிலையைத் திறக்கச் சம்மதிக்கிறேன்''.

(காமராஜர் சிலைத் திறப்பு விழா 9-10-1961)



# தத்துவ மேதை காமராஜர்



**—ந.சோமயாஜுலு**

**1923** முதல் காமராஜர் அமரராகும் வரை நாங்கள் நல்ல நண்பர்கள். அரசியலில் ஒரே கொள்கையும், லட்சியமும் உடையவர்களாக இருந்தபோதிலும், சிலசில சமயங்களில் பேதம் கொள்வது சகஜம். எனினும் நண்பர்களாகவே வாழ்ந்தோம்.

ஒருவரிடத்தில் மற்றொருவர் நண்ணுவது நட்பாகும். இந்த நட்பு - மனநட்பு, உடல்நட்பு என்றும் இருவகையாக உளது. மன நட்பன இலக்கணம், விலகி நின்றாலும் குணாதிசயங்களைக் கண்டு பிரமித்தல், காணும் இடத்தில் மகிழ்ச்சியுடன் குலாவுதல், பிறர்குறை கூறின் அவர்களைத் தண்டித்தல், அவரது துன்பத்தைத் தனதெனக் கொள்ளல், மற்றும் நட்பின் இலக்கணத்தைக் கடைப்பிடித்தல் போன்றவையாகும்.

உடல் நட்பு-காணும் இடத்தில் நகைத்தல், காணா இடத்தில் ஓரம் பேசல், எள்ளிநகையாடுதல் மற்றும் பலவாகும். எங்கள் நட்பு மனநட்பாகும். நான் ராஜாஜியின பரமபக்தன். காமராஜரின் நெருங்கிய நண்பன். ஸ்தாபனத் தேர்தல் வந்த சமயமெல்லாம், அவருக்கு எதிர்த்தே வாக்களித்தேன். காமராஜரை எதிர்த்து சி.பி. சுப்பையாவுக்கு வாக்களித்தேன். அதே போல் சா. கணேசனுக்கும் ஆதரவளித்தேன். சட்டசபை கட்சித் தேர்தல் வந்த சமயம் சி. சுப்ரமணியத்துக்கு வாக்களித்தேன். இதே போல் சுபாஷ்சந்திரபோசுக்கும் வாக்களித்தேன்.

இது என் கொள்கை. கொள்கை மாறுபாட்டால், நட்பு சிதைந்து விடாது. எனவே என் நட்பு மனநட்பாகும். கூடவே இருந்து கழுத்தறுப்பதைக் காட்டிலும், 'சின்ன சின்ன விஷயத்தில் நாம் மாறுபடுகிறோம்' என்று, ஒருவரை ஒருவர் தெரிந்து கலந்து கொள்வதில் நட்பின் வளர்ச்சி அதிகமாகும். இதைக் காமராஜர் நன்கு அறிந்திருந்ததனால் தான், நான் எப்பொழுது சென்றாலும், எனக்கு முதலில் பேட்டி கொடுத்து, முடிந்த பின்னர்தான் மற்றவர்களிடத்தில் பேசுவார். இது அனைவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

*1940-41*-ல் நாங்கள் இருவரும் வேலூர் சிறையில் பாதுகாப்புக் கைதிகளாக இருந்தோம். ஒரே அறையில் இருந்தோம். நான் சிறிது முரடன், சண்டைக்கோழி என்று எல்லோரும் என்னை அழைப்பார்கள். அண்ணாமலை சர்வகலாசாலையில் படித்த இளைஞர்கள் சர்வகலாசாலையில் நடத்திய போராட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

கம்யூனிஸக் கொள்கை உடையவர்கள், அவர்களைத் தங்கள் கொள்கைகளுக்காக வகுப்புப் பாடங்கள், தெளிவாக்குதல், விவாதித்தல் போன்றவைகளை நடத்தி வந்தார்கள். கம்யூனிசத்தைப் பற்றித் தெரிந்தவன் நான். புகழ்ச்சி இல்லை. மாணவர்கள் வேறு வழிக்குச் சென்று விட்டால் அவர்களது கதி என்ன? என்பதை நினைத்து, நெருங்கிய சகாவான சேலம் எஸ். ஆர். கிருஷ்ணன் அவர்களை வகுப்பிற்கு அனுப்பி வைத்தேன். வகுப்பு முடிந்ததும், கிருஷ்ணன் விவரங்களைக் கூறினார். நெருடலான சில கேள்விகளை அவரை விட்டு அந்த வகுப்புகளில் கேட்கச் சொன்னேன். இதற்குக் காரணம் நான்தான் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். பாம்பின்கால் பாம்பறியும். ஒருநாள் வாதத்திற்கோ, குழப்பத்திற்கோ எனது அறைக்கு வந்தார்கள்.

இவர்களது நோக்கத்தை அறிந்த காமராஜர் அவர்களை எதிர்த்து, சண்டையிட்டு மீண்டும் என் பக்கம் வராதபடி எச்சரித்து கண்டித்து அனுப்பினார். மன நட்பின் இலக்கண ஆதர்ஷ புருஷர் காமராஜர்.

*1952-53*-ல் விருதுநகர் ராவ் சாகிப் ரத்னசாமி நாடார் வாசகசாலையின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். கிருஷ்ணசாமிபாரதி, ஆதித்தன் மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள். கலவரம் மூண்டது. மற்றவர்கள் மேடையிலிருந்து கீழிறங்கி தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். நான் மேடையிலேயே இருந்தேன். ஒரு கம்பு என் மீது பறந்து வந்தது. சிலம்பாட்டம் தெரிந்தவனாதலால் கம்பு இல்லாதபோது கையால் தடுத்தேன். வந்த வேகத்தில் என் கையில் அடிபட்டு, இட்டு புருவத்திற்கு மேல், செவிக்குச் சமீபத்தில் அடி விழுந்து மயங்கி விழுந்தேன்.

மயக்கம் தெளிவிக்கப்பட்டது. கூட்டம் நடைபெறவில்லை. சட்டசபைக் கூட்டத்திற்கு முன் ராஜாஜியைச் சந்தித்தபோது ''அடி பலமா?'' என்று கேட்டார். நகைத்தேன். நடவடிக்கை எடுக்கப் பட்டதாகச் சொன்னார்.

காமராஜர் முதலமைச்சர் ஆனதும் விருதுநகருக்கு முதன் முறையாக விஜயம் செய்தார். அதே ராவ்சாகிப் ரத்னசாமி நாடார் வாசகசாலையில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. விருதுநகருக்கு வரும்படி எனக்குத் தந்தி வந்தது. அதே மேடையில் தனக்கு அளித்த வரவேற்புகளை எல்லாம் தள்ளிவிட்டு, எனக்கு முதல் கௌரவம் அளித்த அவரது பெருந்தன்மையை நினைக்க, நினைக்க என் மனம் அவரிடம் இடையறாத ஈடுபாட்டைக் கொண்டதில் வியப்பில்லை.

கல்வி, கேள்வி, அறிவு, அனுபவம், எனும் மொழிகள் தமிழ் நாட்டில் வழங்கி வரும் கர்ண பரம்பரையானவைகள். அனுபவத்தாலும் கேள்வியாலும் அறிவையும், கல்வியையும் தனதாக்கிக் கொண்டவர் காமராஜர், எனவே தான் அவர் 'படிக்காத மேதை'. காமராஜர் அதிகம் பேசமாட்டார். பேசுபவைகளில் சொற்சுருக்கமும், பொருட் பெருக்கமும் செயலாற்றலும் நிறைந்ததாக இருக்கும்.

காமராஜர் இடத்தில் நான் கண்டது என்ன? வேகமான கருத்துக்கள், அறிவின் எல்லை. மனச்சான்றின் கருவூலம், உயிர்களிடத்தில் உள்ள அன்பு, உண்மையான பிரதிபலிப்பு, உணர்வின் பெட்டகம், சத்தியத்தின் வழிகாட்டி. தத்துவவாதிகளுக்கும் இது ஒரு எடுத்துக்காட்டு. எனவேதான் காமராஜர் ஒரு தத்துவமேதை என நினைத்து மகிழ்கிறேன். ஆனந்தமடைகிறேன். அவரது கொள்கை ஸ்திரமாக நிலவட்டும். எங்கும் பரவட்டும்.



# மாசற்ற தலைவர்

ஜி. உமாபதி

பெருந்தலைவர் காமராஜர் மாசற்ற தலைவர். அடக்கமே பொருளாகக் கொண்டவர். அன்பின் இருப்பிடமாகவும், பண்பின் உறைவிடமாகவும், ஒழுக்கத்தின் உதாரணமாகவும் வாழ்ந்து காட்டியவர். அவர் பள்ளியில் படித்தது மிகக்குறைவு-ஆனால், அவர் நமக்கெல்லாம் சொல்லித் தந்த பாடம் மிகப்பெரியது. அப்பாடத்தைப் போலவே வாழ்ந்து காட்டிய மகத்தான தலைவர்!

காமராஜர் அவர்கள் இளம் வயதிலேயே 'உலக உத்தமர்' மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்கப் போராட்டத்தை முடித்து, நம் தேசத்திற்குத் திரும்பி, காங்கிரஸ் மகாசபையின் தலைமையேற்று, வழிநடத்த ஆரம்பித்த காலத்திலிருந்து அவர் நடத்திய ஒவ்வொரு போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொண்டு சிறை சென்று, இந்தத் தேச விடுதலைக்கும், தமிழகத்தின் புகழுக்கும் பாடுபட்டார்.

பிறகு சொல்லாற்றல் மிக்க எஸ்.சத்தியமூர்த்தி அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தலைவரானார். அதன்பிறகு அக்கட்சியின் ஈடு இணையற்ற தலைவராகத் தொடர்ந்து விளங்கினார். காமராஜர் அவர்களின் விருப்பப்படி அவர் யார் யாரை நினைக்கிறாரோ அவர்களைத் தமிழ்நாட்டின் காங்கிரஸ் கட்சியின் தலைவராக்கினார். ஆனால், கர்மவீரர் காமராஜரின் யோசனையை மீறி எந்தத் தலைவரும் நடந்ததில்லை. இத்தகைய நற்பெயர் பாரதத்தில் எந்த மாநிலத்திலும் யாருக்கும் இருந்ததில்லை. அதன் பிறகு அவர் ராஜாஜி அவர்கள் ''குலக்கல்வி''த் திட்டத்தைக் கொண்டு வந்த போது ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தால் தானே சட்டசபையின் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் சூழ்நிலை உருவாயிற்று. அதன் பின்னரே தமிழகத்தின் ''பொற்காலம்'' தொடர ஆரம்பித்து, மக்களுடைய வாழ்கைத்தரமும் பொருளாதாரத்தின் சிறப்பும் ஓங்க ஆரம்பித்தன.

'ஆசிய ஜோதி' ஜவஹர்லால் நேரு அவர்கள் இவருடைய நிர்வாகத்திறனைக் கண்டு, என்னென்ன தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவையோ அவை அனைத்தையும் செய்து கொடுத்து உதவினார்கள்

அன்றைய சூழ்நிலையில், அப்போதைய அரசாங்கத்தின் வருவாயைக்கொண்டு நல்ல பல திட்டங்களைத் தீட்டி, 'தமிழ்நாட்டின் வாழ்க்கைத் தரத்தைக் காமராஜர் உயர்த்தினார். அப்போது தான் நாம் பெருமைப்படும் திருச்சியிலுள்ள 'பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்டின்' முதற்பகுதியும், ஆவடி 'டாங்க்' தொழிற்சாலை, உரத்தொழிற்சாலை, பல லட்சக்கணக்கான ஏக்கருக்குச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், பஸ் பாடி-கட்டும் லேலாண்ட் தொழிற்சாலை, உலகத்திலேயே பெருமை கொள்ளும் நெய்வேலி நிலக்கரி மற்றும் மின்சாரத்திட்டமும் கிண்டி, அம்பத்தூர் போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்பேட்டைகளும் உருவாகி தொழில்வளர்ச்சி ஓங்கிட அவர் பாடுபட்டது ஊரறிந்த செய்தியாகும்.

இதுபோன்ற மகத்தான செயல்களைச் செய்த செயல் வீரர் காமராஜர் அவர்கள் மேலும் இந்த நாட்டை உயர்த்திட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தால், நேருஜி அவர்களிடம் மூத்த தலைவர்கள் எல்லாம் சுதந்திரமடைந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், மக்களுக்குச் சேவை உணர்ச்சியை ஊட்டுவதற்காகவும், அரசுத் தலைமைப் பதவியை விட்டுக் கட்சிக்குப் பாடுபட வேண்டுமென விரும்பினார். அதை நேரு பெருமான் ஏற்று ''கே-பிளான்'' (காமராஜர் திட்டம்) என்று அதற்கு மகுடம் சூட்டி, பாரதத்திலுள்ள பெரும் தலைவர்களை எல்லாம் ராஜினாமா செய்ய வைத்து, கட்சியின் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடச் செய்தார்கள்.

அதற்கு வழிகாட்டியாக முதலில் சொன்னது போலவே நமது உத்தமத்தலைவர் முதல்மந்திரி பதவியை ராஜினாமா செய்து, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொறுப்பை ஏற்று, ஒருமைப்

பாட்டிற்கு உழைத்து வந்ததோடு மட்டுமல்லாது நேரு பெருமான் மறைந்த பிறகு, நாணயத்தின் திருவுருவமாக விளங்கிய லால்பகதூர் சாஸ்திரி அவர்களைப்பிரதம மந்திரியாக உருவாக்கினார்கள்.



அதன் பிறகு, பாகிஸ்தான், சைனா போன்ற நாடுகளின் எதிர்ப்பைச் சமாதானப் படுத்தி, அமைதியாக வாழத் தூது சென்ற லால்பகதூர் சாஸ்திரி மறைவெய்தினார்கள். அந்த மாணிக்கத் தலைவர் மறைந்த பிறகு, பழைய பெருந்தலைவர்களின் எதிர்ப்புகளுக்கிடையே தீர்க்க தரிசியாக அன்னை இந்திரா அவர்களை இந்த நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

அன்னை இந்திராவின் ஆட்சிக்காலத்தில் அவருக்கும் காமராஜருக்கும் அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும் கூட, இந்திரா அவர்கள் காமராஜரின் உள்ளாசியுடன் ஆட்சிபுரிந்து வந்தார்கள். அவருடைய ஆட்சித்திறனையும், பாரதம் உயாந்த நிலையில் உருவாக்கிய திறனையும் கண்டு உலகத் தலைவர்கள் அனைவரும் மகிழ்ந்தார்கள்.

நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்திரா அவர்களைப் பிரதமராக்கிய போது, எதிர்த்தவர்கள் கூட அவருடைய ஆட்சித் திறனைக் கண்டு அகம் மகிழ்ந்தார்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும், நாட்டின் முன்னேற்றமே குறிக்கோளாக வாழ்ந்து வந்தார்கள்! அவர் மீது எல்லாக்கட்சியினைச் சார்ந்த தலைவர்களும், கட்சியில் பாடுபட்டவராக இருந்தாலும் இந்த மாபெரும் பாரத தேசத்தின் விடுதலைப் போராட்ட வீரர், 'கர்ம வீரர்' என்ற காரணத்தால் எல்லாரும் பெருந் தலைவரை மனதார விரும்பினார்கள்.

இன்றைய எல்லாக்கட்சியையும், கழகத்தையும் சார்ந்த மாணவமணிகளுக்கு நான் தரும் விஷயம் முன்பே தெரிந்திருக்க முடியாது. மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களைக் காமராஜரின் திருவுருவப்படத்தை திறந்து வைக்க வேண்டுமென்று நான் அழைத்தபோது, அண்ணாவைத் தமது தலைவராக ஏற்றுக்கொண்டபோதிலும், காமராஜர் ஒரு தேசத்தலைவர் என்பதால், அவர் பெருந்தலைவரின் படத்தைத் திறக்க ஒப்புக் கொண்டு வந்தார்கள்.

தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தின் முதல் அமைச்சர் பதவியைத் துறந்து ,அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்க டில்லிக்கு செல்லும் சூழ்நிலை ஏற்பட்ட போது தமிழ்நாட்டின் முன்னேற்றம் தடைபட்டுப்போகும் என்ற நல்ல எண்ணத்தால் அண்ணா அவர்கள் எம்.ஜி.ஆர் அவர்களைத் தூது அனுப்பினார்கள். அவர், பெருந்தலைவரை சந்தித்து'போக வேண்டாம்' என்று வேண்டினார்கள். தேசமும், நேரு பெருமானும் பெருந்தலைவர்க்கு மிக முக்கியமானதால் அவர் காங்கிரஸ் மகா சபையின் தலைமைப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் சென்றார்கள்.

காமராஜர் அவர்களை எதிர்த்துத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக நிறுத்தப்பட்ட பெ.சீனிவாசன், அவரை வென்றபோது காமராசர் வருத்தப்பட வில்லை. பெ.சீனிவாசன் தான் காமராஜரைத் தோற்கடித்து விட்டோமென்று பெருமைசாற்றியபோது அண்ணா அவர்கள் அதைக் கண்டித்து, கழகத்தில் சீனிவாசனுக்கு இருந்த முக்கியத்துவத்தைக் குறைத்தார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நேர்கோட்டுக்குள் வாழ்ந்து வந்த அண்ணா அவர்களுக்குப் பெருந்தலைவர் மீது உள்ள மரியாதைக்கு இது ஒரு சான்றாகும்.



பெருந்தலைவர் அவர்களோடு 38 ஆண்டுகளாக அவரது அணுக்கத் தொண்டனாகவே இருந்து வந்தேன். என் குடும்பத்திலுள்ள எல்லா மக்களுக்கும் மணமுடித்து வைத்து என்னை வாழவைத்தார்கள். நான் எந்த விதமான அரசியல் லாபமும் பெறவில்லை. அப்படி அரசியல் லாபம் பெற நினைத்தவர்கள் அவரிடம் இருக்க முடியாது. அவர் எனக்கு ஆசானாகவும், என் குடும்பத்தாருக்குத் தலைவராகவும் இருந்து வந்தார்கள்.

பெருந்தலைவர் அவர்கள் தன்னுடைய எண்ணற்ற செயல்களின் மூலமாகவும், சிந்தனைகளின் மூலமாகவும் நாட்டின் முன்னேற்றத்திற்கும், தேச வளர்ச்சிக்கும் பாடுபட்டார்கள். அவரை நினைத்து, அவரை உயர்த்தி, நாமும் உயர்வோமாக!

வாழ்க கர்மவீரர் காமராஜரின் திருநாமம்.

# சமய சஞ்சீவித் தலைவர்

பெருந்தலைவர் காமராஜ் நமது தேசீயச் சொத்து.

புகழ் பூத்த தமிழ்! தமிழ்மகன் ஒருவன், பாரதப் பெருந்தலைவனாக - அதுவும் மத்திய ஆட்சியை உருவாக்கி வழி நடத்தும் 'மகாசக்தி'யாகப் பரிமளித்து விஸ்வரூபம் - பேருருவத் தரிசனம் தந்தவன்.

அன்று, 1975 ஆம் ஆண்டு பெருந் தலைவர், நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். உத்தமர் மகாத்மாகாந்தி பிறந்த நாளன்று



நமது 'காலா' (கறுப்பு) காந்தி' வானுலகம் சென்று உத்தமனுடன் கலந்துவிட்டார்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியர் - பெரியவாள் சந்திரசேகரேந்திரர் அவர்கள் காமராஜ் மறைவு குறித்து ஓர் இரங்கல் செய்தியினை உலகிற்கு அறிவித்தார்.

'பாரத மக்களை நேசித்த காமராஜ் அவர்களது இழப்புஈடு செய்ய முடியாத இழப்புஆகும்'.

பெரியவர் சங்கராச்சாரியின் வாசகத்தைக் கூர்ந்து கவனியுங்கள்.

பொதுவாக மக்களால் நேசிக்கப்பட்டவர் என்றுதான் எவரும் குறிப்பிடுவார்கள்.

ஆனால் ஜகத்குரு அவர்கள் ''மக்களை நேசித்த காமராஜ்'' என்று குறிப்பிட்டது தனிச் சிறப்பும் பச்சை உண்மையுங்கூட.

ஆம், மக்களை நேசித்தவர் தான் காமராஜ். எனவே அவரை மக்களும் நேசித்தனர்.

காமராஜ், மக்களில் பலருக்கு சமயத்தில் கை கொடுக்கும் மருந்தாக - சமய சஞ்சீவியாகத் திகழ்ந்தார். அது எப்படி? இதோ ஒரு காட்சி! காணுங்கள்.

வருடம் 1962. பாரதத் திருநாட்டின் சகோதர நாடு எனப் பறை சாற்றிக் கொண்டு வந்த நமது அண்டை நாடான சீன நாடு, இந்தியா மீது எதிர்பாராதவிதமாகப் படையெடுத்துப் போர் தொடுத்துவிட்டது.

சமாதான சக வாழ்வே எனது தாரக மந்திரம் எனக்கோலோச்சி வந்த நமது பிரதமர் பண்டித நேரு கலங்கவில்லை. நண்பனே, பகையாளியான கொடும் சோதனையைச் சாதனையாக மாற்றினார். பாரததேசம், ஓர் அணியில் திரண்டு, தனது தேசப் பற்றினை உறுதிப்படுத்தியது.

சீன-பாரதப் போர் நடந்த போது (1962-1963) இந்திய நாட்டில் சீன ஆதரவாளர் களும்-உளவாளிகள் எனக் கருதப் பட்டோரும் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வகையில், சென்னையில் அரசாங்க வழக்கறிஞர் ( Govt. Pleader ) அழகிரிசாமியின் கீழ் பணியாற்றிய பார்-அட்-லா ஒருவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

பாவம் அந்த வழக்கறிஞர். ஓர் அப்பாவி! உளவு வேலையில் கிஞ்சித்தும் ஈடுபடாதவர். இது அரசு வழக்கறிஞர் அழகிரிசாமிக்கும் தெரியும். ஏதும் செய்ய முடியவில்லை.

ஆனால், அரசு அவரைக் கைது செய்ய, ஒரே ஒரு ஆதாரம் இருந்தது. அது என்ன?

கைது செய்யப்பட்ட வழக்கறிஞர் மனைவி ஒரு லேடி டாக்டர். மலேசியாவில் டாக்டராகப் பணியாற்றி வருகிறார். அந்த டாக்டரம்மாவின் சகோதரர் சீன உளவாளி. சீன நாட்டிற்கே ஓடிப்போய் விட்டவன். அந்தச் சீன உளவாளி - மனைவியின் சகோதரர், அடிக்கடி தபால் மூலம் சில துண்டுப் பிரசுரங்கள் - அக்காளின் கணவனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தான். சீனத்து மச்சான் அனுப்புகிற துண்டுப்பிரசுரங்களைப் படிக்காமலேயே தூக்கி ஒரு மூலையில் எறிந்து வந்தார், வக்கீல் மாமா.

மச்சான் செய்தது, மாமாவுக்கு வினையாகப் போய்விட்டது. சிறையில் வாடினார், சொகுசாக வாழ்ந்து வந்த பார்-அட்-லா!

வக்கீல் சிறையில் வாடிய காலத்தில், அவரது மனைவி - மலேசிய டாக்டரம்மா சென்னைக்கு வருகிறார். கணவனைக் கண்டு பேசி, உறவாடிக் களிக்க வந்த மனைவி திடுக்கிடுகிறாள்! காராக்கிரகத்தில் உள்ள கணவனைச் சந்திக்கக்கூட இயலவில்லை. வாடி, வெதும்பித் தேம்புகிறாள்.

இன்றைய உயர்நீதி மன்ற நீதிபதி திரு எஸ். மோகன் அவர்களது அண்ணன் எஸ். அருணையப்பன் - அன்று 'நவஇந்தியா' தமிழ் நாளிதழின் செய்தி ஆசிரியர். அடியேன் (மு. நமசிவாயம்) செய்தி நிருபர்.

சீன உளவாளியெனக் கருதப்பட்டுச் சிறையில் வாடிய வக்கீல்

மு. நமசிவாயம்

'நவ இந்தியா' அருணையப்பனது உயிர்த்தோழர். மலேசியாவில் இருந்து, சென்னை வந்து, கணவனைக் காண முடியாது வாடிய மனைவியின் 'தாப'த்தைத் தணிக்க முனைகிறார் அருணையப்பன்!

ஒருநாள் காலை, 'நவஇந்தியா' நாளிதழ் அலுவலகம் செல்கிறேன்.

'நமசிவாயம்! நீ ஒரு காரியம் உடனே செய்து முடிக்க வேண்டும்' - எனது செய்தி ஆசிரியரின் அன்புக் கட்டளை இது!

'அதற்கென்ன! முடித்து விடுகிறேன்! சொல்லுங்கள்!' - என்று துடிக்கிறேன்.

ஏதோ, புதிய செய்தி சேகரிப்பு என்று கருதினேன். ஆனால் சீன உளவாளியைப் 'பரோலில் விடுதலை செய்ய வேண்டும்; மனைவியைப் பார்க்கும்படி செய்ய வேண்டும்' என்று அறிகிறேன்.

ஒரு நிமிட நேரம் ஒரே மலைப்பு! மறுகணம் 'சரி! அந்த லேடி டாக்டரை என்னுடன் அனுப்புங்கள்!' என்று அவசரப் படுத்துகிறேன்.

சில நிமிட டாக்சிப் பயணம், லேடி டாக்டருடன் முதலமைச்சர் காமராஜ் இல்லத்திற்குள் பாய்ந்து ஓடுகிறேன்.

முதலமைச்சர் அறைக்குள் பேசிக் கொண்டிருந்த சிலர், வெளியே வருவதற்காகக்காத்திருக்கிறேன். சமயம் வருகிறது. லேடி டாக்டர் உள்ளே வரத் தயங்குகிறார். அச்சம்-கூச்சம்! டாக்டரம்மாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே, காமராஜ் முன்னால் ஓடி நிற்கிறேன், பதட்டத்தோடு!

''உம்! நமசிவாயமா? என்ன? ஒரே பதட்டம்! முதலில் உட்கார். இவங்க யாரு. அவங்க கையை விடு! உட்காருங்க, அம்மா! உம்!'' என்று கனிவுடன் கண்டிப்பாக உட்கார வைக்கிறார், காமராஜ்!

''நீங்க (காமராஜ்)இன்றைக்கு மாலையே ஆந்திராவுக்குப் போகிறீர்கள். அதற்குள் ஒரு ''அஸ்வமேத'' யாகத்தையே செய்து முடிக்க வேண்டும். அது தான் அவசரம்; ''பதட்டம்'' என்று பேச்சைத் தொடங்குகிறேன்.

''மாலைக்குள் அஸ்வமேத யாகம் என்கிறாய்? விஷயத்தைச் சொல்லு, முதலில்''.

காமராஜ் குறுக்கிடுகிறார்.

வக்கீலின் மச்சான் செய்த தபால் காரணமாக பார்-அட்-லா சிறையில் இருப்பது - அவரது மனைவி மலேசியாவிலிருந்து வந்திருப்பது யாவற்றையும் படுவேகத்தில் கூறி முடிக்கிறேன்.

''இப்போது அந்த வக்கீலை..!'' பேச்சை முடிக்கவில்லை நான்.

''அந்த வக்கீலைப் 'பரோலில்' விடுதலை செய்ய வேண்டும். புருஷனும் பெண்டாட்டியும் சந்தித்துப் பேசிச் சந்தோஷப்படனும் அவ்வளவுதானே விஷயம்! சரி. செய்துடலாம்,'' என்று சர்வ சாதாரணமாகத் தாமே முந்திக் கொண்டு வாக்களிக்கிறார், அந்த சமய சஞ்சீவித் தலைவர்.

''என்ன? மலேயா டாக்டரம்மா? நிம்மதியாகப் போங்க! இன்னிக்கு ராத்திரி, உங்க புருஷனுக்கு உங்க வீட்டிலேதான் படுக்கை. சரிதானே? சந்தோஷமாகப் புறப்படுங்க!'' என்று துரிதப் படுத்துகிறார் முதலமைச்சர்.

''அதெப்பிடிங்க முடியும். உளவாளிக் கைதியைப் பார்க்கவே விடமாட்டேங்கறாங்க. பரோலில் விடவே முடியாது - யாராலும் முடியாது என்கிறாங்களே!'' என்று அழத் தொடங்குகிறாள் வக்கீலின் மனைவி!

''நீங்க, என்னா டாக்டருங்கறேன்! எல்லாருக்கும் மனத்தைரியம் சொல்லி, வைத்தியம் பார்க்கிறவங்க, உங்களுக்கு இப்போ, மற்றவங்க மனோ வைத்தியம் பண்ணனும் போல இருக்கே! Doctor Madam, look here-I-who is the Chief Minister with all power is assuring you! understand. பேசாம, தைரியமாப் போங்க'' என்றதும் லேடி டாக்டர் தெம்பாக எழுந்து வணக்கம் செலுத்துகிறார்.

''உம், நமசிவாயம்! அந்த அம்மாகிட்ட இருந்து ஒரு Petition காகிதம் வாங்கி வந்து கொடுங்க. உடனே கொடுங்க. Petition மேலே தானே Order போட முடியும்! சீக்கிரம் போய் காகிதத்தைக் கொண்டாங்க!'' விரட்டுகிறார், காமராஜ்.

''நீங்க, சாயந்திரம் ஆந்திரா போறீங்களே, அதுக்குள்ள..!''

''அதுக்குள்ள எப்படி முடியும்னு கேக்கிறியா! என்ன நிருபர் நீ? உணர்ச்சி வசப்படாதே. புத்தி கூர்மை மழுங்கிவிடும். நல்ல காரியத்திற்குத் துணிச்சலோடு வந்தே! உடனே போய் காகிதத்தைக் கொண்டா! கோட்டைக்கே வந்துரு. சீக்கிரம்'' மீண்டும் விரட்டுகிறார்.

முதலமைச்சர் காமராஜ் வீட்டிலிருந்து, 'நவஇந்தியா' அலுவலகம் திரும்புகிறோம்.

என்ன வேடிக்கை! விபரீத வேடிக்கை தெரியுமா!

காமராஜ் கேட்ட, பரோல் விடுதலைக் கோரிக்கை பெரிய பெரிய வக்கீல்கள் பலர் கூடித் தயாரித்து, அழகாக டைப் செய்து எனது கைக்கு வந்து சேரும்போது பிற்பகல் ஒருமணி!

காகிதப் பெட்டிஷனோடு கோட்டை வரச் சொன்ன முதலமைச்சரைத் தேடி, கோட்டைக்கு டாக்சியில் பறக்கிறேன். ஆனால் காமராஜரைத்தான் 'கோட்டை' விட்டு விட்டேன். பகல் ஒருமணிக்கெல்லாம் வீடு

(தொடர்ச்சி 43 ஆம் பக்கம்)





# கறுப்புச் சூரியன்

அரசவைக் கவிஞர்
புலவர் புலமைப்பித்தன்

"படிக்கவோர் சாதி படித்தவர் பாதம்
பிடிக்கவோர் சாதி" என்றுதான் இங்கே
ப்டைக்கும் போதே பிரம்மா நம்மைப்
படைத்தான்! "அப்படிப் படைத்ததே ஆண்டவன்
தர்மம்!" என்று தம்பட்டம் அடித்த
மர்ம ஏடுகள் மறைநூல்கள் ஆயின!
ஆயிரம் நீதி நூல்கள் இருக்கும்
ஆயினும் இங்கே அநீதிதான் சட்டம்!
கல்விக் கோயிலின் கருவறைக் குள்ளே
செல்லும் உரிமை 'சிலருக்கு மட்டுமே'!
வேர்க்க வேர்க்க உழைத்தவன் முகத்தைப்
பார்ப்பது கல்விக்கே பாவமாம்! இந்தத்
தீயஏற் பாட்டுக்குத் தீயைவைத் தானோர்
தூய கறுப்புத் துரை அவன்பெயர், சிவ
காமித் தாயின் கருணையாற் கிடைத்த
காம ராசெனும் கர்ம வீரன்!
ஏட்டைப் படிப்பது எதற்கென எண்ணி
நாட்டைப் படித்த நல்லறி வாளன்
கல்வித் தேவியின் கால்படா ஊரே
இல்லை எனும்நிலை இவன்தான் ஆக்கினான்!
"எல்லாச் சாதிக்கும் கல்வி; கல்வி
இல்லாச் சாதியே இல்லை" என்று
புதியஏற் பாட்டை புகுத்திக் கல்வியை
பொதுஉடைமை ஆக்கிய புனிதன், மடமை
இருட்டிலே கிடந்த இடமெலாம் இந்தக்
கறுப்புச் சூரியன் கதிரொளி பாய்ச்சினான்
இவன்படிக் காதவன் என்னுமோர் இழிவு
தவறியும் இனிஒரு தமிழனின் வாழ்வில்
இருக்கலா காதென எண்ணினான்; கல்விநீர்
பெருக்கினான், காடெலாம் கழனிகள் ஆக்கினான்
நச்சுப் படர்ந்த நாட்டிலே இந்தப்
பச்சைத் தமிழனின் பணிகள் எத்தனை!
சிந்தை அணுக்கள் சிலிர்க்கச் சிலிர்க்கத்
தந்தை பெரியார்இத் தமிழனை வாழ்த்தக்
காரணம்; பெரியார் கருதிய அனைத்தையும்
காரியம் ஆக்கிக் காட்டினான் என்பதே!
விருது நகரம் இவனைப் பெற்றதால்
விருது பெற்றது! வெல்க இவன்புகழ்!



# புதிய சமுதாயம்



## — பெருந்தலைவர் காமராஜர்

நம்முடைய தேசப் பிதாவும் வழிகாட்டியுமான மகான் காந்திஜியின் வழியில் நாம் பாடுபட்டு சுதந்தரமடைந்துவிட்டோம்.

சுதந்தரத்தைப் பெற்றுவிட்டோம். சுதந்தர ஆட்சி நடக்கிறது. சுகம் வந்துவிட்டது, என்றுதான், சுதந்தரம் வந்ததும் மக்கள் நினைத்து மகிழ்ந்தார்கள். இதில் தப்பு ஒன்றுமில்லை. ஆனால், சுதந்தரம் வந்ததும் சுக வாழ்வு அப்படியே வந்துவிட்டதா? ஏதோ சிலருக்கு, சில சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு வந்திருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் குறிப்பாக நாட்டில் உள்ள கோடானு கோடி ஏழைமக்களுக்கு வாழ்வு வந்ததா, வறுமை நீங்கி விட்டதா என்று கேட்டால் 'இல்லை' என்றுதான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

இரண்டு நூற்றாண்டுகளாக அன்னிய ஆட்சியில் அடிமைப்பட்டு இருந்த நேரத்தில், உலகத்தில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களோடு தொழில், விஞ்ஞான, கருத்துப் புரட்சிகளோடு நாமும் நமது நாடும் ஒட்டி முன்னேறவில்லை. மாறுதலுக்கு உட்படாமல் பின் தங்கி விட்டோம். இதனால்தான் சுதந்தரம் வந்தும், உடனே சுக வாழ்வு கிடைக்கவில்லை.

சுதந்தரம் சுக வாழ்வுக்கான யாத்திரையின் ஒரு கட்டம்-முதல் கட்டம்தான். நாட்டில் உள்ள பின் தங்கிய நிலைமையை -சூழ்நிலைகளை மாற்ற வேண்டும். அறியாமையை அகற்றி தொழில் பெருக்கத்திற்கும் வேலை வாய்ப்புக்கும் ஏற்ற வழி காண வேண்டும். இயற்கைச் சக்திகளையும் மனித சக்தியையும் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி சுபிட்சத்துக்கு வழிகண்டு பிடிக்கவேண்டும். இந்த மகத்தான வேலைதான் சுகவாழ்வுக்கான யாத்திரையின் இரண்டாவது கட்டம். இந்தக் கட்டத்தில்தான், நாம் இன்று இருக்கிறோம்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சுதந்தரம் சுயராஜ்யம் என்பதற்கான சூழ்நிலையையும் தன்னம்பிக்கையையும் எழுச்சியையும் வீர உணர்ச்சியையும், அன்று, அதாவது 1947க்கு முன் எப்படி ஏற்படுத்தினோமோ அதைப் போலவே, ஏன், அதையும் விட மிகவும் வேகமாகவும் நல்ல முறையிலும் சுக வாழ்வுக்கான வழி வகைகளைக்காண, நாம் தனிக் கவனம் செலுத்தியாக வேண்டும்.

சுதந்தர அரசாங்கத்தால் நாட்டின் ''புதிய சமுதாயம்'' உருவாக்கப்பட்டு வருகிறது. புதிய சமுதாயம் என்றால் என்ன? தன்னைத்தானே தன்னம்பிக்கையோடு ஆண்டு கொள்ளும் சக்திபடைத்தது அது. தனக்குரிய தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ளவல்லது. எத்தகைய ஏற்றத் தாழ்வும் ஏற்பட முடியாத சூழ்நிலையில் உள்ளதே நாம் காண விரும்பும் ''புதிய சமுதாயம்''. அது எப்படிப்பட்டது? கவலையற்ற வாழ்வு -பிறரைக் கவலைக்குள்ளாக்காத, நம்மைப்போலவே மற்றவர்கள் வாழ்கிறார்கள், மற்றவர்களைப் போலவே நாமும் வாழ்கிறோம் என்ற திருப்தி படைத்தது ''புதிய சமுதாயம்''.

இத்தகைய கவலையற்ற சமுதாயத்தை-புதிய சமுதாயத்தைப்

படைக்க, சட்டம் போட்டு முடியாது. பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மட்டும் போதாது. மக்களிடையே மகத்தான மன மாறுதல், மனப்புரட்சி ஏற்பட்டாக வேண்டும்.

இந்த வழியிலேயே நம்முடைய சென்னை மாகாணம் வழி காட்டியதைப் பார்த்து நாம் எல்லாரும் பெருமைப்படலாம். நம்முடைய தேசத்தில் ஐந்தாவது வரையில் கட்டாயக் கல்வியைக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, தேசம் பூராவும் பிரயத்தனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இதைப்போன்று நல்ல நிலைமையில் பொதுமக்களுடைய உதவி நமக்குக் கிடைத்துக் கொண்டு வருமேயானால், எட்டாவது வரையில் கட்டாயக் கல்வித் திட்டத்தை நம்முடைய மாகாணத்தில் ஆரம்பித்துவிடலாம். அடுத்து, பத்தாம் வகுப்பு வரையிலும் கட்டாயக் கல்வியை விஸ்தரிக்க முடியும். அதைச் செய்யத்தான் போகிறோம்.

பிற மாகாணங்களெல்லாம் ஏழைக் குழந்தைகளுக்குப் பகலுணவு கொடுக்கத் தயங்கிக் கொண்டு, முடியுமா என்ற பரிசீலனை செய்துகொண்டிருந்த காலத்தில், துணிந்து மக்களுடைய உதவியினாலேயே அந்தந்தக் கிராமத்திலுள்ள ஏழைக் குழந்தைகளுக்குச் சாப்பாடு அளிக்கலாம் என்ற தைரியத்தோடு, அந்தத் திட்டத்தை நாம் ஆரம்பித்தோம். வெற்றிகரமாக நடந்து வருகிறது. இன்னும் பல இடங்களுக்கும் விஸ்தரித்துக் கொண்டே இருக்கிறோம்.



எந்தக் கட்சியானாலும் சரி, மக்கள் வாழ வேண்டும், என்றுதான் சொல்லுகின்றது. ஆனால் எப்படி மக்களை வாழ்விப்பது? எந்த வழி வகுத்து இதை நடத்துவது என்பதில் கருத்து வேறுபாடும், மாறுபாடும் இருக்கலாம். இது கூட இல்லை என்றால் தனித்தனிக் கட்சி வைத்திருப்பதற்கு அர்த்தமே இல்லாமல் போய் விடாதா?

காமராஜர் அதிகம் பேசுவதில் நாட்டமில்லாதவர். செயலில் மட்டுமே தீவிர நம்பிக்கை கொண்டவர். அவர் பிரச்னைகளை அணுகும் விதமே அலாதியானது. முக்கியத்துவம் வாய்ந்த யுத்த காலத்தில் அரிய ஆலோசனைகள் பல வழங்கியவர்.

—லால்பகதூர் சாஸ்திரி

சில கட்சிகளது கருத்துக்கு மக்கள் ஆதரவு அதிகம் இல்லாமல், ஆட்சிப் பீடத்தில் அமர முடியாமல் போகலாம். இது ஜனநாயகத்தில் சாதாரண சம்பவமாகும். ஆனால் ஆளும் சந்தர்ப்பம் ஏற்படவில்லையே என்பதால் சலிப்பும், சஞ்சலமும் ஏற்பட்டு, இதுவே பெரிதாகி ஆள்பவர் செய்வதைக் கண் மூடித்தனமாகக் குறை கூறுவது எக்கட்சிக்கும் நல்லதே அல்ல.

எத்தனைக் க்ட்சிகள் — கொள்கைகள் — கோட்பாடுகள் வேண்டுமானாலும் இருக்கலாம். நாட்டில் அமைதி நிலவ வேண்டும். இது மிகவும் அவசியம். அமைதியான சூழ்நிலையில்தான் ஆக்க வேலைகளில் ஆள்வோர் மட்டுமல்ல, மக்களும் தகுந்த கவனம் செலுத்த முடியும். கட்சிகள் காரணமாகவும், அவற்றிற்கிடையே உள்ள கொள்கை மாறுபாடு, வேறுபாடு காரணமாகவும் நாட்டின் பொது அமைதி குலையும் போக்கு ஒரு சிறிதும் ஏற்படக் கூடாது. அமைதி குலைந்தால் மக்கள் வாழ்வே குலைந்து போகும். தேசத்தின் செல்வங்கள்தான் பாழாகும்; மக்களது நிம்மதிதான் கெட்டுப் போகும். நம்முடைய சக்திதான் வீணாகும், விரயமாகும். இந்த நிலைமை ஏற்படவே கூடாது. எந்தச் சிக்கலுக்கும் ஜனநாயக முறையில், அமைதியான முறையில் தீர்வு காண முடியும். அமைதியைக் காப்பதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு. கட்சிக்குக் கட்சி இதில் வித்தியாசம் இல்லை. ஜாதி, மதம், மொழி வேற்றுமை கூட இதற்கு முன் நிற்கக் கூடாது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடக்கும் இந்த நேரத்தில், அமைதியைக் கலைத்துத்தான் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை வேண்டுமா?

மக்கள் வாழ்வில் சாந்தியும் இன்பமும் நிலவ வேண்டும்: பொறுப்புணர்ச்சி உடையவர்களின் லட்சியமும் வேலைத்திட்டமும் இதுவாகத்தான் இருக்க வேண்டும். இந்த உணர்வுடன் காந்திஜி கண்ட புதிய சமுதாயத்தை அமைக்க உறுதி கொள்வோம்; அதற்கான முயற்சிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவோம்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மகத்தான மாறுதலை நம் நாடு இப்பொழுது அடைந்து வருகிறது. இந்த நாட்டை ஒரு லட்சியத் திருநாடாக மாற்றியமைக்கும் மகத்தான பணியில் நாமும் நம்முடைய பங்கைச் செய்கின்ற வாய்ப்பு நமக்குக் கிடைத்திருப்பது நாம் செய்த அதிர்ஷ்டமேயாகும். எதிர்காலத்திலே சரித்திராசிரியர்கள் இந்தியாவின் மகத்தான சாதனையைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிப் புகழ் மாலை சூட்டப் போகிறார்கள். ஆகவே, இந்த மிக முக்கியமான கட்டத்தில் சிறு சிறு பொல்லாங்குகளும் பூசல்களும் மனக்கிலேசங்களும் நம்முடைய வேகத்தைத் தடுத்து நிறுத்தி விடாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மகத்தான எதிர்கால வாழ்வை உருவாக்கும் திருப்பணியிலே தோளோடு தோள் நின்று முன்னேற்றப் பாதையில் ஏறு நடை போடும் நாற்பது கோடி மக்களிலே நானும் ஒருவன் என்ற பெருமிதமும் உள்ளுணர்வும் ஒவ்வொரு பிரஜையின் இதயத்தினுள்ளும் ஏற்படும்படியான ஒரு நல்ல சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

சிறுசிறு பூசல்கள், தேவையற்ற விதண்டா வாதங்கள் பலனளிக்காது. மகாத்மா காந்தி அடிகள் சொன்ன மாதிரி எவ்விதமான நயவஞ்சகமோ, களங்கமோ இல்லாமல், எந்தப் பிரச்சினையையும் திறந்த மனத்துடன் நாம் சீர்தூக்கிப் பார்த்துச் செயலாற்ற வேண்டும். புதிய சமுதாயம் தானே அமைந்துவிடும்.

**புதிய சமுதாயம் என்னும் நூலிலிருந்து**

# வாழ்க காமராஜர்!

பரலி—சு. நெல்லையப்பர்

வாழ்க வாழ்க காமராசன்
வாழ்க வாழ்க வாழ்க வே
தாழ்வி லாத தருமம் ஓங்கித்
தமிழர் நாடு வாழ்க வே!

அறுப தாண்டு வாழ்ந்த சீலன்
ஆண்டவன் தன் அருளினால்
குறைவி லாமல் ஆண்டு நூறு
குவல யத்தில் வாழ்க வே!

தமிழர் ஆட்சி ஓங்கி இந்தத்
தரணி யெல்லாம் வாழ்க வே!
அமிழ்தின் இனிய தமிழும் இந்த
அவனி யெல்லாம் ஓங்க வே!

வறுமை நீங்கிச் சிறுமை நீங்கி
வளங்கள் எங்கும் ஓங்க வே
அறிவி லாத போராட் டங்கள்
அழிந்து மக்கள் வாழ்க வே!

அன்பும் அறமும் ஓங்கி மக்கள்
அமரர் என்ன வாழ்க வே
இன்ப வடிவ மான ஈசன்
கருணை என்றும் ஓங்க வே!





## கடமைராஜன்!

(பாலபாரதி ச. து. சு. யோகி)

உலகம் தழைக்க நாடெங்கும்
ஊரும் தழைக்க உயிர் தழைக்க
விலகும் கலகக் கொடுமையெலாம்
வெறுமைக் கயமைத் தீமையெலாம்
இலகும் செம்மைச் செல்வமென
எங்கும் செழுமைத் திட்டமிடும்
திலகம் காம ராஜரென்றும்
தெய்வத் திருவன் வாழியவே.

சொந்தக் குடும்பம் இல்லாதான்
சொத்தும் சுகமும் கொள்ளாதான்
பந்த பாசம் தனைவிட்டும்
பரம ஞானத் தவனே போல்
இந்த நாடே தம் வீடாய்
இதில் உள்ளோரே தன்னவராய்
எந்த நாளும் பணிபுரிவான்
இவன் எந் நாளும் வாழியவே.

படிப்பே இல்லான், பார் முழுதும்
படித்தே அறிந்தான், வீண்வாதப்
பிடிப்பே இல்லான், நன்மை எனில்
பிடிப்பாய் பிடிவாதத்துடனே
நொடிப்பே இல்லாமல் கடமை எனில்
நொடிக்குள் முன்னே வந்திடுவான்
நடிப்பே இல்லான் பசப்பறியான்
நாட்டின் தலைவன் வாழியவே.

காம ராஜன் நாட்டு நலக்
கடமை ராஜன் ஏழைகளின்
சேம ராஜன் எங்கள் முதல்
திருவாம் ராஜன் வாழியவே.

# செங்கோட்டையில் ஒரு சிலை



டி.கே.டி. துரைராசன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி மாவட்டம்

ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே செங்கோட்டை நகர மக்களிடம் ஒரு எதிர்பார்ப்பு ஏற்பட்டுவிட்டது.

வீரவாஞ்சிநாதனுக்குத் தமிழக அரசு சிலை வைக்கப் போகிறது! அதற்காக மாபெரும் விழா நடக்கவிருக்கிறது! அந்த விழாவில் மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள்!

நகரம் முழுவதும் இந்தச் செய்தி பரவிவிட்டது. அதற்கேற்றாற்போல் சென்னையிலிருந்து வீரவாஞ்சிநாதனின் சிலையும் வந்து சேர்ந்துவிட்டது!

சிலையைப் பார்ப்பதற்கென்று தினமும் ஒரு கூட்டம். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.ஆர். பிந்துமாதவன், இ.ஆ.ப., அவர்களின் நேரடிப் பார்வையின்கீழ், அரசு நடத்தும் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மாவட்ட நிர்வாகம் ஆர்வத்துடன் ஈடுபட்டது.

செங்கோட்டை நகராட்சிப் பேருந்து நிலையத்துக்கருகில், கொல்லம் சாலை சந்திப்பில் சிலை அமைப்பதற்கான ஏழரை அடி உயர பீடம் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகிலேயே மிகப் பெரிய மேடையும் பந்தலும் போடப்பட்டன.

அரசு அலுவலர்கள் பலர் இரவு பகலாய் விழாவின் பல்வேறு பணிகளைக் கவனித்தனர்.

அதன் பயனாக, செங்கோட்டை நகரம் இதுவரை கண்டிராத ஒரு மாபெரும் விழா ஜூன் திங்கள் 17-ஆம் நாள் நடைபெற்றது.

வீர வாஞ்சிநாதனின் திரு உருவச் சிலைத்திறப்பு விழா!

மாண்புமிகு தமிழகப் பொதுப் பணி அமைச்சர் திரு ஒய்.எஸ்.எம். யூசுப் அவர்கள் இந்த விழாவிற்குத் தலைமையேற்றார். மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தியபின் விழாத் தலைவர் தமது தலைமை உரையில்-

''வீரவாஞ்சிநாதன் வீர மரணம் அடைந்து எழுபத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டன. இடையில் எத்



வாஞ்சிநாதனின் ஒரே சகோதரரான திரு. கோபால கிருஷ்ண அய்யர் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் சார்பில் ரூ. 50 ஆயிரத்தை மாண்புமிகு செய்தி- அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வழங்கினார்.

தனையோ அரசுகள் தமிழகத்தில் ஆட்சி புரிந்துள்ளன. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அரசுதான் வீர வாஞ்சிநாதனுக்குச் சிலை எடுத்து, விழாக் கொண்டாடுகிறது''...என்று குறிப்பிட்டார்.

விழாவைத் தொடங்கி வைத்தவர் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. பி.எச்.பாண்டியன் அவர்கள். அவர் தமது தொடக்க உரையில்—

''வீர வாஞ்சிநாதனின் திருவுருவச் சிலையை அமைத்ததன் வாயிலாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் இன்றைய இளைஞர் சமுதாயத்தின் கவனத்தை இந்திய வரலாற்றின் பக்கம் திருப்பிவிட்டிருக்கிறார்.......'' என்று கூறினார்.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன், டி. ஆர். வெங்கடரமணன், டி. பெருமாள், எஸ். பாலசுப்பிரமணியன், ஆர். எஸ். ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

மாண்புமிகு மத்தியதொழில் துறை இணை அமைச்சர் திரு எம். அருணாசலம் அவர்கள் முன்னிலை வகித்தார். அவர் தமது உரையில், ''வீரவாஞ்சிநாதனின் தியாகத்தையும்-நினைவையும் போற்றும் வகையில் ஏதாவது ஒருசின்னம் நிறுவ வேண்டும் என்றதேசிய உணர்வை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நிறைவேற்றிவிட்டார்கள்'' என்று கூறி மைய அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இறுதியாக மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் வீரவாஞ்சிநாதனின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

அவரது எழுபது நிமிட உரை, எழுச்சியூட்டும் ஒரு உரையாகும். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகம் ஆற்றியுள்ள பங்கு ஏன் இன்னும் இந்தியா முழுமையும் சரியாகத் தெரியவில்லை என்று வினா எழுப்பினார் அமைச்சர்.

''பஞ்சாபில் ஆங்கில அதிகாரியைக் கொன்ற பகத்சிங் பெயர் இன்று பாரத தேசம் முழுவதும் தெரிகிறது. லாலா லஜபதிராய்- பால கங்காதர திலகர் போன்ற பல்வேறு தலைவர்களுக்கு இங்கே நினைவகங்கள் - மன்றங்கள் இருக்கின்றன. ஆனால் வீரவாஞ்சிநாதனின் பெயர் அங்கே எத்தனை பேருக்குத் தெரியும்? வ.உ.சி. யைப் பற்றி வடக்கே அறிந்து வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்?

''தமிழகத்திலேயே பலருக்கு இது தெரியாது. இதற்குக் காரணம் இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி-தமிழகத் தலைவர்கள் ஆற்றிய தியாகங்களை - வீர தீர சாகசங்களைச் சொல்கிற விதமாகச் சொல்லவில்லை...ஏழை எளிய பாமர மக்கள் புரிந்து கொள்கிற மாதிரி யாரும்

''ஏற்கெனவே இவரது குடும்பத்துக்கு அரசு மாதந்தோறும் 500 ரூபாய் உதவித் தொகை அளித்து வருகிறது. அதோடு போதும் என்று நின்றுவிடவில்லை தமிழக முதல்வர். வாஞ்சிநாதனின் பெயரில் ஒரு வீடு இருக்க வேண்டும்.... அந்த வீட்டில் வாஞ்சிநாதனின் வம்சத்தினர் தலைமுறை தலையாக வசிக்க வேண்டும். அதற்காக மாண்புமிகு முதல்வரின் அன்புக் காணிக்கையாகத் தரப்படும் இந்தப் பணத்தைக் கொண்டு ஒரு வீடு வாங்க வேண்டும்....அதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்வார்கள்.....'' என்று கூறினார் அமைச்சர்.

நலிந்த பிரிவினருக்கு அரசு தரும் பல்வேறு உதவிகளையும் அமைச்சர் வழங்கினார். வாஞ்சிநாதனின் வரலாற்றைப் புத்தகமாக வெளியிட்ட திரு. ரகமி பொன்னாடை




இதுவரை எடுத்து வைக்கவில்லை. இந்தக் குறையைப் போக்குவதற்காக விடுதலைப் போராட்டத்தை விளக்கும் வகையில் ஓவியக் கண்காட்சி ஒன்றினை அமைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. இதற்காக எட்டயபுரம் பாரதி மணி மண்டபத்துக்கு அருகே நிலம் கையகப்படுத்தப் பட்டிருக்கிறது. இதற்கு ஆகக்கூடிய செலவுத் தொகையான ரூ. 75 இலட்சத்தை மத்திய அரசு வழங்கவேண்டும்'' என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

வாஞ்சிநாதனின் தம்பி திரு. கோபாலகிருஷ்ணனின் குடும்பத்துக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் சொந்த நிதியிலிருந்து கொடுத்த ஐம்பதாயிரம் ரூபாயை மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வழங்கினார்.

போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., நன்றி உரை ஆற்றினார்.

விழா முடிவில் திரு. டி. கே. எஸ். கலைவாணன் குழுவினரின் தேசியப் பாடல் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவின் ஒரு பகுதியாக வாஞ்சிநாதனின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப் படக்கண்காட்சியினை அரசின் செய்தித்துறை சிறப்பாக அமைத்திருந்தது.

வீரவாஞ்சிநாதனின் ஏழரை அடி உயர வெண்கலச் சிலை இப்போது அங்கே கம்பீரமாக நிற்கிறது. இனி காலகாலத்துக்கும் அது நிற்கும்..!



# காமராஜர் கருத்துரைகள்

யானை சாப்பிடும்போது ஒரு கவளம் சோறு கீழே சிந்திவிடு கிறது. யானைக்கு ஒரு கவளம் தான் நஷ்டம். ஆனால் அதுவே லட்சக்கணக்கான எறும்புகளுக்கு ஆகாரமாகக் கிடைக்கிறதே! இது போல, அளவுக்கு மீறி சம்பாதிப் பதில் கொஞ்சம் வரி கொடுத் தால், பலபேர் பட்டினி தீர வழி செய்யலாமே!

இந்திய நாடு சுதந்திரம் அடைந்தால்தான் ஏழைகளாக உள்ளவர்களுடைய வறுமை நீங்க வழி செய்ய முடியும். ஏழைகளை நல்ல முறையில் வாழ வைத்து, எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதுதான் சுதந்திரம், அதற்காகத் தான் சுதந்திரம் கேட்டார், மகாத்மா காந்தி.

ஏழ்மையையும் இல்லாமையை யும் வேலையில்லாத் திண்டாட் டத்தையும் போக்க வேண்டும். ஆனால் ஒரேயடியாக ஒரேநாளில் இவற்றைத் தீர்த்துவிட முடி யுமா என்ன? எப்படி முடியும்? யாராலும் முடியாது! அப்படி யாராவது செய்து காட்டுகிறேன் என்றால் ரொம்ப சந்தோஷம். சும்மா சத்தம் போட்டுச் சொன் னால் மட்டும் காரியம் நடந்து விடாது. நடைமுறையில் இந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண, நல்ல வழி வகுத்து படிப் படியாக வேலை செய்தால் தான் நடக்கும். அப்படித்தான் செய்து வருகிறோம்.

## தலைவருக்குக் காணிக்கை

பெருந்தலைவர் காமராஜர் பள்ளிக்குச் சென்று படித்ததில்லையே தவிர—ஏராளமான நூல் களைப் படித்து உலக அறிவை வளர்த்துக் கொண் டிருக்கிறார். ஆங்கில நூல்களையும் அவர் விரும்பிப் படித்திருக்கிறார். தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் பலர், தங்களது நூலை காம ராஜருக்கு அன்பளிப்பாகத் தந்து, அவரிடம் தங்களுக்குள்ள அன்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த வகையில் காமராஜரிடம் சேர்ந்துள்ள நூல்கள் எண்ணற்றவை. அவை எல்லாம் சென்னை திருமலைப்பிள்ளை தெருவில் உள்ள காமராஜர் நினைவு இல்லத்தை அலங்கரிக்கின்றன. தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் கவிஞர் கண்ணதாசன், ஜெயகாந்தன், கா. திரவியம் ஆகியோரின் எழுத்துக்கள் இங்கே இடம் பெற்றிருக் கின்றன.

அருமைத் தலைவர்
அவர்களுக்கு அன்பளிப்பு
அண்ணாதுரை
2 3 65

பெருந்தலைவர்
காமராஜர் அவர்களுக்கு,
த. ஜெயகாந்தன்
15/73



என் தலைவர்
உயர்திரு. கு. காமராஜ்
அவர்களுக்கு.
பணிவுடன்
கா. திரவியம்
17.9.74



# காந்தி நெறிக் காவலன்

**நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**

காந்திமகான் நன்னெறிக்குக் காவ லாளன்
    களைத்தவர்கள் குறைதீர்க்கும் ஏவ லாளன்
ஓய்ந்திருத்தல் அறியாமல் உழைக்கும் வல்லோன்
    ஒன்னார்க்கும் தீங்குவரச் சகியா நல்லோன்
ஆய்ந்துணர்ந்த மெய்யறிவின் சின்ன மாகும்
    ஆசைகளை ஆண்டடக்கும் மன்ன னாகப்
போந்துளநம் முதலமைச்சர் காம ராசன்
    புகழோங்க நெடிதிருக்கப் புரிவான் ஈசன்!

அதிகார போதைகளில் மயங்க மாட்டான்
    அலங்காரப் பகட்டுகளில் முயங்க மாட்டான்
துதிபாடும் இச்சகத்தில் களிக்கமாட்டான்
    சொன்ன சொல்லை ஒருநாளும் அழிக்க மாட்டான்
எதிராளி இருந்தாலும் ஏச மாட்டான்
    ஏழையுடன் உறவாடக் கூச மாட்டான்
பதிபோற்றும் முதலமைச்சர் காம ராசர்
    பல்லாண்டு சுகித்திருக்கக் காக்கும் ஈசன்!

உரமிகுந்த உள்ளத்தான் உண்மை யாளன்
    உற்றவர்க்கும் மற்றவர்க்கும் வண்மை யாளன்
தரமறிந்து உதவிசெய்யும் தன்மை யுள்ளோன்
    தகுதியற்ற பேர்களுக்கும் மென்மை யுள்ளோன்
பரவிஇந்த நாட்டிலுள்ள வறுமை தீரப்
    பகலிரவாய்ப் பாடுபடும் கர்ம வீரன்
விரவுபுகழ் முதலமைச்சர் காம ராசன்
    வெகுகாலம் வாழ்ந்திருக்க அருள்வான் ஈசன்!



# கால்நடை வளர்த்து மேல்நிலை பெறுவோம்!

தன்னிறைவு பெற்ற மாநிலமாகத் தமிழகத்தை மாற்றும் நோக்குடன், வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு அரிய பல ஆக்கப்பூர்வமான கால்நடை பராமரிப்புத் திட்டங்களை அரசு செயற்படுத்தி வருகிறது.

ஆவின வளர்ப்பைப் பொறுத்தவரையில், நம் நாட்டினப் பசுக்களின் தரம் உயர்த்துவதற்குத் தேவையான அயலினக் காளைகளைப் பெருமளவில் கிடைக்கச் செய்வது அத்தியாவசியமாகும். இந்நோக்கை மனத்திற்கொண்டு, உருவாக்கப்பட்டதே தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணையாகும். முதன் முதலாக 1977ல் அடிப்படை இருப்பாக 50 ஜெர்சி இளங்கிடேரிகளும், 2 இளங்காளைகளும் ஆஸ்திரேலியாவிலிருந்து பெறப் பட்டுப் பண்ணை துவக்கப்பட்டது· 1979-ல் பெரும் முயற்சிகளுக்கு பின்னர், மேலும் 100 ஜெர்சி இளங்கிடேரிகள் ஆஸ்திரேலியாவிலிருந்து பெறப்பட்டன. தற்போது இப்பண்ணையில் கால்நடைகளின் இருப்பு 433 ஆக உயர்ந்துள்ளது. இப்பண்ணையில் பிறக்கும் சிறந்த காளைகள் செயற்கைமுறை இனவிருத்திப் பணிக்கென்று மாநிலத்தில் பல பகுதிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

பால் உற்பத்திக்கும், உழைப்புக்கும் ஏற்ற இரட்டைப் பயனுள்ள ஆவினங்களையே நமது விவசாயிகள் பெரிதும் விரும்புகின்றனர். எனவே, இரட்டைப் பயனுள்ள ஓங்கோல் இன மாடுகளைப் பராமரிக்கும் நிலையம் ஒன்று, அடிப்படை இருப்பாக 20 பசுக்கள், 2காளைகளுடன், முதன் முதலாக 1980-இல் ரூ. 1.9 இலட்சம் செலவில் சின்னசேலத்தில் துவக்கப்பட்டுள்ளது. பின் அங்கிருந்து மாற்றி மாதவரம் அரசு பால் மற்றும் புல்பண்ணையில் பராமரிக்கப்படுகிறது. இனவிருத்திக்கான காளைகளும் பசுக்களும் இந்நிலையத்திலிருந்து விநியோகிக்கப்படும். இதன் தற்போதைய இருப்பு 88 ஆக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் செயற்படுத்தப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்குவதற்குத் தேவையான கறவைப் பசுக்களின் தேவையை இப்போதுள்ள ஏழு மாவட்டக் கால்நடைப் பண்ணைகளினால் மட்டும் பூர்த்தி செய்ய இயலவில்லை. ஆகவே, இவ்விடர்ப்பாட்டைக் களையும் நோக்குடன் இரண்டு 'கிடேரி உற்பத்தி நிலையங்கள்' முறையே புதுக்கோட்டையிலும், உதகமண்டலத்திலும் முதன் முதலாக 1980-ல் நிறுவப்பட்டுள்ளன. இந்நிலையங்களின் மூலம் இளம் பசுக்கன்றுகள் வாங்கப்பட்டு, பருவம் எய்தும் வரை பராமரிக்கப்பட்டு சிறந்த உயர் ரகக் காளைகளுடன் கருத்தரிப்பு செய்யப்பட்டு கன்று ஈன்றவுடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

கால்நடை பராமரிப்பின் அதி முக்கியப் பணியான செயற்கை முறைக் கருவூட்டல் முறையில் தற்போது உலகெங்கும் பின்பற்றப்படும் முன்னேற்ற முறை திரவ விந்திற்குப் பதிலாக உறைவிந்து முறையைப் பின்பற்றுவதாகும்.

தமிழகத்திலும் இம்முறையை பின்பற்றிப் பெருமளவில் அளிக்கும் நோக்குடன், முதல் முதலில் 1977-ல் ரூ. 38.81 இலட்சம் செலவில், ஈச்சங்கோட்டையிலுள்ள பண்ணையில் டென்மார்க் அரசின் உதவியுடன் உறைவிந்து வங்கி தோற்றுவிக்கப்பட்டது.

பின்னர் 1979ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தி

லுள்ள அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்டக்கால்நடை பண்ணையில் ரூ. 14.45 இலட்சம் செலவில் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து நிலையம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் இம்முறை 1979-80-ஆம் ஆண்டு முதற்கொண்டு வெற்றிகரமாகக் கையாளப்பட்டு வருகிறது. இது தவிர, 1982-83ஆம் ஆண்டில் மற்றுமொரு உறைவிந்துத் திட்டம் ரூ. 117.31 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே அதிகமான ஆடுகளைக் கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். ஆடுகளைச் சீரிய முறையில் பேணி, இறைச்சி உற்பத்தியை அதிகரிப்போமேயானால், வருங்காலங்களில் ஆட்டிறைச்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் அந்நியச் செலாவணியை அதிகரிக்கச் செய்யலாம் என்பது திண்ணம். இறைச்சி உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் குடற்புழுக்கள் நீக்கத் திட்டமொன்று முதன் முதலாக 1979-80-ல் திருச்சி, புதுக்கோட்டை மற்றும் செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் துவக்கப்பட்டது.

ஆடு வளர்ப்பில் இலாபம் பெற வேண்டுமானால், ஆட்டினப் பராமரிப்பிலுள்ள பாரம்பரிய முறைகளை மாற்றி, நவீன முறைகளைப் புகுத்த வேண்டுவதும் இன்றியமையாததாகும். இதன் பொருட்டு, தரமுள்ள கிடாக்கள் வழங்கப்படுகின்றன. வேலையற்ற கிராமப் புற இளைஞர்களுக்கு ஆடு பராமரிப்பில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 1981-82-ஆம் ஆண்டில் 400 இளைஞர்கள் பயிற்சி பெற்றனர். இவ்வாண்டு 4,900 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 1971-72-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஆடு வளர்ப்பு கூட்டுறவு முறையில் வளர்ச்சி பெற்று வருகிறது. இது தவிர, கால்நடை சிறப்புத் திட்டங்களின் கீழ் எண்ணிறந்த ஆடு வளர்ப்பு அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. 1976-77-இல் தமிழகத்தில் 142கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டன. 131 ஆடு வளர்ப்பு அலகுகள் வழங்கப்பட்டன. தற்போது 1376 சங்கங்களாக உயர்ந்துள்ளதுடன் 1976-77-லிருந்து 85-86 வரை 19,210 ஆடு வளர்ப்பு அலகுகள்மூலம் 40,34,10 ஆடுகள் விநியோகிக்கப்பட்டு வெற்றிகரமாக விவசாயிகளால் ஆடு வளர்ப்புத் தொழில் செய்யப்படுகிறது. இதற்கென 1976-77-லிருந்து 85-86 வரை 208.65 இலட்சம் ரூபாய் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக்கால்நடைப்பண்ணையில் வெள்ளாடு வளர்ப்பு நிலையமொன்று முதல் முதலாக 1980-81-ல் ரூ. 15.98 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் சிறந்த பால் இனமான தென்னிச்சேரி ஆடுகள் பராமரிக்கப்படுகின்றன. இது தவிர சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையில் பால் மற்றும் இறைச்சிக்குப் பெயர் பெற்ற சிறந்த இனமான ஜமுனாபாரி ஆடுகள் பாராமரிக்கப்படுகின்றன.

அதிக அளவில் வெள்ளாடு வளர்ப்பை நம்பியுள்ள இராமேஸ்வரம் தீவிலுள்ள தங்கச்சிமடம் பகுதியில் உள்ள மக்களுக்கு உதவி செய்யும் நோக்குடன், 1982-83-ல் புதிய திட்டமொன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஆடு வளர்ப்போர் 50 பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 50 சதம் மானிய விலையில் நபர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஜமுனாபாரி கிடா வழங்கப்படுகிறது.

கோழி வளர்ப்பு தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக வேரூன்றியுள்ளது. கோழியின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகள், கோழியின அபிவிருத்திக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் 2 குஞ்சுபொரிக்கும் நிலையங்கள் மற்றும் 29 கேந்திர கிராம நிலையங்கள் மூலம் இனவிருத்திக்கான முட்டைகளும், கோழிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஒன்று பெரியார் மாவட்டத்தில்உள்ள ஈரோட்டில் ரூ. 3.18 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது.

கோழிவளர்ப்பைக் கூட்டுறவு முறையில் முன்னேற்றும் பொருட்டு 151 சங்கங்கள் நிறுவப்பட்டு தற்போது 18 செயல்முறையில் சங்க அங்கத்தினர்களுக்குப் போதிய வசதிகள் செய்து தரப்படுகின்றன.

பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி போன்ற முக்கிய கால்நடை விளை பொருட்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கும்படியான திட்டமொன்று 1977-ல் தமிழகத்தில் முதல்முதலாகத்தோற்றுவிக்கப்பட்டது. மேற் கண்ட



ஆய்வின்படி முட்டை உற்பத்தி 1977-ஆம் ஆண்டில் இருந்ததை காட்டிலும் தற்போது 1985-86-ல் 300 சதம் உயர்ந்துள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது கோழி வளர்ப்பில் தமிழகம் கண்டுள்ள பெரும் முன்னேற்றத்தையே தெளிவு படுத்துகிறது.

குறைந்த காலத்தில் நிறைந்த வருவாய் அளிப்பது பன்றிப் பராமரிப்பே ஆகும். 1982-ல் வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக 125 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆளுக்கு ஒரு யார்க்ஷையர் பன்றி வழங்கப்பட்டது.

1980-81-ல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ரூ. 32 ஆயிரம் செலவில் 40 பன்றி வளர்ப்பு அலகுகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றில் பன்றிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேலும் 1982ல் சிறப்புக் கால்நடைத் திட்டத்தின் கீழ் முதன் முதலாக மதுரை மற்றும் வட ஆர்க்காடு மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றுக்கு, 25 வீதம், ஒவ்வொரு அலகிலும் 3 பன்றிகள் கொண்ட 50 அலகுகள் மானிய உதவியுடன் விநியோகிக்கப் பட்டுள்ளன. இதுவரை மொத்தம் 200 அலகுகள் மான்ய உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன. 'இத்திட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதமும் (ரூ. 1,125) குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு 33 1/3 சதவீதமும் (ரூ.1500) மானியமாக அளிக்கப்படுகிறது. இதுவரை ரூ. 3.065 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

ஆவினத் திட்டங்கள் அனைத்தின் வெற்றியும் தீவனப்பயிர் உற்பத்தியையே சார்ந்துள்ளது. எனவே, தீவனப் பயிர் உற்பத்திக்கான மூலவளத்தை மேம்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. 1975-ம் ஆண்டு தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையங்கள் இரண்டு இயங்கிவந்தன. தற்போது 8 நிலையங்கள் தீவனப் பயிர் உற்பத்தியை அதிகரிக்க உதவுகின்றன.

பல்வேறு வகையான நோய்களிலிருந்து கால்நடைகளைக் காப்பதன் மூலமே அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்ய முடியும். எனவே தடுப்பு



மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

1971-72-ல் ஒரே ஒரு பிரதம மருத்துவ நிலையம மட்டுமே சென்னையிலுள்ள சைதாப்பேட்டையில் இயங்கி வந்தது. இதன் எண்ணிக்கை 1977-78-ல் 6 ஆகவும், தற்சமயம் 22 ஆகவும் உயர்ந்து தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. இப்பிரதம மருத்துவ நிலையங்களில் நோய் ஆய்வுக் கூடம், அறுவைச் சிகிச்சைக் கூடம் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கால்நடை மருத்துவ வசதி அளிப்பதற்கு 1976-77-ல் 630 கால்நடை நிலையங்கள் இயங்கின. மேலும் 1977-78 லிருந்து ஆண்டு தோறும் அதிக மருந்தகங்கள் திறக்கப்பட்டு, 1985-86-ல் 782 நிலையங்களாக உயர்ந்து செயல்படுகின்றன.

கால்நடை நோய்ப் புலனாய்வு நிலையங்கள் முதன் முதலாக 1977-78ஆம் ஆண்டில் மதுரை, திருநெல்வேலி, வேலூர் ஆகிய மூன்று இடங்களில் நிறுவப்பட்டன. மேலும் 3 நிலையங்கள் 1978-79-ஆம் ஆண்டிலும், மற்றும் 1979-80ல் திருச்சி, சிவகங்கை ஆகிய இரண்டு இடங்களிலும் நிறுவப்பட்டன. தற்போது மொத்தம் 11 நிலையங்கள் உள்ளன. இந்நிலையங்களின் முக்கியப் பணி, நடமாடும் ஆய்வுக் கூடத்தின் உதவியோடு கால்நடைகளின் சாணம், சிறுநீர், ரத்தம் போன்றவைகளை எடுத்து, சோதனை செய்து என்னென்ன வியாதிகள், எங்கெங்கு உள்ளன என்பதைக் கண்டுபிடித்து, அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.

மேலும் தமிழகத்தில் எந்தெந்தக் காலத்துல் எந்தெந்த நோய்கள் வருகின்றன என்பதையும் தயாரித்து விவசாயிகளுக்கும் தொழில் நுட்ப அலுவலர்களுக்கும் முன்னறிவிப்பு தரப்படுகிறது. இதன் மூலம் நோய்க் கிளர்ச்சித் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டு, மக்களுக்கு கால்நடை மூலம் ஏற்படும் இழப்பு தவிர்க்கப்படுகிறது. இதன் பயனாக தமிழகத்திற்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் மிச்சப்படுகிறது. இந்தியாவிலேயே இம்மாதிரி நிலையங்கள் தமிழகத்தில்தான் முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அயலின மற்றும் கலப்பினப் பசுக்களில் ஏற்படும் கோமாரி நோய் தடுப்புக்கான பணிகள் முதன் முறையாக 1980-81ஆம் ஆண்டில் ரூ. 7.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

## கால்நடை சிறப்புத் திட்டங்கள்

மத்திய அரசின் உதவியுடன் கால்நடை பராமரிப்புத்துறை சிறப்பு உற்பத்தித் திட்டங்கள் தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட மாவட்டங்களில் செயல் படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலமாக சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், நிலமற்ற விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோர் பெரிதும் பயன்பெற்று வருகின்றனர்.

கால்நடை சிறப்புத் திட்டத்தின் கீழ் கலப்பினக் கன்று வளர்ப்பில் சேலம், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, கோயமுத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 1977-78-ஆம் ஆண்டு முதற்கொண்டு 1985-86-ஆம் ஆண்டு

முடிய 40803 விவசாயிகளுக்கு கன்று வளர்ப்பு மானியம். தீவனச் செலவிற்காக வழங்கப் பட்டுள்ளது. 487.99 இலட்சம் 9 ஆண்டுகளில் உதவப்பட் டுள்ளது.

ஆடு வளர்ப்புத் திட்டம்

கால்நடை பராமரிப்புத் துறையினரால் சேலம், வட ஆர்க்காடு மற்றும் திருநெல் வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத் திட்டத்தின்கீழ் 1976-77முதற் கொண்டு 1985-86 ஆண்டு முடிய 19210 விவசாயிகளுக்கு 20 செம்மறியாடுகளும்1 ஆட்டுக் கிடாவும் கொண்ட செம்மறி யாட்டுப் பிரிவுகளை ஏற்படுத் திக் கொடுத்துள்ளது. மானியம் ரூ. 208.65 இலட்சம் அளிக்கப் பட்டுள்ளது.

கோழி வளர்ப்புத் திட்டம், சேலம், வட ஆர்க்காடு, மதுரை மற்றும் செங்கற்பட்டு மாவட் டங்களில் கோழியின அபிவிருத்தி நிறுவனத்தாரால் செயற் படுத்தப்படுகின்றது. இத் திட்டத்தின் மூலம் 1977-78-ஆம் ஆண்டு முதல் கொண்டு 1985-86 முடிய 3098 விவ சாயிகளுக்கு முட்டையிடும் 100 கோழிகள் கொண்ட கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட் டுள்ளன. மானியம் ரூ. 85.27 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

பன்றி வளர்ப்புத் திட்டம் 1981-82-ஆம் ஆண்டில் செயல் படுத்தப்பட்டது. அவ்வாண்டில் 50 விவசாயிகளுக்குப் பன்றிப் பிரிவுகள் அமைத்துக் கொடுக் கப்பட்டுள்ளன. 1985-86ஆம் ஆண்டுவரை 200 பன்றிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு ரூ. 3.06 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களிலும் 74-75-ஆம் ஆண்டுமுதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இராம நாதபுரம் மாவட்டத்தில் 1001 கறவைப் பசுக்களும் 502 ஆட்டு அலகுகளும் வழங்கப்பட்டுள் ளன. இதுபோலவேதொடர்ந்து செயல்பட்டு தற்போது 9ஆண்டு களில் இராமநாதபுரம் மாவட் டத்தில் விவசாயிகளுக்கு 6696 கறவைப் பசுக்களும் 2068 ஆடு அலகுகளும் வழங்கப்பட்டுள் ளன. 1870 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் 281 கறவைப் பசுக்களும், 2124 ஆட்டு அலகுகளும் 19 கோழி அலகுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் வட ஆர்க்காடு, தென் னார்க்காடு, சேலம் மற்றும் திருச்சி மாவட்டங்களில்செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இது 1976-77ஆம் ஆண்டு முதற் கொண்டு 1985-86 முடிய 2699 கறவைப் பசுக்கள் வழங்கி யும் 4068 உழவு மாடுகள் வழங்கியும் 6019 செம்மறி யாட்டுப் பிரிவுகள் 910 கோழி வளர்ப்புப் பிரிவுகள் மற்றும் 358 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தியும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் கோவை, மதுரை, இராமநாதபுரம், திரு நெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி யிலும், அதைச் சார்ந்த சில வட்டாரங்களிலும் செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத் தின் கீழ் 1976-77லிருந்து 1985-86 வரை 3470 கிடேரி கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கு ஆகும் தீவனச் செல வினத்திற்காக சிறு விவசாயிகள், மிகச்சிறுவிவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு மானியம் ரூ. 39.05 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. இந்த மான்யம் சிறு விவசாயிகளுக்கு 50 சத வீதமும் மிகச் சிறு விவசாயி களுக்கும், விவசாயத் தொழி லாளர்களுக்கும் 66 2/3 சத வீதமும் ஆகும்.

**பால் உற்பத்தி**

| | | | |
|---|---|---|---|
| 1977-78-ல் | 1679.03 | மில்லியன் | கிலோ |
| 1978-79-ல் | 1726.58 | ,, | ,, |
| 1979-80-ல் | 1860.07 | ,, | ,, |
| 1980-81-ல் | 1737.93 | ,, | ,, |
| 1981-82-ல் | 1885.45 | ,, | ,, |
| 1982-83-ல் | 1788.42 | ,, | ,, |
| 1983-84-ல் | 2561.58 | ,, | ,, |
| 1984-85-ல் | 2846.13 | ,, | ,, |
| 1985-86-ல் | 3047.00 | ,, | ,, |

**முட்டை உற்பத்தி**

| | | |
|---|---|---|
| 1977-78 | 681.91 | மில்லியன் |
| 1978-79 | 782.05 | ,, |
| 1979-80 | 852.95 | ,, |
| 1980-81 | 734.75 | ,, |
| 1981-82 | 917.13 | ,, |
| 1982-83 | 898.18 | ,, |
| 1983-84 | 996.02 | ,, |
| 1984-85 | 1063.95 | ,, |
| 1985-86 | 2067.06 | ,, |

**இறைச்சி உற்பத்தி**

| | | | |
|---|---|---|---|
| 1977-78 | 31.64 | மில்லியன் | கிலோ |
| 1978-79 | 29.79 | ,, | ,, |
| 1979-80 | 25.31 | ,, | ,, |
| 1980-81 | 24.09 | ,, | ,, |
| 1981-82 | 27.20 | ,, | ,, |
| 1982-83 | 27.57 | ,, | ,, |
| 1983-84 | 31.53 | ,, | ,, |
| 1984-85 | 31.31 | ,, | ,, |
| 1985-86 | 28.33 | ,, | ,, |

**கால்நடை மருத்துவ நிலையங்கள்**

| | |
|---|---|
| 1977-78 | 633 |
| 1978-79 | 647 |
| 1979-80 | 659 |
| 1980-81 | 671 |
| 1981-82 | 693 |
| 1982-83 | 722 |
| 1983-84 | 748 |
| 1984-85 | 772 |
| 1985-86 | 782 |

**ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| 1978-79 | 350 |
| 1979-80 | 350 |
| 1980-81 | 587 |
| 1981-82 | 714 |
| 1982-83 | 787 |
| 1983-84 | 1015 |
| 1984-85 | 1148 |
| 1985-86 | 1376 |

**கன்று பிறப்பு**

| | | |
|---|---|---|
| 1977-78 | 1.10 | இலட்சம் |
| 1978-79 | 1.32 | ,, |
| 1979-80 | 1.44 | ,, |
| 1980-81 | 1.55 | ,, |
| 1981-82 | 2.25 | ,, |
| 1982-83 | 2.11 | ,, |
| 1983-84 | 4.72 | ,, |
| 1984-85 | 4.25 | ,, |
| 1985-86 | 4.45 | ,, |




பால் பண்ணைக் கழகம் மற்றும் இந்தியப் பால் பண்ணைக் கழகத்தின் நிதி உதவியுடன் ரூ. 56.89 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப் பட்டு வருகின்றது. எஞ்சியுள்ள 5 மாவட்டங்களான இராமநாதபுரம், பசும்பொன் முத்து ராமலிங்கம், காமராஜர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு உதவியுடன் பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒருங்கிணைந்த வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், இவைகளை ஒன்றாக இணைத்து மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமும் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் சேகரிக்கப்படுகின்ற பால், பால் சேகரிக்கும் வண்டிகளின் மூலமாக அண்மையில் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்கள் அல்லது பால் பதனம் செய்யப்படுகின்ற ஆலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. உள்ளூர் பால் விற்பனை மூலமாக அந்தந்தப் பகுதித் தேவைகள் முழுவதுமாகப் பூர்த்தி செய்யப்பட்டு, மீதமாகிய பால் இணையத்திற்குக் கொண்டு வரப்பட்டு நகர விற்பனைக்கும், பால்பொடி, வெண்ணெய், நெய்

# பால் பெருக்குத் திட்டம்

பால் உற்பத்தியைப் பெருக்குவதும், உற்பத்தியாளர்களுக்கு இலாபகரமான விலையை அளிப்பதும், நகர்ப்புறங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்குத் தரமான பாலை நியாயமான விலையில் வழங்குவதும் பால் பெருக்குத் திட்டங்களின் அடிப்படையில் கொள்கைகள் ஆகும். இந்த அடிப்படையில் இந்திய அரசு பால் பண்ணைத் தொழிலைத் தீவிர முறையில் அபிவிருத்தி செய்வதற்குத் தேசிய அளவிலான பால் பெருக்குத் திட்டம் ஒன்றை அமைத்து,அனைத்து மாநிலங்களிலும் செயல் படுத்துவதற்கு நிதி உதவி வழங்கியது.

இதனடிப்படையில் நமது மாநிலத்தில் பால் பெருக்குத் திட்டம் 1972ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 9 மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டது.(1 செங்கற்பட்டு, 2. வடார்க்காடு, 3. தென் ஆர்க்காடு, 4. தர்மபுரி, 5. சேலம், 6. பெரியார், 7. கோயம்புத்தூர், 8. நீலகிரி, 9. மதுரை) இத்திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூ. 15.62 கோடி செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்டம் 1982 மார்ச் மாதத்தில் முடிவடைந்தது.

இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல் படுத்தும் வகையில் 1982-ஆம் ஆண்டு பால் பெருக்குத் திட்டம் (2ஆம் நிலை) ரூ.42.87 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் 13 மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம், தேசிய



போன்ற பால் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி, உயர்ரகக் கால்நடை அபிவிருத்தி, கால்நடை தீவனம் அளித்தல், போன்ற பால் உற்பத்திக்கான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

நமது மாநிலத்தில் பால் பெருக்குத் திட்டம் செயல்படத் தொடங்கியபின் பால் பண்ணைத் தொழில் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது. குறிப்பாகக் கடந்த 9 ஆண்டுகளில் இத்தொழிலில் அடைந்துள்ள முன்னேற்றம் மற்ற மாநிலங்களின் முன்னோடியாக அமைந்துள்ளது.

கால்நடை மருத்துவத் திட்டத்தில் உயர்ரகக் காளைகளின் விந்துகளிலிருந்து உயர்ரகக் கறவை மாடுகளை உருவாக்கி வளர்ப்பது ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. வெகு தூரத்திலுள்ள கிராமங்களுக்கு உயர்ரகக் காளைகளின் உறைவிந்தை எடுத்துச் சென்று கலப்பின உயர்ரகக் கால்நடை வளர்ச்சி காண்பது இன்று தமிழகமெங்கும் ஒரு நடைமுறை சாத்தியமாகிவிட்டது. இரண்டாவது பால் பெருக்குத் திட்டங்கள் செயல்படும் 13 மாவட்டங்களில் 1,727 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணி நடந்து வருகின்றது.



### 1977-78க்குப் பிறகு நிறுவப்பட்ட பால் பதனிடும் ஆலைகள் மற்றும் குளிரூட்டும் நிலையங்கள்

| ஆண்டு | பதன ஆலைகள் | கொள்ளளவு (லட்சம் லிட். நாளொன்றுக்கு) | முதலீடு (லட்சத்தில்) | குளிரூட்டும் நிலையங்கள் | கொள்ளளவு (லட்சம் லிட். நாளொன்றுக்கு) | முதலீடு (லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| 1977-78 | ... | ... | ... | தர்மபுரி | 0.40 | 13.50 |
| | | | | திண்டுக்கல் | 0.20 | 11.50 |
| | | | | அச்சரப்பாக்கம் | 0.10 | 8.43 |
| | | | | தேனி | 0.10 | 5.70 |
| 1978-79 | ... | ... | ... | சுல்தான்பேட்டை | 0.20 | 13.12 |
| | | | | பரமத்தி வேலூர் | 0.50 | 18.17 |
| | | | | வாழைத்தோட்டம் | 0.04 | 5.00 |
| | | | | கடலூர் | 0.04 | 7.00 |
| 1980-81 | கொடைக்கானல் | 0.10 | 15.00 | ... | ... | ... |
| 1981-82 | ஈரோடு | 1.50 | 369.00 | சின்னசேலம் | 0.30 | 10.00 |
| | | | | விழுப்புரம் | 0.30 | 10.00 |
| | | | | ஆம்பூர் | 0.30 | 10.00 |
| 1982-83 | ... | ... | ... | சங்கராண்டான் பாளையம் | 0.30 | 30.00 |
| | | | | சத்தியமங்கலம் | 0.30 | 30.00 |
| 1983-84 | கிருஷ்ணகிரி | 1.00 | 350.00 | திருவண்ணாமலை | 0.30 | 10.00 |
| | சேலம் | 1.00 | 355.50 | சேத்தியாதோப்பு | 0.10 | 13.00 |
| | | | | ஆத்தூர் | 0.50 | 41.50 |
| 1984-85 | ... | ... | ... | மார்த்தாண்டம் | 0.04 | 3.65 |
| 1985-86 | ஊட்டி | 0.50 | 300.00 | திருவள்ளூர் | 0.50 | 62.00 |
| | திருநெல்வேலி | 0.50 | 160.00 | அனக்காவூர் | 0.30 | 35.00 |
| | | | | புதுக்கோட்டை | 0.10 | 19.00 |

**சென்னை நகரில் பால் பொருட்களின் விற்பனை**

| பொருட்கள் | 1980-81 | 1984-85 | 1985-86 |
|---|---|---|---|
| வெண்ணெய் (டன்களில்) | 583 | 885 | 970.80 |
| நெய் (டன்களில்) | 108 | 72 | 145.67 |
| கொழுப்பு நீக்கப்பட்ட பால் பொடி (டன்களில்) | 65 | 576 | 552.46 |

**பால் விற்பனை செய்யும் அமைப்புகள் வளர்ச்சி**

| | 1980—81 | 1984—85 | 1985—86 |
|---|---|---|---|
| பால் விற்பனை நிலையங்கள் | 454 | 498 | 516 |
| பாலகங்கள் | 47 | 52 | 53 |
| தானியங்கி நிலையங்கள் | 14 | 27 | 70 |

**பால் பொருட்கள் உற்பத்தி (டன்களில்)**

| ஆண்டு | வெண்ணெய் | நெய் | பால்பொடி |
|---|---|---|---|
| 1977—78 | 1,086.0 | 337.8 | 850.4 |
| 1980—81 | 1,177.4 | 500.6 | 767.0 |
| 1984—85 | 3,767.0 | 1.157.0 | 3,490.0 |
| 1985—86 | 4,432.0 | 2,824.0 | 4,745.0 |

**பால் பண்ணைத் தொழில் வளர்ச்சிக்குச் செலவிடப்பட்டுள்ள நிதி விவரம்**

| 1977—78 முதல் 1979—80 வரை | 1980—81 முதல் 1985—86 வரை (ரூ. இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|
| 1.240.68 | 3,679.65 | 4,920.33 |

இன்றைய தினம் பால் பெருக்குத் திட்டங்களின் கீழ் வாரத்திற்கு ஒருமுறை கால்நடை மருத்துவர் கிராமங்களுக்கு நேரில் சென்று பார்க்கிறார். இதன்படி கால்நடை மருத்துவ வசதி விவசாயிகளின் வீட்டு வாசற் படிக்கே வந்துவிட்டது. இதுதவிர அவசர கால்நடை மருத்துவ உதவும் சங்க உறுப்பினர்களுக்கு நாள் முழுவதும் கிடைக்க வசதியுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 91 கால்நடை மருத்துவ அமைப்புகள் உள்ளன. (பால் பெருக்குத் திட்டம் செயல்படும் 13 மாவட்டங்களில் 85 கால்நடை மருத்துவ அமைப்புகளும், இதர 5 மாவட்டங்களில் 6 கால்நடை மருத்துவ அமைப்புகளும் உள்ளன) இதில் 29 அவசர அமைப்புகளாகவும் மற்றவை நடமாடும் அமைப்புகளாகவும் உள்ளன.

1985-86ஆம் ஆண்டு 7,54,980 கால்நடைகள் மருத்துவ வசதி அமைப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. அத்துடன், 4,58,032 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

| | 1977-78 | 1985-86 |
|---|---|---|
| மருத்துவக் கவனிப்பில் உள்ள கால்நடைகள் | 3,75,420 | 7,54,980 |
| மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்ட கால் நடைகள் | 1,78,179 | 4,58,032 |

**பால் குளிரூட்டுதலும் பதனப்படுத்துதலும்:**

கறந்த பாலின் வெப்ப நிலை 85° பாரன்கீட் ஆக உள்ளது. இந்த நிலையில் பாலை அதே நிலையில் சிறிது நேரத்திற்குத்தான் வைக்க முடியும். நுகர்வோருக்கு நல்ல நிலையில் பால் வழங்க, முதலில் குளிரூட்டு நிலையங்களில் பால் குளிர வைக்கப்படுகிறது. பிறகு ஆலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பதனப்படுத்தப்படுகிறது.

ஆவின் என்பது சென்னை நகரில் எல்லா இல்லங்களிலும் தெரிந்த பெயராகும். பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை பன்மடங்கு பெருகியுள்ளது. தரத்திற்காகவும் நியாய விலைக்காகவும் ஆவின் வெண்ணெய் சென்னையில் பெரிதும் விரும்பி வாங்கப்படுகிறது. ஆவின் பால் பொடியும் பெரிய நகரச் சந்தையில் நல்ல விற்பனையைப் பெற்றுள்ளது.

யோகாட் மற்றும் லஸ்ஸி கோடைக் காலத்தில் சிறப்பான ஆவின் பொருட்களாகும். அவை அப்போது மிக அதிக அளவில் விற்பனையாகின்றன.

சென்னை நகரெங்கும் 516 பால் விற்பனை நிலையங்கள், 53 ஆவின் பாலகங்கள், 70 ஆவின் தானியங்கி நிலையங்கள் உள்ளன. 31.12.1985-ஆம் நாள் நிலவரப்படி சென்னை நகரில் 6,00,000க்கு மேல் நுகர்வோர்கள் உள்ளனர்.



# தமிழ்நாட்டில் நூலகப் பணி

**1977 முதல், பத்தாண்டுக்காலத்தில் நூலக வளர்ச்சி விவரம்**

நூலகங்கள்: மாநில அளவில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை 1455 லிருந்து 1531க்கு வளர்ந்துள்ளது.

நூல்கள்: நூல் இருப்பு 61.09 இலட்சத்திலிருந்து 108.67 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது.

வாசகர்கள்: வாசகர்களின் வருகை 296.75 இலட்சத்திலிருந்து 334.98 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

உறுப்பினர்கள்: உறுப்பினர்களின் எண்ணிக்கை 6.78 இலட்சத்திலிருந்து 10.70 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

பணிகள்: உறுப்பினர்களுக்கு வழங்கிய நூல்களின் எண்ணிக்கை 64.34 இலட்சத்திலிருந்து 117.82 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

நவீன வசதிகளுடன் நூலகக் கட்டடங்கள் அமைத்துத்தரும் தீவிரத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் சென்னை நகரில் 6 வட்டார நூலகங்களும் 16 கிளை நூலகங்களும் கட்டப்பட்டுள்ளன. மேலும் 2 வட்டார நூலகங்களும் 18 கிளை நூலகங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

1980ல் திருச்சி மாவட்டத்தில் ரூ.33 லட்சம் மதிப்பீட்டில் பலமாடிக்கட்டடம் ஒன்றும் மேலும் 1982-ல் குளித்தலைபீமநகர் மற்றும் அரியலூர் ஆகிய மூன்று இடங்களில் கிளை நூலகங்களும் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று 1980ல் ரூ. 34 இலட்சம் மதிப்பீட்டிலும், மற்றொன்று 1984ல் 32 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் மூன்று கிளை நூலகங்கள் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் சமீபத்தில் இரண்டு புதிய கிளை நூலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.

வடார்க்காடு மாவட்டத்தில் 3 கிளை நூலகங்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு கிளை நூலகங்களும் மதுரை, தஞ்சாவூர், செங்கற்பட்டு, பெரியார் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒவ்வொரு கிளை நூலகமும் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட மாவட்டங்களில் கிளை நூலகக் கட்டடப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மதுரை 4, செங்கல்பட்டு 3, வடார்க்காடு 4, நீலகிரி 1, தஞ்சாவூர் 2, புதுக்கோட்டை 4.

நல்ல தரமான பயன்பாடு உள்ள நூல்கள் நூல் தேர்வாணைக் குழுவின் மூலம் அனைத்து மாவட்டங்களுக்குமாகப் பொது நூலக இயக்கத்தில் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் 1984-85ஆம் ஆண்டில் சுமார் ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள நூல்களும் 1985-86ல் ரூ. 75 இலட்சம் மதிப்புள்ள நூல்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்டு ஒன்றுக்கு நலிந்த நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதற்குத் தொடர்மானியமாக 1984-85ஆம் ஆண்டு முதல் ரூ. 11 இலட்சம் வழங்கப்படுகிறது.

இராஜாராம் மோகன்ராய் நூலக அறக் கட்டளையின் கீழ் ரூபாய் எட்டு இலட்சம் 1985-86ஆம் ஆண்டில் பெறப்பட்டு மொத்தம் பதினாறு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.





# மீன் வளம்

கடலோர மீனவர்களுக்கு மீன்பிடிப்பு இல்லாத காலங்களில் உதவி செய்யும் வகையில் ''மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்'' 1982-83-ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மீனவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர் ஒவ்வொருவரிடமிருந்தும் மாதம் ரூ. 10 வீதம் 9 மாதங்களுக்கு வசூலிக்கப்படுகிறது. வசூலிக்கப்பட்ட ரூ. 90 உடன் அரசின் சமபங்கான ரூ. 90ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ. 180 மீன் பிடிப்பு இல்லாத 3 மாதங்களுக்கு மாதம் ரூ. 60 வீதம் மீனவர்களுக்குத் திருப்பி வழங்கப்படுகிறது. இதுவரை 20,913 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பயனடைந்துள்ளார்கள்.

பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் ஒன்றான ''மீனவர் காப்புறுதித் திட்டம்'' தமிழக அரசால் 1-1-84 முதல் அமல் படுத்தப்படுகிறது. இதற்காக இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட மீனவர்கள் செலுத்த வேண்டிய ஆண்டு பிரிமியம் ரூ. 12-ம் மாநில அரசும் மத்திய அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின் கீழ் விபத்தில் உயிரிழக்கும் மீனவர் குடும்பத்திற்கு ரூ. 15,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அதேபோன்று முழுவதும் தொழில் செய்ய இயலாது ஊனமுற்றோருக்கும் அதே தொகை வழங்கப்படுகிறது. அதே சமயம் ஒரு கண் பார்வை இழப்பு, ஒரு கால் இழப்பு அல்லது ஒரு கை இழப்பு ஆகிய பாதிப்புகளுக்கு உள்ளான மீனவருக்கு ரூ. 7500 உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 1,16,264 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை 143 மீனவ குடும்பங்கள் இதனால் பயனடைந்துள்ளன.

இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழக்கும் மீனவர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக உதவித் தொகை வழங்க வசதியாக ரூ. 50,000 இருப்புடன் கூடிய சுழல் நிதி 1985-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இச்சுழல் நிதியிலிருந்து இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழக்கும் மீனவர் குடும்பத்தினருக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலம் ரூ. 2,000 உதவித் தொகை வழங்கப்படும். காயமடைந்த மீனவருக்கு உதவித் தொகையாக ரூ. 500 வழங்கப்படும்.

1977-78ஆம் ஆண்டு முதல் 1984-85-ஆம் ஆண்டு வரை 7,713 வீடுகள் கடல் மீனவர்களுக்குக் கட்டித் தர அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வீடுகள் ஒவ்வொன்றும் 207 மற்றும் 237 சதுர அடியில் ரூ. 9,460 மற்றும் ரூ. 9,850 செலவில் கட்டி மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வீடுகளில் வலைகளை வைத்துக் கொள்ளவும், சமையல் செய்யவும் இட வசதிகுறைவாக இருந்ததால் 248 சதுர அடி பரப்பில் கூடுதல் வசதியுடன் கூடிய வீடுகள் புதிதாக வடிவமைக்கப்பட்டு ஒவ்வொன்றும் ரூ. 16,000 செலவில் 300 வீடுகள் கட்ட அரசு 1985-86ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், இச்சங்கம், அந்த வட்டத்தின் பேரிலேயே இருக்க வேண்டும் என்றும் அரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெருமளவில் நிதியுதவி அளிக்கப்படுவதால், இக்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படும் முறையைச் சீர்படுத்தி மேம்பாடு செய்தல் அவசியமாகும். சங்கங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்தி அவைகள் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம், வணிக வங்கிகள், இன்னும் பிற நிதி நிறுவனங்களின் உதவியுடன்

பெரிய மீன்பிடி திட்டங்களைச்செயல்படுத்த உதவியாக அவைகளுக்கு 1983-84-ஆம் ஆண்டு முதல் 1985-86-ஆம் ஆண்டு வரை 200 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு எழுத்தர் நியமிக்க நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பல கூட்டுறவுச் சங்கங்கள் தேவையான நிதிவசதி இல்லாமல் நலிவுற்று இருக்கின்றன. மேலும் மீன் விற்பனை மற்றும் மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்கள் வாங்கி மீனவர்களுக்கு வழங்க அவைகளிடம் போதுமான முதலீடு இல்லை. எனவே மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் குறையைப் போக்க 1984-85 முதல் 1985-86 வரை 65 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 9.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மீனவ மகளிர் முன்னேற்றத்திற்காக ஒரு முன்னோடித் திட்டம் 1981-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, அத்திட்டம் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க அமைப்புகளின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. மீன் விற்பனை செய்யக் கடனுதவி, சேமிப்பு, வலைப்பின்னுதல், தையல், கைத்தொழில், நியாய விலைக் கடைகள் நடத்துதல், மலிவு விலையில் கட்டுப்பாடான துணிகளை விற்பனை செய்தல், பாலர் பள்ளி ஆரம்பித்தல் ஆகிய பணிகள் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மீனவ கிராமங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. தற்பொழுது 32 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக மதுரை மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களிலுள்ள பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறைக்குச் சொந்தமான பெரிய, சிறிய நீர்ப்பாசன ஏரிகளில் தீவிர மீன்வளர்ப்பு மற்றும் மீன் பிடிப்புத் திட்டம் 1984-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி தென்னார்க்காடு மாவட்டத்தில் 20,000 எக்டேர் பரப்பிலும் மதுரை மாவட்டத்தில் 10,000 எக்டேர் பரப்பிலும் தரமான அதிக அளவிலான மீன்குஞ்சுகள் இத்துறையே இருப்புச் செய்து, அந்தந்தப் பகுதிகளில் அமைந்துள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களைக் கொண்டு மீன்பிடிப்புச் செய்து, பிடிக்கப்படும் மீனை மீன்துறையும் மீனவர் சங்கங்களும் சமமான அளவில் பகிர்ந்து கொள்கின்றன.

கூட்டின மீன்வளர்ப்பு மூலம் எக்டேர் ஒன்றுக்கு 1,000 கிலோ மீன் உற்பத்தியை அடைய பஞ்சாயத்து மற்றும் இதர துறைகளுக்குச் சொந்தமான குளங்கள் மற்றும் ஏரிகள் நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் எடுத்துக் கொண்டு மீன்வளர்ப்போருக்கு 10 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்படுகின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்த 1977-78 முதல் 1985-86 வரை 11 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டு அவைகளின் மூலம் 2745.083 எக்டேர் பரப்புள்ள 2,768 குளங்கள் 3,159 மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரவு நேரங்களில் மீன்பிடி படகுகள் பாதுகாப்பாகக் கரைக்கு வந்துசேர வழிகாட்டி விளக்குகள் உதவி புரிகின்றன. 1979-80-ஆம் ஆண்டிலிருந்து 1985-86-ஆம் ஆண்டு வரை 47 கிராமங்களில் இவ்விளக்குகள் அமைத்துத்தர அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

சிறு மீனவர்கள் தங்களுடைய நாட்டுப்படகுகள் மற்றும் கட்டுமரங்களின் மீன்பிடி திறனை அதிகரித்துத் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள, இப் படகுகளுக்கு உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் 20





சதவீதம் மானியத்துடன் 1981-82 முதல் 1986-87 வரை 327 இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

விசைப்படகுகளின் விலை வெகுவாக அதிகரித்துவிட்ட தால், அவைகளுக்குப் பதி லாகக் கண்ணாடி இழைப் படகுகள் உபயோகிப்பது நல மெனக் கருதப்பட்டது. இதன் படி இதுவரை 49 கண்ணாடி இழைப்படகுகள் 20 சதவீதம் மானியத்துடன்15மீனவர் கூட்டு றவுச் சங்கங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

நாட்டுக் கலங்கள், கட்டு மரங்கள், வள்ளங்கள் இவற் றின் மீன்பிடி திறன் மிகவும் குறைவு. எனவே இவை களுக்கு மாற்றாக ஒரு கலனை உருவாக்கும் அவசியம் உணரப் பட்டது. சென்னையிலுள்ள வங்காள விரிகுடாத் திட்ட அலுவலகம் பல்வேறு சோதனை களை நடத்தி, முடிவாகக் கட்டு மரம் போன்ற நாட்டுப்படகு களைப் போல் அவைகளைக் கடந்து செல்லக்கூடிய கரை யேற்றும் படகினை வடிவ மைத்து வெற்றிகரமாகச் சோதித்துள்ளது. இப்புதிய படகினை மீனவர்களுக்கு அறி முகப்படுத்தும் நோக்குடன் 1985-86-ல் 45 சதவீதக் கடன் மற்றும் 50 சதவீதம் மான்யத் துடன் இரண்டு மீனவர் கூட்டு றவுச் சங்கங்களுக்கு 15 கரை




யேறும கலன்கள் வழங்க அரசு ஒப்புதல் தந்துள்ளது.

நாட்டுப்படகு மீனவர்களின் நலனுக்காக ஆண்டுதோறும் ரூ. 8 இலட்சம் மதிப்பில் கடன் மற்றும் மான்ய அடிப்படை யில் நைலான் நூல் விநியோக மும் இத்துறை மூலம் செய்யப் பட்டு வருகின்றது.

## தன்னிறைவுத் திட்டம்

தன்னிறைவுத் திட்டம் இந்தியாவில் தமிழ்நாடு அரசால் மட்டுமே செயற்படுத்தப்படுகிற திட்டம். குடிநீர், சாலைகள், கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளைக் கிராமங்களில் ஏற்படுத்திக் கொடுக்காமல், வளர்ச்சித் திட்டங்களின் முழுப் பயனை எய்தமுடியாது என்ற எண்ணத்தின் அடிப் படையில்தான் தமிழக முதல்வர் அவர்களால் தன்னிறைவுத் திட்டம் உருவாக்கப்பட்டது. 1980-ல் தொடங்கி 3 ஆண்டுக்குள், தமிழகத்தின் எல்லா கிராமப் பகுதிகளுக்கும் ஏறத்தாழ 215 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.





# தொழிலாளர் நலன் காப்போம்

**தொ**ழிலாளர் நலன் கருதி, தமிழ்நாடு அரசு தொழிலாளத் தோழர்களுக்கு அளித்துள்ள சலுகைகள் அளவற்றவைகளாகும்.

'காண்பதெலாம் தொழிலாளி
செய்தான்-அவன்
காணத் தகுந்தது வறுமையோ?
பூணத் தகுந்தது பொறுமையோ?'

—என்று மனங்குமுறிப் பாடினார் பாவேந்தர் பாரதிதாசனார்.

அந்த நிலை நீங்கிட இந்த அரசு ஒன்பதாண்டுக் காலமாக ஓய்வின்றி ஆற்றிவரும் உன்னதப் பணிகள் எண்ணியெண்ணி மகிழத்தக்கவைகளாகும்.

அதுபற்றிய விவரங்களின் தொகுப்பே இந்தக் கட்டுரை.

தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு விசாரணையில் இருக்கும் பணியாளர்களுக்குத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள கால அளவிற்குக் கீழ்க் கண்ட அளவில் வாழ்க்கைப்படி வழங்க-நிர்வாகங்களைப் பொறுப்பேற்கத் தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம் 1981 வழிவகை செய்கிறது.

முதல் 90 நாட்களுக்கு: சம்பளத்தில் 50 சதவிகிதம்.

91 முதல் 180 நாட்கள் வரை: சம்பளத்தில் 75 சதவிகிதம்.

180 நாட்களுக்கு மேல்: முழுச்சம்பளம்.

இச்சட்டம் 1-1-1982 முதல் அமல்படுத்தப்படுகிறது.

24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ச்சியாகப் பணி புரிந்த எந்தத் தொழிலாளியின் பணியினையும் நிரந்தரமாக்கச் சட்டம் வழிவகை செய்கிறது. தொழிலாளியினால் அல்லது பணியில் ஏற்படும் எந்தத் தொடர்ச்சியின்மையையும் நிரந்தரம் செய்வதற்காகக் கணக்கில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற நிபந்தனை இச்சட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இதனால், எந்த நிர்வாகமும் தொழிலாளர்களைப் பணியிலிருந்து விலக்கி, அதனால் பணித் தொடர்ச்சி இல்லாமல் செய்ய முடியாது.

இச்சட்டம் 1-1-1982 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டம் தற்போது 20 மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் (வேலை முறைமற்றும் இதர வகைகள்) சட்டம் 1981 தொழிலாளர் - தொழிலதிபர் உறவு, ஊதியம் வழங்குவதற்கான விதிமுறைகள், தொடர்ச்சியாகப் பணி, சுகாதாரம் மற்றும் இதர நலன்களை அளிக்க வழிவகை செய்கிறது. அமைப்பிற்குட்படாத அதிக எண்ணிக்கையுள்ள இவ்வகைத் தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு சட்டம் ஏற்படுத்துவது இந்தியாவிலேயே இதுதான் முதல்முறை ஆகும்.

12-3-1982 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட இச்சட்டம் உயர்நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டு இருந்தது. ஆனால் தற்போது இத்தடை நீக்கப்பட்டு இச்சட்டம் அமல்படுத்தப்படுகிறது.

தொழில் தகராறு சட்டம், பிரிவு 10-பி-யின் கீழ் அரசு தொழிற் தகராறுகளைத்தொழில் நீதிமன்றங்களின் தீர்ப்பிற்காக விடும்போது தொழில் அமைதி காத்தல், சட்டம் ஒழுங்குமுறை மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் தொடர்ந்த விநியோகம் ஆகியவற்றை ஏற்படுத்த அதாவது இச்சமயங்களில் தொழிலா

ளர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும், தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கவும், மற்றும் பொதுப்பயன் பணிகளில்(பப்ளிக் யூடிலிட்டி சர்வீஸ்) ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளை மூடாமலிருக்கவும் ஆணைகள் பிறப்பிக்கவும் அரசுக்குச் சில பிரத்தியேகமான அதிகாரங்கள் தேவைப்படுகின்றன. இக்கருத்தை மனத்தில் கொண்டு இவ்வரசு தொழில் தகராறு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இச்சட்டம் 15-8-1982 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982-என்கிற இச்சட்டம் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களாகிய உடலுழைப்புத் தொழிலாளர்களின் வேலை மற்றும் இதர பணி நிலைமைகளை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

கட்டடம் கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பணி நிலைமைகள், வேலை முறைப்படுத்துதல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவைகளை அளிக்க இவ்வரசு ஒரு சட்டம் இயற்றியுள்ளது. இச்சட்டம் விரைவில் அமல்படுத்தப்படும்.

1965-ஆம் ஆண்டு சிறப்பூதியச் (போனஸ்) சட்டம் 1-க்கு மேல் 19-க்குள்ளாக ஆட்களை வேலைக்கு அமர்த்தும் தொழிற்சாலைகள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

எல்லாத் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழும் தொழிலாளர் துறை அலுவலர்கள், தொழில் வழக்கு மன்றங்கள், தொழில் தீர்ப்பு மன்றங்கள் முன்பாகத் தொழிலாளியினாலோ அவரின் சார்பிலோ தரப்படும் மனுக்களுக்கு முத்திரைக் கட்டண விலக்களிக்கப்படுகிறது.

தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு தயாரிக்கும் நிறுவனங்கள், கடைகள், நிறுவனங்கள் முதலியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களில் இதுவரை அவர்கள் மேற்கண்ட நிறுவனங்களில் பணியாற்றிய காலம், அல்லது பெற்ற ஊதியம் பற்றிய எந்தவிதச் சான்றும் அவர்கள் கைவசம் இல்லாதிருந்தது. அதனால் அவர்களால் சட்டப்படிப் பெற வேண்டிய சலுகைகளைப் பெற இயலாமல் இருந்து வந்தது. இந்த நிலைமையை மாற்றும் வகையில் இந்த அரசு அந்தத் தொழிலாளர்களுக்கு மேற்படி நிறுவனங்கள் (பணிச்சீட்டு/நேர அட்டை) சர்வீஸ் கார்டு/டைம் கார்டு கட்டாயமாக வழங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் மாநில அரசு சம்பந்தப்பட்ட அட்டவணையிலுள்ள வேலைகளுக்கும், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் விதிகளை அரசு தற்போது நீட்டித்துள்ளது. இதன் பலனாக இந்த நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களும், தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள் பெற உரிமை பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தினைத் திருத்தியதன் மூலம், தற்சமயம் இச்சட்டத்தினை 5 நபர்கள் மற்றும் அதற்கு மேல் பணியாற்றும் உணவு விடுதிகள் மற்றும் கடைகள் நிறுவனங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் திருத்தச் சட்டம், தொழிலாளர்கள் மற்றும் தொழிலதிபர்களின் சந்தாவினை முறையே ரூ. 1 லிருந்து ரூ. 2 ஆகவும், ரூ. 2-லிருந்து ரூ. 4 ஆகவும் உயர்த்த வழி வகை செய்துள்ளது. இது தவிர அரசுத் தரப்பிலும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 2 சந்தா அளிக்க வகை செய்கிறது. இத் திருத்தச் சட்டம் 15.9.82 முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகளின் பெயர்ப் பலகைகள் தமிழிலும் எழுதப்பட வேண்டும் என்பதற்காக, இவ்வரசு 1948-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவன விதிகள் மற்றும் 1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு உணவு விடுதிகள் ஆகியவற்றில் ஏற்கெனவே திருத்தங்கள் கொண்டு வந்துள்ளது. எனினும் தமிழ்மொழிக்கு மேலும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று இவ்வரசு விரும்பியதால் 1948-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடைகள் நிறுவன விதிகள் (விதி 15) மற்றும் 1959ம் ஆண்டின் தமிழ்நாடு உணவு விடுதிகள் விதிகள் (விதி 42 பி) ஆகியவற்றில் தக்க திருத்தங்கள்கொண்டு வந்துள்ளது. இதன்படி இம் மாநிலத்திலுள்ள கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகளின் பெயர்ப் பலகைகளில் பெயர்கள் தமிழ் மொழியில் முதலிலும், மற்றும் இதர மொழிகளை விடப் பெரிய அளவிலும் மேலும் சீர்திருத்தத் தமிழிலும் எழுதப்பட வேண்டும்.

சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டத்தின் கீழ் நிர்வாகத்தினருக்கும் தொழிற் சங்கத்தினருக்கும் சிறப்புப் பரிசு



களை வழங்குவதன் மூலம் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த தொழில் உறவைப் பராமரிக்கவும், அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் ஊக்குவிப்பதற்காக 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு சிறந்ததொரு நடவடிக்கை எடுத்தது. பரிசு பெறுவதற்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்க ஒய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் இயங்கி வரும் குழு பரிசு பெறும் நிர்வாகத்தினரையும், தொழிற்சங்கங்களையும் தேர்ந்தெடுக்கிறது. இத்திட்டத்தின் கீழ் முதல் பரிசாக ஒரு சுழற் கேடயமும் மற்றொரு நிரந்தரக் கேடயமும், மற்றும் 2 ஆம் பரிசாகச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

**பொறியியற் கல்லூரிகள் பெருகி உள்ளன**

1977-78 முடிய தொழில்நுட்பக் கல்வித்துறையின் கீழ் இருந்த

| | |
|---|---|
| பொறியியற் கல்லூரிகள் | 6 |
| தற்போதுள்ளவை (1985-86) .. | 30 |
| பாலிடெக்னிக்குகள் முன்பு | 38 |
| தற்போது .. | 128 |

### முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளித்தல் (1977 முதல் 1986 மார்ச் வரை)

தொழில் தகராறுகளுக்குத் தீர்வு காணப்பட்டதோடு மட்டுமல்லாமல் தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் விளைவாகத் தொழிலாளர்கள் அடையும் துயரைப் போக்க அரசு கீழ்க் காணும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளித்துள்ளது.

1. சேலத்திலுள்ள சௌத் இந்தியா கிளாஸ் அண்டு எனாமல் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த 330 நிரந்தரத் தொழிலாளர்களுக்கு தலா ரூ. 100 வீதம் 1-10-77 அன்று வழங்கப்பட்டது.

2. குரோம்பேட்டையிலுள்ள குரோம் லெதர் தொழிற்சாலையைச் சேர்ந்த 390 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

3. 14-1-80 அன்று சென்னையிலுள்ள பைலட் பேனா கம்பெனியைச் சேர்ந்த 218 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

4. 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னை பாலு கார்மெண்ட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 275 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

5. 1981-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னையிலுள்ள கேன்ஜஸ் பிரிண்டிங் இங்க் தொழிற்சாலையைச் சேர்ந்த 78 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

6. சென்னையிலுள்ள பி & சி மில் நிறுவனத்தைச் சேர்ந்த 13,000 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வீதம் வழங்க ரூ. 26 இலட்சம் அளிக்கப்பட்டது. இத்தொகைதொழிலாளர்களுக்கு 6-5-81 அன்று வழங்கப்பட்டது. தொழிலாளர்களின் நலனுக்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இவ்வளவு தொகை வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

**1982**

7. கோவையிலுள்ள ஜோதி மில்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 707 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

8. கோயம்புத்தூரிலுள்ள ஜெயலட்சுமி மில்ஸ் நிறுவனம் நிதி பற்றாக்குறை காரணமாக அக்டோபர் 1981-ல் மூடப்பட்டது. இந்நிறுவனம் கடந்த 8-9-82 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. இந்நிறுவனத்தைச் சேர்ந்த 675 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

**1983**

9. சென்னையிலுள்ள டிரான்ஸ்பார்மர் ஸ்விட்ச்கீர் லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த 220 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 250 வழங்கப்பட்டது.

10. திருப்பூரிலுள்ள ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 1400 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 500 வழங்கப்பட்டது.

11. நீலகிரியில் அருவங்காட்டிலுள்ள கார்டைட் பேக்டரியில் பணிபுரியும் 7 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 1,000 வீதம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

**1984**

12. கோவையில் உள்ள ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட்டில் உள்ள 604 தொழிலாளர்களுக்கு ரூ.200 வழங்கப்பட்டது.

13. கோவை ஆண்டிப்புதூரிலுள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸில் பணிபுரியும் 250 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

14. கோவை மாவட்ட காளப்பட்டியிலுள்ள பத்மா மில்ஸ் தொழிற் சாலையில் பணிபுரிந்த 150 தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

**1985**

15. கோவையிலுள்ள ஸ்ரீ ஹரி மில்ஸ் தொழிற்சாலையில் பணிபுரிந்த 657 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

**1986**

16. கோவை மாவட்டத்திலுள்ள வசந்தா மில்ஸ் தொழிற்சாலையில் பணிபுரிந்த 1351 தொழிலாளர்களுக்கு ரூ. 200 உதவிப் பணம் அளிக்க (அரசு ஆணை எண். 565 நாள் 12-3-86,ன் படி) அரசு உத்தரவிட்டது.

17. கோவை மாவட்டத்திலுள்ள இராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற நிர்வாகத்தில் பணிபுரிந்த 400 தொழிலாளர்களுக்கு ரூ. 200 வீதம் உதவி வழங்கப்பட்டது.

18. இந்தியா போர்ஜ் ட்ராப் ஸ்டாம்பிங்க்ஸ் லிமிடெட், சென்னை என்ற தொழிற்சாலையில் பணிபுரிந்த சுமார் 490 தொழிலாளர்களுக்கு ரூ. 200 வீதம் வழங்க அரசு ஆணை எண் 6, நாள் 3-1-86-ன் படி அரசு உத்தரவிட்டபடி தொழிலாளர்கட்குப் பணம் வழங்கப்பட்டது.

### 1-7-1977-க்குப் பின், குறைந்த பட்ச ஊதியத்தின் கீழ் இவ்வரசு அளித்த சலுகைகள்

1. இவ்வரசு பதவி ஏற்றபின் (1977க்குப் பின்) புதியதாக

குறைந்த பட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்க்கப் பட்ட தொழில்கள்—14

2. இவ்வரசு பதவி ஏற்றபின் குறைந்தபட்ச ஊதியம் முதன் முதலாக நிர்ணயிக்கப்பட்ட தொழில்கள்—17

3. இவ்வரசு பதவி ஏற்றபின் குறைந்தபட்ச ஊதியம் திருத்தி அமைக்கப் பெற்ற தொழில் கள்—33

நெசவாளர்களுக்கான் விபத்து உதவித் திட்டத்தைப் போன்று, தீப்பெட்டித் தொழிற்சாலை களில் பணி புரியும் 14 வயது முதல் 65 வயது வரையுள்ள தொழிலாளர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் இவ்வரசு ஒரு விபத்துதவித் திட்டத்தை அறிவித்துள்ளது. தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தின் காரணமாக இறந்தாலோ, உடலுறுப்புக்கள் அல்லது கண் பார்வை இழக்க நேரிட்டாலோ, உதவித் தொகை கிடைக்க இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டம் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியின் உதவியுடன் அமல்படுத்தப் படுகிறது.

இத்திட்டம் முதலில், தீப் பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகள் அதிகமுள்ள காமராசர் மாவட்டத்தில் அமல் படுத்தப்படும். இதில் 14 முதல் 65 வயது வரையிலுள்ள தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேரலாம். இத்திட்டத்திற்கான சந்தாத் தொகை ஒரு நபருக்கு ஒரு வருடத்திற்கு 7 ரூபாயாகும். இன்ஷூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தி, அதனைப் பின்னர் தொழிலாளரின் போனஸ்/சம்பளத்தில் பிடித்தம் செய்து கொள்வார்.

இத்திட்டத்தின்படி தொழிலாளர்கள் விபத்தில் இறக்க நேரிட்டாலும், நிரந்தர ஊன முற்றாலும் ரூ. 16,000 உதவித் தொகையாகக் கிடைக்கும். நிரந்தர ஊனமில்லாத மற்ற விபத்துகளுக்கு, ஊனத்தைப் பொறுத்து உதவித் தொகை கிடைக்கும்.

இத்திட்டத்தை அமல் செய்வதில் சிவகாசி தொழிற்சாலை துணைத் தலைமை ஆய்வர் முக்கியப் பங்காற்றுவார்.

## நெசவாளர்களுக்கு இன்ஷூரன்ஸ், விபத்து உதவித் திட்டம்

நெசவாளர்களுக்கு இன்ஷூரன்ஸ் இணைந்த பணி ஓய்வுத் திட்டம் ஒன்றையும், விபத்து உதவித் திட்டம் ஒன்றையும் இவ்வரசு அறிவித்துள்ளது.

தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை நெசவாளர்களுக்கும் இன்ஷூரன்ஸ் இணைந்த பணி ஓய்வுச் சலுகைத் திட்டம் பொருந்தும்.

இதன்படி உறுப்பினராகப் பெயரைப்பதிவுசெய்துகொண்ட ஒரு நெசவாளி தனது 58-வது வயது வரை மாதம் ரூ. 10 செலுத்தி வரவேண்டும். 58 வயது முடிவில் அந்த உறுப்பினர் செலுத்திய மொத்தத் தொகை, அதற்குண்டான வட்டி எல்லாம் சேர்த்து 33 ஆயிரத்து 500 ரூபாய் பெறுவார்.

இடையில் அந்த உறுப்பினர் இறந்து போனால் அவர் வாரிசுக்கு ரூ. 5 ஆயிரமும் அந்த உறுப்பினர் இறக்கும் வரை கட்டிய தொகையையும் வட்டியும் சேர்த்து வழங்கப்படும்.

தனியார் துறை நெசவாளர்களுக்கு விபத்து உதவித் திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறது.

இதன்படி நெசவாளர், பணியில் இருக்கும்போது விபத்தில் இறந்துவிட்டாலோ, உடல் உறுப்புக்களை இழந்து விட்டாலோ அவருக்கோ அவர் வாரிசுக்கோ ரூ 10 ஆயிரம் நஷ்டஈடாகத் தரப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இந்தத் திட்டங்களுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் வேறு எந்த மாநிலங்களிலும் நிறைவேற்றப் படாத புதுமையான திட்டங் களாகும்.

## ஆயுள் காப்புறுதி, பணி ஓய்வு நல சிறப்புத் திட்டம்

சிறிய ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், சுமை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், கைவண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி திருத்துபவர்கள் ஆகியோரை இதற்கென தொடங்கப்பட்ட சிறப்புத் திட்டத்தில் சேர்த்து, அவர்களிடமிருந்து திங்கள் தோறும் சிறு சந்தாத் தொகையை வசூலிப்பதன் மூலம் அவர்களுக்கு ஆயுள் காப்புறுதியும் பணி ஓய்வுப் பலன்களும் கிடைக்கச் செய்யும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1984-ஆம் ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது அறிவித்த மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றுள் ஒன்றாகும். இதன் படி, ஆயுள் காப்புறுதி பணி ஓய்வு நலச் சிறப்புத் திட்டத்தை அரசு அனுமதித்தது.



இம்மாநிலத்தில் 18 வயது முதல் 58 வயது வரையுள்ள உழவுத் தொழிலாளர்கள், சிறு, ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள, கிராமக் கைவினைஞர்கள், சுமை ஏற்றியிறக்கும் தொழிலாளர்கள், கை வண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி திருத்துபவர்கள், லாரி ஓட்டுநர்கள், லாரி துடைப்பவர்கள், டாக்சி ஓட்டுபவர்கள், ஆட்டோ ஓட்டுபவர்கள், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள், காய்கறிகள், பழங்கள் உப்பு முதலியவற்றை விற்பவர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர்.

இத்திட்டத்தில் சேர விரும்புவோர் திங்கள் தோறும் 10 ரூபாய் வீதம் அவர்கள் 58 வயது அடையும் வரை செலுத்த வேண்டும். இத்திட்டம், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப் படும். உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்குப் பிரிமியத் தொகையாக 45 ரூபாயை ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் செலுத்துவர். ஒருவர் இறக்க நேர்ந்தால், தொழிலாளரின் நேமகதாரருக்கு ஆயுள் ஈட்டுறுதி கழகம் 5,000 ரூபாய் வழங்கும். அதனுடன் அவ்வுறுப்பினர் செலுத்திய தொகையைப் பொறுத்து சரகம் ஓரளவு தொகையை வழங்கும்.

58 வயது முடிந்தவுடன் அவர் தொகை செலுத்திய கால அளவிற்கேற்ப, பணி ஓய்வுப் பலனாக அவ்வுறுப்பினருக்குத் தொகை வழங்கபபடும். 10 ஆண்டுகள் தொகை செலுத்திய உறுப்பினர் 1,200 ரூபாயும், 20 ஆண்டுகளுக்கு 4,300 ரூபா

யும், 25 ஆண்டுகளுக்கு 7,400 ரூபாயும், 30 ஆண்டுகளுக்கு 12,400 ரூபாயும், 35 ஆண்டுகளுக்கு 20,400 ரூபாயும், 40 ஆண்டுகளுக்கு 33,500 ரூபாயும் பெறுவார்.

இத்திட்டத்தில் சேர்ந்த பின்னர் இறந்துவிட்ட 215 பேருக்கும் அதிகமானவர்களுக்கு ஈட்டுறுதித் தொகை 5,000 ரூபாயை இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் இதுவரை வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்குப் பொதுமக்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிட்டியுள்ளது.

**விபத்து நிவாரணத் திட்டம்**

இத்திட்டம் உழவுத் தொழிலாளர்கள், சிறு - ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோருக்கான "விபத்து நிவாரணத் திட்டம்" எனப் பெயர் பெறும். நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள் 2.5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருக்கும் சிறு-ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோர் தொழிலில் ஈடுபட்டிருக்கையில் விபத்துக் காரணமாக உயிரையோ அல்லது கை-கால்களையோ இழக்க நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**மூடப்பட்ட நிர்வாகங்கள் அரசின் உதவியால் திறக்கப்பட்ட விவரங்கள்**

13-8-74 அன்று மூடப்பட்ட 765 தொழிலாளர்கள் பணியாற்றி வந்த இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்நிறுவனத்தை8-12-77ல் திறப்பதற்கு இந்த அரசு வழி வகை செய்தது.

1-1-73-ல் மூடப்பட்ட - 192 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்த அம்பத்தூர் நான்கோ ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் லிமிடெட், கோயமுத்தூர் நிறுவனம் இந்த அரசின் முயற்சியினால் 20-12-77 அன்று திறக்கப்பட்டது.

10-4-76 அன்று மூடப்பட்ட-110 நபர்களுக்கு வேலை வாய்ப்பளித்த கோயமுத்தூர் காளாபட்டி பத்மா மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தை 10-1-79 அன்று திறப்பதற்கு இவ்வரசு வழிவகை செய்தது.

கோவை லோட்டஸ் மில்ஸ் லிமிடெட் 22-7-76 அன்று மூடப்பட்டது. 804 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துவரும் இந்த ஆலை 2-2-78-ல் திறக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்தது.

முத்தனேந்தல் சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் நிறுவனம் 30-7-76 அன்று மூடப்பட்டது. 200 பேர் வேலை பார்த்து வரும் இந்த நிறுவனத்தை 6-12-77 அன்று திறப்பதற்கு அரசு ஆவன செய்தது.

திருப்பூர் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் 25-10-75 அன்று மூடப்பட்டது. 101 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ள இந்நிறுவனம் 20-2-78 அன்று



திறக்கப்படுவதற்கு இந்த அரசு வழிவகை செய்தது.

125 பேருக்கு வேலை வாய்ப்புத் தந்த 20-11-76அன்று மூடப்பட்ட - மதுரை ராஜா மில்ஸ் லிமிடெட் நிறுவனம் 19-5-78 அன்று திறக்கப்படுவதற்கு இந்த அரசு ஆவன செய்தது.

10-12-76 அன்று மூடப்பட்ட 330 தொழிலாளர்களுக்குவேலை வாய்ப்பளித்த சேலம் சௌத் இந்தியா கிளாஸ் மற்றும் எனாமல் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனம் 24-9-79 அன்று திறக்கப்படுவதற்கு இந்த அரசு ஆவன செய்தது.

140 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திருநெல்வேலி சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் 18-2-77 அன்று மூடப்பட்டது. இது 13-12-77 அன்று திறக்கப்படுவதற்கு அரசு வழிவகை செய்தது.

349 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் கோவை பிரகாஷ் மில்ஸ் லிமிடெட் நிறுவனம் 13-5-77ல் மூடப்பட்டது. இந்நிறுவனம் 28-12-77 அன்று திறக்கப்படுவதற்கு இவ்வரசு ஆவன செய்தது.

250 தொழிலாளர்க்கு வேலை அளித்துவரும் சென்னை ஃபௌண்டரி மற்றும் என்ஜினியரிங் லிமிடெட் நிறுவனம் 23-5-77-ல் மூடப்பட்டது. அது 1978 பிப்ரவரியில் திறக்கப்படுவதற்கு இந்த அரசு வழிவகை செய்தது.

13 ஆயிரம் தொழிலாளர்க்கு வேலைவாய்ப்பு நல்குவதும் புகழ் பெற்றதுமான சென்னை பி & சி ஆலை 1-1-81-ல் மூடப்பட்டது. இந்த ஆலை 19-6-81 அன்று திறக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்தது.

675 பேருக்கு வேலைதரும் கோவை ஜெயலட்சுமி மில்ஸ் 16-10-81-ல் மூடப்பட்டது. இதனை 8-9-82-ல் திறப்பதற்கு அரசு உதவி செய்துள்ளது.

220 பேருக்கு வேலைதரும் சென்னை டிரான்ஸ்பார்மர் ஸ்விட்ச்கீர் லிமிடெட் நிறுவனம் 1-4-82-ல் மூடப்பட்டது. இதனை 18-11-83-ல் திறப்பதற்கு அரசு வழிவகை செய்தது.

1400 பேர் பணியாற்றும் திருப்பூர் ஸ்ரீராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட் நிறுவனம் 25-7-82-ல் மூடப்பட்டது. 15-12-83-ல் இது திறக்கப்படுவதற்கு அரசு வழிவகைசெய்தது.

452 பேர் பணியாற்றும் குடியாத்தம் திருமகள் மில்ஸ் 14-10-82-ல் மூடப்பட்டது. 15-7-85-ல் இது திறக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்தது.

24-1-84 அன்று மூடப்பட்ட-120 பேருக்கு வேலை தந்த கோவை, மீனா எக்யூப்மெண்ட்ஸ் நிறுவனம் 16-5-84-ல் திறக்கப்படுவதற்கு இந்த அரசு ஆவன செய்தது.





# வனத்துறையின் வளம்

நம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காடுகளைப் பெரும்பாலும் மலையும் மலை சார்ந்த இடங்களிலும் பரக்கக் காணலாம். இந்நிலப்பகுதி குறிஞ்சி எனப்படும்.

கடந்த ஒன்பதாண்டுகளில் வனத்துறை ஈட்டியுள்ள மொத்த வரவு 153.78 கோடி ரூபாயாகும். 1977-78-ல் கிடைத்த வருவாய் ரூ. 10.52 கோடி. அது 1985-86-ல் ரூ. 25.98 கோடியாக உயர்ந்துள்ளது.

பல்வேறு காடு வளர் திட்டங்களும், சமூகக் காடுகள் தோட்டங்களும், பல மேம்பாட்டுத் திட்டங்களும் காடுகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக, கடந்த ஒன்பதாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அரசுச் செலவு உயர்ந்துள்ளது. காடுகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக 1977-78-ல் ரூ. 8.03 கோடி செலவு செய்யப்பட்டது. 1985-86-ல் ரூ. 28.60 கோடி செலவு செய்யப்பட்டது.

திட்டப் பணிகளுக்கென இந்த ஒன்பதாண்டுக் காலத்தில் ரூ.106.16 கோடி மொத்தமாகச் செலவிடப் பட்டது. இதில் மாநில அரசின் திட்டங்களுக்கென மட்டும் ரூ. 89.85 கோடி ரூபாயும் மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் ரூ. 16.12 கோடி ரூபாயும் செலவிடப்பட்டது.

இயற்கை வளமான காடுகள் மேம்பாட்டுக்கு இவ்வரசு மேற்கொண்ட பல்வேறு திட்டப் பணிகளின் விவரம் வருமாறு :

**வனப்பரப்பும் வன வளப் பாதுகாப்பும் :**

தமிழ்நாட்டில் காடுகளின் பரப்பு 22.31 இலட்சம் எக்டேராகும். இதில் காப்பு வனம் 18.30 இலட்சம் எக்டேர். 3.40 இலட்சம் எக்டேர் காப்பு நிலம்; ஊரகப்படுத்தப்படாத காடுகள் 0.61 இலட்சம் எக்டேர். காடுகளின் பரப்பை மிகுதிப்படுத்தும் நோக்கோடு வனப் பகுதிகளுக்கு வெளியே உள்ள - அரசுக்குச் சொந்தமான - புறம்போக்கு நிலங்களிலும், ஊராட்சி நிலங்களிலும், குளக்கரைகள், தேசிய நெடுஞ்சாலைகளிலும், சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ், பெருமளவில் மரங்கள் வளர்க்கப் பட்டுள்ளன.

வனக் குற்றங்களைக் கண்டு பிடித்துக் குற்றவாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதையே முழுநேரப் பணியாகக் கொண்டு செயல்படும் பொருட்டு வனப் பாதுகாப்புப் படைகள் பல நிறுவப்பட்டன. தற்போது வனக் குற்றங்களைக் கண்டுபிடிக்க வனப் பாதுகாப்புப் படைகள் பல நிறுவப் பட்டுள்ளன. சோதனைச் சாவடிகள் 89 நிறுவப்பட்டன.

பாதுகாப்பு நடவடிக்கைக்கெனத் துப்பாக்கிகள், ஜீப்புகள் மற்றும் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

1979 ஜூலைத் திங்கள் வரை, வனத்துறையில் நான்கு வன எல்லைப் பிரிவு வட்டங்களே (Territorial Circles) இருந்து வந்தன. சரியானபடி முழுமையான கவனத்துடன் நிருவகிக்கப்பட வேண்டியதன் இன்றியமையாமை கருதி மேலும் மூன்று வன எல்லைப்பிரிவு வட்டங்கள் திருநெல்வேலி வட்டம்,

வேலூர் வட்டம், நீலகிரி வட்டம் என அமைக்கப்பட்டன.

**சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டம் :**

பல்வேறு திட்டங்களின் கீழ் 1977-78 முதல் 1985-86 வரை ஏறத்தாழ 3.74 இலட்சம் எக்டேர் பரப்பில் தோட்டம் வளர்க்கப்பட்டது. இதில் சமூக நலக் காடுகள் தோட்டமும் அடங்கும். இவ்வாறு ஒன்பது ஆண்டுகளில் தோட்டம் வளர்க்கப்பட்டுள்ளபரப்பு மாநிலத்திலுள்ள காடுகளின் மொத்தப் பரப்பில் ஏறத்தாழ ஆறில் ஒரு பங்காகும். அதாவது சுமார் 17 விழுக்காடு; இவ்வாறு கடந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில் மட்டும் ஆறில் ஒரு மடங்கு காட்டுப் பகுதியினையும், மற்றத் தோட்டப் பகுதிகளையும் தொழில் வள உற்பத்திப் பெருக்கிற்குப் பெரிதும் உதவும் வகையிலும், பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையிலும் நல்ல பலன் தரும் தோட்டப் பகுதிகளாக வளர்க்கப்பட்டது மாபெரும் சாதனையாகும்.

சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் (Swedis International Development Authority) நிதியுதவியுடன் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் 1981-82 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணியில் முதல் கட்டக் கால அளவு 5 ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்தின் முதல் கட்ட மதிப்பீடு ரூ. 45 கோடியாகும். இத்திட்டத்தின் முதல் கட்டம் மேலும் ஓராண்டுக் காலம் 1986-87 முடிய நீட்டிக்கப்பட இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது.



சிதம்பரத்திற்கு அருகிலுள்ள முட்லூரில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் 6-7-86ல் மரக்கன்று நட்டார். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் உடனிருக்கிறார்.

ஏரிநிலங்கள், கிராமத்திலுள்ள காலி நிலங்கள் சாலைக் கடற்கரை, இருப்புப் பாதை ஓர நிலங்கள் போன்ற அரசு மற்றும் ஊராட்சி நிலங்களையும், தனியாரிடம் உள்ள வளம் குன்றிய நிலங்களையும் பயன்படுத்திக் காடுகளும், மரங்களும் வளர்க்கப்படுகின்றன. கிராமப்புற மக்களின் தேவையான விறகு, சிறுமரம், தீவனம், காடுபடு சிறு பொருட்கள் ஆகியவற்றின் தேவையை இது நிறைவு செய்கிறது. இதன் மூலம் ஒரு நிலையான சொத்தினை அரசுக்கு ஏற்படுத்தி, மக்களுக்கு அதன் பலனை வழங்குவது நோக்கமாகும்.

இத்தோட்டங்களும், மரங்களும் சுற்றுப்புறச் சூழ்நிலையை நல்ல முறையில் பாதுகாக்க உதவுவதோடு கிராமப்புற ஏழைமக்களுக்கு, குறிப்பாக நிலமற்றோர்க்கு வேலை வாய்ப்பினையும் நல்கும்.

இத்திட்டத்தின் கீழ், முதல் ஐந்தாண்டுகளில் (1981 - 82- 1985-86) 1,21,629 எக்டேர் பரப்பில் மரம் வளர்ப்புப்பணி நடைபெற்றுள்ளது. இதுதவிர தொடர் தோட்டங்கள் 7602 கிலோ மீட்டரில் வளர்க்கப்பட்டன. 10.38 கோடி மரக் கன்றுகள் பொது மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.



வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மினி ரயில்.

**விளை பொருட்கள்:**

வன விளை பொருள்களில் வனத்துறைக்கு வருவாய் பெற்றுத் தருவதில் சந்தன மரம் எப்போதுமே தனியிடம் பெற்று வந்திருக்கிறது. 1977-ஆம் ஆண்டில் ஒரு டன் சராசரி விலை ரூ. 54,000 வீதம் 750 டன் அறுவடைக்குகந்த சந்தன மரம் விற்றதில் அரசுக்கு வருவாய் 4 கோடி ரூபாய் கிட்டியது. 1985-ஆம் ஆண்டில் சராசரி விலை டன்னுக்கு ரூ. 64,000 வீதம் 2090 டன் சந்தனமரம் விற்றதில் அரசுக்கு வருவாய் 13 கோடி ரூபாய் கிடைத்தது.

**ரப்பர்**

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே

ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையுள்ளது. தமிழக அரசு வனத்துறையின ரால் 1960 முதல் 1980 ஆம் ஆண்டு வரை 4786 எக்டேர் பரப்பளவில் ரப்பர் தோட்டங்கள் அமைக்கப்பட்டு 1-10-84 முதல் தனிக் கழக மாக அரசு ரப்பர்க் கழகமென தமிழக அரசு பொது நிறுவன மாகச் செயல்பட்டு வருகிறது. இத்தோட்டங்களிலிருந்து பெறப்படும் ரப்பர் பால் தரத்தினை உயர்த்துவதற்காக வனத்துறை பல்வேறு நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பழங்குடியினரின் மேம்பாட்டிற்கென, கடந்த ஒன்பது ஆண்டுகளில் 2.60 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

**வனவிலங்குப் பாதுகாப்பு**

வன விலங்குகளைப் பாதுகாக்கும் நோக்கோடு பல்வேறு பணிகளை வனத்துறை மேற்கொண்டு வருகிறது. நமது காடுகளில் அரிய வனவிலங்குகள் பல வாழ்கின்றன. களக்காட்டிலுள்ள சிங்கவால் குரங்கு, முண்டந்துறையிலுள்ள புலிகள், முதுமலையில் யானைகள், வேடந்தாங்கலில் வந்தடையும் பறவை இனங்கள்போன்ற இன்ன பிற இயற்கை அன்னையின் அதிசயப் படைப்புகளைக் காக்கும் சீரிய பணியில் அரசு என்றுமே தனிக்கவனம் செலுத்தி வந்திருக்கிறது. இப்பணிக்காக மைய அரசு தரும் நிதி உதவியினையும் அவ்வப்போது பெற்று வருகிறது.

இப்பணிக்காக மைய, மாநிலத் திட்டங்களின் கீழ், கடந்த ஒன்பதாண்டுகளில் செலவிடப்பட்ட தொகை 8.63 கோடி ரூபாயாகும்.

வன விலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972-ல் வகை செய்யப்பட்டுள்ளபடி, தீவிர நடவடிக்கை எடுத்து வன விலங்குகளைக் காக்கும் பணி செவ்வனே நடைபெற்று வருகிறது.

**அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா**

வண்டலூரில் நவீனமான உயிரியல் பூங்காவினை அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தநவீன பூங்காவினை 140 எக்டேர் பரப்பளவில், 3 கோடி ரூபாய் செலவில் அமைப்பதெனத் திட்டமிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் முதல் கட்டத்தினை 105 இலட்சம் ரூபாய் செலவில் 1979-80ஆம் ஆண்டில் துவக்கி,வேலைகள் செய்து முடிக்கப் பெற்றன. விலங்குகளுக்கு ஏற்றவாறு இயற்கைச் சூழல் கொண்ட பரப்பளவு போதுமானதாக இல்லை. வருங்காலத்தில் பூங்காவினை விரிவுபடுத்துதல், ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தேவையான இடங்கள் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு 510 எக்டேர் பரப்பளவில் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் இப்பூங்காவினை அமைப்பதென மாற்றம் செய்யப்பட்டது.

வன விலங்குகள், குறிப்பாக நீர்யானை, வரிக்குதிரை, சிறுத்தை, ஆப்பிரிக்கசிங்கம், யானை, புள்ளிமான் மற்றும் சில பறவையினங்கள் சென்னை மாநகராட்சி விலங்ககத்திலிருந்து இப்புதிய நவீன பூங்காவிற்கு மாற்றப்பட்டுள்ளன.



பறவையினங்களும், விலங்கினங்களும் காடுகளில் இருந்து பிடிக்கப்பட்டும். மற்றைய விலங்ககங்களிலிருந்துமாற்றுதல் மூலமாகவும், இப்பூங்காவில் சேர்க்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் சுமார் 3.15 இலட்சம் ரூபாய் செலவில் அஸ்ஸாம் மாநிலத்தில் இருந்து ஆண் காண்டாமிருகம் ஒன்று இப்பூங்காவிற்கென வாங்கப்பட்டுள்ளது.

மலேசியா தேசத்து நேகரா என்ற மிருகக் காட்சியகத்திலிருந்து பலவகை மிருகங்களை விலங்கு மாற்று முறையில் வாங்கியுள்ளோம்.

தற்போது 288 மிருகங்கள் ( 45 வகைகள்), 353 பறவைகள் (69 இனங்கள்), மற்றும் 65 ஊர்வன வகையைச் சேர்ந்த பிராணிகள் இப்பூங்காவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விலங்ககம் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவாக அவருடைய பெயரில் 'அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா' என அழைக்கப்பட்டு 24-7-1985 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த ஜனவரி 1986வரை 4.48 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் 1.63 கோடி ரூபாய் செலவு செய்வதென வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மற்ற மாநிலங்களை ஒப்பு நோக்குங்கால், இயற்கை அமைப்பின்படி நமது தமிழகத்தில் வனச் செல்வம் குறைவாகவே உள்ளது. இருப்பினும், இக்குறைவான நிலையினை ஒரு குறையாகக் கருதாமல், நிருவாகச் செயல் திறனில் முழுமூச்சுடன் ஈடுபட்டு, நாட்டின் பொருளாதார மேம்பாடு, சமூகநலம், தொழில் வளம் இவற்றினைக் கருத்திற்கொண்டு மேம்பாட்டு பணிகளை முனைப்புடன் தொடர்ந்து செய்து வருகிறது. இவ்வரசு எடுத்து வரும் நன் முயற்சிகள், கடைப்பிடிக்கும் சீரிய கொள்கைகள் காரணமாக நிறைவேற்றப்படும் மேம்பாட்டுப் பணிகள் மக்களுக்குப் பல நன்மைகள் தந்து வருகின்றன. தொடர்ந்து இதே கொள்கைப் பிடிப்போடு இத்துறை செயல்படும் என உறுதி கொள்வோம்.

மரங்களை வளர்ப்போம்! காடுகளைக் காப்போம்!




# குடும்பநலம்காக்கும் வழிமுறைகள்

குடும்பநலம் காக்க, பிறப்பினைக் கட்டுப்படுத்த, தள்ளிப்போட பல்வேறு வழிமுறைகள் உள்ளன. அவரவர் உடல் நிலைக்கும், தேவைகளுக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப எந்த முறையையும்ஏற்றுக்கொள்ளலாம். இதற்கென அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்பச் சுகாதார மையங்களிலும் தேவையான வசதிகளும் உதவிகளும் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தியதால் பெற்ற சாதனை குறிப்பிடத்தக்கது.

கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தின் கீழ் அடைந்த வெற்றி குறிப்பிடத்தக்க அளவுக்குக் கணிசமாக இருந்ததுடன் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருவதால் தற்காலிக முறையின் கீழ் சாதனையை உயர்த்தவும் நாம் தற்போது முயன்று வருகிறோம். கருத்தடை வளையங்களைப் பொருத்துவதில் இதுவரையில் 943 பெண் சுகாதாரப் பணியாளர்களுக்கு நாம் பயிற்சி அளித்துள்ளோம். இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வ்ருகிறது. 3 ஆண்டுப் பணி அனுபவமுடைய அனைத்துப் பெண் சுகாதாரப் பார்வையாளர்கள் துணைச் செவிலிப்பணி பேறுகால உதவியாளர்கள்அனைவருக்கும்1986-87-ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் கருத்தடை வளையம் பொருத்துவதில் பயிற்சி அளிக்கப்படும். சட்டப்படி கருவைக் கலைத்து கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்வதும், கருத்தடை வளையங்களைப் பொருத்துவதும் இயன்ற வரையில் மருத்துவ மனைகளில் செய்யப்பட்ட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு திட்டவட்டமாக நம்புகிறது. இதனை எய்தும் பொருட்டு, மகப்பேறுக்குப் பிந்திய கருத்தடை அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் கீழே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்டு வருகின்றன.

*1982-83:* 300 படுக்கைகள்: மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 20 என்ற விகிதத்தில்.

*1983-84:* 375 படுக்கைகள்: மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 25 சதவிகிதம்.

*1984-85:* 100 படுக்கைகள்: மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில்.

*1985-86:* 200 படுக்கைகள்: தலைமையிட மருத்துவமனைகளிலும் தொடக்கச் சுகாதார நிலையங்களிலும்.

மொத்தம் 975 படுக்கைகள்.

பழைய முறையான சினைக்குழல் முடிச்சு அறுவைச் (Tubectomy) சிகிச்சை செய்து கொள்வதில் ம்களிரிடையே குறிப்பாக ஆர்வம் காணப்படுகிறது. இருப்பினும் 'லாப்ராஸ்கோப்' கருவி மூலம் கருத்தடை அறுவைச் சிகிச்சை எளிதாகச் செய்யப்படுவதைக் கருத்திற்கொண்டும் இந்த முறையையும் பெரும்பாலான மகளிர் விரும்பிச் செய்து கொள்ள முன்வருவதாலும், மருத்துவமனைகளில் இக் கருத்தடை அறுவைச் சிகிச்சை முறையை நடத்தும் நோக்குடன் அரசு மருத்துவமனைகளிலும் உள்ளாட்சி மன்ற மருத்துவமனைகளிலும் உள்ள263லாப்ராஸ்கோப் கருவிகளில்

114 கருவிகளைத் தமிழ்நாடு அரசு வாங்கியுள்ளது. 116 கருவிகளை மத்திய அரசு நன்கொடையாக அள்ளித்துள்ளது. மூன்று கருவிகளைத் தனியார் நிறுவனங்கள் நன்கொடையாக அளித்துள்ளன. இந்த 'லாப்ராஸ்கோப்' கருவிகளைக் கையாள்வதில் மருத்துவர்களுக்குக் குழு குழுவாகத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஆடவருக்கு விந்துநாள அறுவைச் சிகிச்சை செய்வதுடன் (Vasectomy) மகளிருக்கும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய இயலும் பொருட்டு 140 தொடக்கச் சுகாதார நிலையங்களில் அறுவைச் சிகிச்சை அறைகளுக்கு வகை செய்யும் திட்டத்தை மாநில அரசு செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தை 1985-86ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கக் கருதப்பட்டுள்ளது.

குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இயன்ற அளவு தனிப்பட்ட மருத்துவர் பலரை ஈடுபடுத்தும் நோக்குடன் தொண்டு நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட மருத்துவர்கள் ஏற்பளிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சையகங்களில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய ஏற்பளிப்பதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டுள்ள குழுவுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது. ஏற்பளிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சையகத்தில் கருத்தடை அறுவை சிகிச்சைகளைச் செய்யும் தனிப்பட்ட மருத்துவர்கள், கருத்தடை அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு ரூ.50-ம் ஒருவருக்குக் கருத்தடை வளையம் பொருத்துவதற்கு ரூ.5 வீதமும் ஊதியம் பெறுகின்றனர். இந்திய மருத்துவச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள தனிப்பட்ட மருத்துவர்களும் தங்களுடைய சொந்த 'லாப்ராஸ்கோப்'கருவியைக்கொண்டு அரசினர் மருத்துவமனைகளில் கருத்தடை அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு ரூ. 50 என்ற வீதத்தில் 1985 அக்டோபர் 31ஆம் நாள் வரையில் ஊதியம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநிலத்தில் அரசு மருத்துவமனைகள், உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவை நகர்ப்புறக் குடும்பநல நிலையங்களை நடத்தி வருகின்றன. 1971ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புறக் குடும்பநல நிலையங்கள் அமைக்கப்படுவதற்குத் தகுதியுள்ள நகர்ப்புறப் பகுதிகள் அனைத்திலும் கிட்டத்தட்ட நகர்ப்புறக் குடும்பநல நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு முகவரமைப்புகளின் கீழ் செயற்பட்டு வரும் நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள் பற்றிய விவரம் பின்வரும்அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| | வகை 1 | வகை 2 | வகை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| அரசு | 83 | 23 | 63* | 169 |
| உள்ளாட்சி மன்றங்கள் | — | 6 | 75 | 81 |
| தொண்டு நிறுவனங்கள் | 1 | 2 | 13 | 16 |
| மொத்தம் | 84 | 31 | 151 | 266 |

* மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவ மனைகளில் உள்ள 50 பேறுகால பின்பணித் திட்ட மையங்களை உள்ளடக்கியது.

**பச்சை அட்டைகள், சமுதாய வெகுமதிகள் வழங்குதல்:**

குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்குப் பச்சை அட்டைகள் வழங்க வேண்டுமென்ற மத்திய அரசின் கருத்தைத் தமிழ்நாடு அரசு செயற்படுத்தியது. இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் மருத்துவ கவனிப்புத் தொடர் பணிகளை மேற்கொள்ள நகர எல்லைப்பகுதி சுகாதாரப் பணியாளர்கள் அவர்களுடைய குடும்பங்களுக்கு அடிக்கடி சென்று அவர்களைக் கவனித்துக் கொள்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை ஏற்றுள்ளவர்கள் வைத்துள்ள பச்சை அட்டைகள் காரணமாக அவர்கள் சுகாதாரப் பணியாளர்களிடமிருந்து மருத்துவ உதவி பெறத் தகுதியுடையவராவர். இலக்கை நிறைவு செய்த பணியாளர்கள், குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசு எதிர்பார்க்கும் பணியை நிறைவேற்றுவதற்காகத் தாமாகவே முன்வந்து ஈடுபட்ட சமுதாயத்தினர் ஆகியோருக்குப் பல்வேறு வகையிலான பரிசுகளை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மரபு வழியிலான அல்லது உள்ளூர் ஆயாக்கள் கிராம சமுதாயத்தினரிடையே முக்கியப் பங்கு வகிக்கின்றனர். ஆயாக்கள் தாய்மார்களுக்கு அருகிலேயே இருந்து பிள்ளைப்பேற்றில் உடனடியாக உதவுகின்றனர். கிராமப் பகுதிகளில் நடைபெறும் மகப்பேறு மருத்துவத்தில் பெரும்பாலானவை ஆயாக்கள் உதவியுடனேயே நடைபெறுகின்றன. மகளிர் பேறுகாலம் குழந்தை வளர்ப்பு ஆகியவற்றில் ஆயாக்கள் தாய்மார்களுக்கு விளக்குவதோடு சிறு குடும்பம் என்னும் கொள்கையைக் கடைப்பிடிப்பது குறித்தும் அவர்களிடையே பிரச்சாரம் செய்கின்றனர். இம்மாநிலத்தில் 31.3.1986ஆம் நாள் வரை 32 847 ஆயாக்களுக்கு மேற்சொன்ன வகையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சூலுற்ற மகளிர் கள்ளத்தனமாகக் கருவைக் கலைப்பதால் ஏற்படக்கூடிய இறப்பு விகிதத்தையும் அவர்கள் நோயுற்றிருத்தலையும் குறைக்கும் நோக்கத்துடன் 1971ஆம் ஆண்டு சட்ட சம்மதத்துடன் மருத்துவ முறையில் கருவைக் கலைக்கும் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டம் மருத்துவப் பாதுகாப்பு நடவடிக்கையை முக்கிய நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்ட ஓர் ஏற்பாடாக இருந்த போதிலும் திட்டமிட்ட குடும்பம் என்ற கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு செய்யப்பட்டு மருத்துவ முறையில் சட்ட சம்மதத்துடன் மகளிர் கருவைக் கலைத்துக் கொள்வது குடும்பநலத் திட்டத்தின் ஒரு துணை ஏற்பாடாக அமையும்.

தற்போது 165 அரசு மருத்துவமனைகள் 47 தனியார் மருத்துவமனைகள் ஏனைய அமைப்புகள் ஆகியவற்றின் மருத்துவமனையில் சட்ட சம்மதத்துடன் கருவைக் கலைக்கும் வசதி உள்ளது.

குடும்பநலத் திட்டத்தில் பல்வேறு கருத்தடை முறைகளின் கீழ் 1985-86ஆம் ஆண்டின் இலக்கும் எய்திய சாதனையும் வருமாறு :

| குடும்பக்கட்டுப்பாடு முறை | நிர்ணயிக்கப் பட்டஇலக்கு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|
| கருத்தடை அறுவைச் சிகிச்சை | 4,75,000 | 5,13,990 | 108.2 |
| கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டவர்கள் | 1,68,000 | 1,92,120 | 114.4 |
| கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோர் | 2,00,000 | 1,77,214 | 88.6 |
| கருத்தடை மாத்திரை பயன்படுத்துவோர் | 76,000 | 47,885 | 63.0 |

மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு 1986-87ஆம் ஆண்டிற்குக் கருத்தடை முறைகளில் நிரந்தர, தற்காலிக முறைகளுக்குப் பின்வரும் இலக்குகளை நிர்ணயித்துள்ளது:

| முறை | 1986-87ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய இலக்கு |
|---|---|
| நிரந்தர முறை: | |
| கருத்தடை அறுவைச் சிகிச்சை | 5,60,000 |
| தற்காலிக முறைகள்: | |
| கருத்தடை வளையம் பொருத்துதல் | 2,00,000 |
| கருத்தடை மாத்திரை பயன்படுத்துவோர் | 76,000 |
| கருத்தடைச் சாதனங்களைப் (கான்டோம்) பயன்படுத்துவோர் | 1,30,000 |



சென்னையில் உள்ள அரசு பல்மருத்துவக் கல்லூரியில் ரூ. 18 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்ட நவீன பல்மருத்துவ ஆய்வுக் கூடத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் திறந்துவைத்தார் (26.6.86).

## மாணவர் பக்கம் :



# அதிசய கடற் குதிரை!

அதிசயக் கடற்குதிரை ஒன்று அண்மையில் சென்னையில் பிடிபட்டது. இது சென்னை மெரீனா கடற்கரையிலுள்ள நீர்ப் பிராணிகள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

கடற்குதிரை பிடிபடுவது என்பது அபூர்வமாகும். 1983ல் இதே போல் ஒரு கடற்குதிரை பிடிபட்டது. ஆனால் இன்று அது இல்லை.

இப்போது பிடிபட்டிருக்கும் கடற் குதிரையின் நீளம் 4 அங்குலம். அட்லாண்டிக் கடலில் வாழும் கடற்குதிரை இனத்தைச் சேர்ந்தது இது.

# நூற்றாண்டு விழாக்காணும் சுதந்தர தேவிசிலை!



நியூயார்க் நகரின் தலைவாயிலிலுள்ள சுதந்தரதேவி சிலை, புதுப்பிக்கப்பட்டுப் புது மெருகூட்டப்பட்டுப் புதுப்பொலிவுடன் காட்சி தருவதைக் காணலாம். குறிப்பாக, இச்சிலையின் கையில் கம்பீரமாகக் காட்சி தரும் சுதந்தர ஜோதி புத்தம் புதிது; 1886ல் பிரெஞ்சு மக்களால் அன்பளிப்பாகத் தரப்பட்ட இச்சிலையின் நூற்றாண்டு விழா, அமெரிக்கச் சுதந்தர தினமான ஜூலை 4ஆந்தேதி கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இச்சிலையின் சுதந்தர ஜோதியை அமெரிக்க அதிபர் ரேகன் அன்றைய தினம் முறைப்படி ஏற்றி வைத்தார். இந்தச் சிலை 84 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளது. 161 அடி உயரமுள்ளது இது. இதன் உச்சி வரை செல்ல 'லிப்ட்' வசதி உள்ளது.



# சுடர் விடு

தஞ்சை பாண்டியன்

காலையில் எழுந்ததும் படித்திடு - தம்பி
　　கனிவாய் பழகிடத் தெரிந்திடு
சாலையில் பார்த்தே நடந்திடு - யாரும்
　　சமத்துவம் என்பதை உணர்ந்திடு!
சாதியை உலகினில் ஒழித்திடு - நல்ல
　　சான்றோர் வழியினில் சென்றிடு
நாதியற் றோரை அணுகிடு - நீ
　　நன்மையைச் செய்தே உயர்ந்திடு!
தூய ஆடையை அணிந்திடு - நெஞ்சம்
　　தூய்மை பெற்றிட முயன்றிடு
ஆய கலைகள் அனைத்தையும் - நாட்டில்
　　அழகாய்ச் செழித்திடச் செயல்படு!
வாழும் வழியை அறிந்திடு - காணும்
　　வஞ்சகர் உறவினை அகற்றிடு
பாழும் மூடநம் பிக்கையை - நீ
　　பதறி எழுந்தே தகர்த்திடு!
காலம் முழுவதும் உழைத்திடு - நீ
　　காட்டும் திறனால் தழைத்திடு
ஞாலம் சிறக்க எழுந்திடு - இளம்
　　ஞாயிறு நீயே சுடர்விடு!

# உயிர் காத்த உறவு



**—புலவர் அண்ணாமலை**

பவானியின் மகள் கமலம் சிறு குழந்தை. அவள் விளையாட்டிற்கு இந்தக் குட்டிநாய் பயன்பட்டது. டாமியும் கமலமும் வளர்த்தார்கள். கமலத்திற்குப் பின் சொக்கு பிறந்தான். சொக்கு 'அப்பா' என்று தன் தந்தையை அழைப்பதற்கு முன் அவர் இறந்து விட்டார்.

பவானியின் குடும்பம் பல வேளை உணவின்றிப் பட்டினி கிடந்தது. ஆனால் டாமியை மட்டும் அவள் பட்டினி போட்டது கிடையாது. டாமிக்கு எப்படியாவது உணவு கொண்டு வந்து கொடுப்பாள்.

கமலம் ஆறாம் வகுப்பு படிக்கிறாள். அவள் வளர்ச்சியைப் போலவே டாமியும் வளர்ந்தான். இரண்டரை அடி உயரமுள்ள டாமியைப் பார்த்தவர்கள் பயந்தார்கள். அதன் குரலைக் கேட்டவர்கள் அஞ்சி ஓடினார்கள். இரவு நேரங்களில் அந்தக் குடிசைப் பகுதிக்குக் காவல் அரசனாக டாமி விளங்கினான்.

குடிசைப் பகுதியில் வாழ்பவர்கள் டாமிக்கு உணவும் பலகாரங்களும் கொடுத்து அதன் உடலில் வலிமை ஏற்றினார்கள். ஊராருக்கு அன்புப் பிள்ளையாகவும் வீட்டாருக்குச் செல்லபிள்ளையாகவும் டாமி வளர்ந்து வந்தான்.

கமலம் பள்ளியைவிட்டு வீட்டிற்கு வந்ததும் முதலில் டாமியைத்தான் பார்ப்பாள். அதனுடன் சிறிது நேரம் விளையாடுவாள். பிறகு வீட்டுப் பாடங்களைச் செய்வாள். வீட்டு வேலைகளைச் செய்ய அம்மாவுக்கு உதவியாக இருப்பாள்.

பவானியின் குடிசை வீட்டில் டாமிக்கு என்று தனி இடம் கிடையாது. கமலமும் சொக்குவும் இருக்கும் இடத்தில் டாமி இருப்பான். இரவில் கமலத்தின் அருகில் டாமி படுத்துக் கொள்வான்.

ஒருநாள் பவானி தன் பிள்ளைகளை வீட்டிற்குள் தூங்கச்செய்து விட்டு வெளியில் வந்து படுத்துக் கொண்டாள். கமலத்தின் பக்கத்தில் படுத்திருந்த டாமி எழுந்து வந்து பவானியின் காலருகில் படுத்துக் கொண்டது. எல்லோரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

இரவு 12 மணி... ''தீ..தீ...தீ'' என்று மக்கள் அலறிக்கொண்டு ஓடினார்கள். கமலம் வீட்டிற்கு அடுத்து ஐந்தாவது வீடு தீப்பிடித்துக்கொண்டது. அந்தத் தீயை அணைக்க மக்கள் பெரும் முயற்சி எடுத்தார்கள்.

காற்று வேகமாக வீசியது. தீப்பிடித்த குடிசையில் இருந்து தீப்பொறிகள் பறந்தன. குடிசையில் இருந்த மூங்கில்கள் வெடித்தன. நெருப்புகள் சிதறின. அதனால் தீ அடுத்த குடிசைகளுக்கும் பரவியது.

பவானியின் வீட்டில் தீப்பிடித்துக்கொண்டது. பவானி பானைகளில் பிடித்து வைத்த தண்ணீரை எடுத்துக் குடிசைமீது ஊற்றினாள். வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருக்கும் கமலத்தையும் சொக்குவையும் காப்பாற்றத் துடித்தாள். தீப்பிடித்து எரியும் குடிசைக்குள் எப்படிச் சென்று காப்பாற்றுவது? யார் உதவிக்கு வருவார்கள் என்று கதறி அழுதாள்.

எரியும் குடிசைக்குள்ளிருந்து, ''அம்மா! டாமி! எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்ற கமலத்தின் அழைக்கும் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள் பவானி.

''டாமி! கமலத்தைக் காப்பாற்று. அவள் வீட்டிற்குள் இருக்கிறாள். போ. அவளைக் காப்பாற்று'' என்று ஆவேசமாகக் கத்தினாள் பவானி.

பவானியின் கட்டளையைக் கேட்டதும் டாமி வீட்டிற்குள் புகுந்தது. மயங்கிக் கிடந்த கமலத்தின் சட்டையை வாயால் கடித்து வெளியில் இழுத்து வந்தது. பவானி கமலத்தைத் தூக்கி அணைத்துக் கொண்டாள். அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தாள்.

''டாமி! சொக்கு உள்ளே இருக்கிறான். அவனைக் காப்பாற்று. போய் அவனையும் இழுத்துவா'' என்று சொல்லிக் கதறி அழுதாள் பவானி.

டாமி கொழுந்து விட்டெரியும் குடிசையைப் பார்த்தது. தன்னை வளர்த்த தாயின் கட்டளையைக் கேட்டது. எப்படித் தீக்குள் போவது என்று துடித்தது. குடிசைக்குள்ளிருக்கும் சொக்குவைச் சுற்றித்தீ எரிந்துகொண்டிருந்தது. சொக்கு மண்சுவரின் மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

டாமி நெருப்புக்குள் பாய்ந்து குடிசைக்குள் ஓடியது. எரியும் தீயில் சொக்குவைத் தேடியது. சொக்குவைச் சுற்றி நெருப்பு எரிவதைப் பார்த்தது அவன் மீது பாய்ந்தது. அவன் கால்சட்டையைக் கடித்து இழுத்துக்கொண்டு வெளியில் வந்தது.

டாமி தன்மகனை இழுத்துக் கொண்டு வருவதைப் பவானி பார்த்தாள். ஓடிப்போய் அவன் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டாள். அப்பொழுது ஒரு பெரிய மூங்கில் எரிந்துகொண்டு டாமியின் தலை மீது விழுந்தது. டாமி ''லொள்..லொள்..லொள்'' என்று கத்தி விழுந்தது. அடுத்த நிமிஷம் கூரையின் பகுதி எரிந்து டாமி மீது விழுந்தது. டாமியின் உடல் கருகியது.

மூர்ச்சை தெளிந்த கமலம் டாமியைப் பார்த்தாள். டாமி நெருப்பில் அகப்பட்டுத் துடிப்பதைப் பார்த்தாள். ''அம்மா! டாமியைக் காப்பாற்றுங்கள். டாமியைக் காப்பாற்றுங்கள்'' என்று கதறி அழுதாள்.

தீ அணைக்கப்பட்டதும் டாமியின் கண்கள் பவானியைப் பார்ப்பதுபோல் இறந்து கிடந்தது. ஊரார் டாமியைப் பார்த்தனர். உறவுக்காக உயிர்கொடுத்த டாமி என்று கூறிச் சென்றனர்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிவிட்டார் என்பதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போகிறேன்.

பிற்பகல் மணி 1.30. மாலை 4.30 மணிக்கு ஆந்திரா புறப்படுகிறார் காமராஜ். அதற்குள் 'பரோல்' விடுதலை -அஸ்வமேத யாகம் நடந்தாக வேண்டும்.

அஸ்வமேதக் குதிரையான 'பெட்டிஷன்' என் கையில். மூன்று மணி நேரத்தில் அஸ்வமேதக் குதிரை, எல்லா நாடுகளையும் சுற்றி வர வேண்டும். அதாவது எல்லா டிபார்ட்மெண்டுகளையும் சுற்றி வர வேண்டும். இடையில் எத்தனை அதிகார வர்க்கக் குறுக்குகள் வருமோ? சட்டதிட்டச் சிக்கல்கள் தலை நீட்டுமோ? காமராஜ் ஊரில் இருந்தால் பரவாயில்லை. அவரோ, வெளியூர் போகிறாரே? இப்படி, ஏதோதோ எண்ண அலைகள்! புரியாத பிரமிப்புகள்!

''சீச்சீ! காமராஜ் கையில் காகிதத்தைக் கொடுக்காமல், கோட்டையிலே பித்தம் பிடித்ததுபோல் நிற்பதா'' நறுக்கென்று தலையில் ஒரு குட்டு. ஓகோ என் தலையில் நானே குட்டிக் கொள்கிறேன். நன்றாக வேண்டும், எனக்கு.

எனது தலையில் அதிகப் பலமாக விழுந்த குட்டின் வலியைத் தடவிப் பொறுத்தபடியே, காமராஜ் வீட்டுக்குப் பறக்கிறேன்.

மாடியில், மொட்டை மாடியில் உலவிக் கொண்டிருக்கிறார், காமராஜ்.

''அப்பாடா! காமராஜ் தூங்கப் போய்விடவில்லை'' நிம்மதிப் பெருமூச்சு விடுகிறேன். அடுத்த கணம்....!

''என்னப்பா! நமசிவாயம். ஒரு காகிதம் - நாலு வரி பெட்டிஷன் எடுத்துக் கொண்டு வர நாலு மணி நேரமா? காகிதத்தைக் கொடு, சீக்கிரம்!'' கண்டிப்புடன் அதே சமயம் கனிவாகப் பிடுங்கிக் கொள்கிறார், எனது கையிலிருந்த பெட்டிஷன் காகிதத்தை!

அயர்ந்துபோய் நிற்கிறேன்.

பல பக்கங்கள், ஆங்கிலத்தில், பல பெரிய வக்கீல்கள் தயாரித்த பெட்டிஷனை 'கிடுகிடு' வெனத் தாளைத் தள்ளிப் படிக்கிறார்.

''எனது புருஷன் ஜெயிலில் இருக்கிறார். மலேசியாவிலிருந்து வந்திருக்கிறேன். பரோலில் விடும்படி வேண்டுகிறேன்'' என்று



எழுதினால் போதாதா? இவ்வளவு பக்கம் சட்டம் பேசணுமா எந்தச் சட்டம், தேசத் துரோக உளவாளியை வெளியே விடச் சொல்லுகிறது? வக்கீல்கள் வாதமே தனி ரகம்! அவங்க படிச்ச சட்டப்படிப்புக்கு நல்ல சான்ஸ். நல்லாத்தான் எழுதியிருக்காங்க!''

வாய்விட்டுப் பேசிக் கொள்கிறார், காமராஜ்.

''சாயங்காலத்திற்குள் -நீங்கள் புறப்படுவதற்குள் முடியுமா?'— குழைவாகக் கேட்கிறேன்.

''சும்மா இருப்பா! ஐந்து நிமிஷத்தில் தயார் பண்ணிக்கொடுக்க வேண்டிய காகிதத்தைப் புரியாம நேரங்கடத்திட்டே பாவம், நீ என்ன செய்வே? வங்கீலுங்க அவங்க கைவரிசையைக் காட்ட நேரமாயிடுச்சு! இப்பவாவது வந்தியே, அதுபோதும். எல்லாம் சரியாக நடக்கும். கவலைப் படாதே!''

முதுகில் தட்டிக் கொடுத்த காமராஜரின் அன்புத் தட்டல்- 'ஷொட்டு' ஐந்துநாள் வரை வலித்தது. ஆனால் தட்டிய போது வலியே தெரியவில்லை.

என்னைத் தட்டிக் கொடுத்த காமராஜ் 'கிருஷ்ணையா'! என்று தமது பிரைவேட் செக்ரட்டரியை அழைக்கிறார். தயாராக அருகிலேயே நின்று கொண்டிருந்த தனிச் செயலாளர் முன்னே வருகிறார்.

நின்ற நிலையிலேயே, என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்ட பெட்டிஷனில் நான்கு வார்த்தைகள் தான் எழுதுகிறார்.

காகிதம் செயலாளரிடம் கைமாறுகிறது. காதில் மேலும் ஏதோ சொல்கிறார்.

''நமச்சிவாயம் சாப்பிடலையே? உடனே போய்ச் சாப்பிடு. டாக்டரம்மாவுக்கு சொல்லு அவங்க புருஷன் இன்று ராத்திரியே வீட்டுக்கு வந்துடுவார்னு''!

பிரமித்து நின்ற என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். ''சும்மா போப்பா?''

''நான் ஊரிலிருந்து வந்ததும், என்னைப் பார்த்து நன்றி சொல்ல வரப்போறே. உம். புறப்படு''

காமராஜ் அன்புக் கட்டளைப் படி எல்லோருக்கும் 'நம்பிக்கை' ஊட்டுகிறேன்.

சாதாரணமாகப் 'பரோல்' விடுதலைப் பெட்டிஷனைப் பைசல் செய்ய வாரக் கணக்கு ஆகும். முதலமைச்சர் ஊரில் இல்லாத நேரத்தில் ஒரு இரவிற்குள் என்ன நடக்க முடியும்? என்றுதான் எனக்குத் தெரிந்த சட்டதிட்ட விற்பன்னர்கள் - அதிகார வர்க்கத்தினர் வியப்புடன் கேள்விக் குறி தொடுத்தனர்.

என் வரையில் நிம்மதியாகத் தூங்கி எழுந்தேன்.

காலையில் அந்த நல்ல செய்தி செந்தேனாகக் காதில் பாய்ந்தது!

நேற்று நடு நிசியில் லேடி டாக்டரம்மா வீட்டுக் கதவு 'படபட'எனத் தட்டப்படுகிறது.

''யாரது . இரவில் கதவைத் தட்டி உடைப்பது?'' எரிச்சலுடன் கதவைத் திறக்கிறார்கள்.

எதிரே! வக்கீல் - சிறையில் கிடந்த பார்-அட்-லா-லேடி டாக்டரின் கணவன் பூரித்த முகத்தோடு நிற்கிறார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ!

நீண்ட நாட்களாகப் பிரிந்து கிடந்த கணவன் மனைவியை ஒன்று சேர்த்து வைப்பதில் பிரமச்சாரி காமராஜ் காட்டிய பரிவு வாயுவேக - மனோவேக நடவடிக்கை! அப்பப்பா? ஒரே ஒரு நாளில் 'அஸ்வமேத' யாகம் செய்துவிட்ட மன்னாதி மன்னனின் பூரிப்பு எனக்கு. சங்கடத்தில் சிக்கித் தவிப்பவருக்குத் தக்க தீர்வு - சமயசஞ்சீவித் தலைவன் அவன்!

காமராஜ் வாழ்க! பெருந்தலைவன் பிறந்த நாளினை அரசு விழாவாகக் கொண்டாடி வரும் புரட்சித் தலைவர் வாழ்க!

குடும்பத்துக்கே குதூகலமூட்டும்

# டாப்கோ ப்ராய்லர்

*ம்ம்... அருமையான வாசனை! மிருதுவான புத்தம் புது சுவை!*

**மேலும் மேலும் உண்ணத்தூண்டும் டாப்கோ ப்ராய்லர்களை அளித்து உங்கள் குடும்பத்தின் பசியாற்றுங்கள். அவை நிச்சயம் உங்களை மகிழ்வூட்டும். ஏனென்றால், டாப்கோ ப்ராய்லர்...**

- அதிகப்புரதமும், குறைவான கொழுப்பும் கொண்டவை
- சுகாதார முறைப்படி 'ஹலால்' செய்து உரிக்கப்படுபவை
- உடனுக்குடன் தீர்ந்து போவதால் புத்தம் புதியவை
- வசதியாக அமைந்த விற்பனை நிலையங்களில் கிடைக்கின்றன.

டாப்கோ வழங்கும் மற்ற சுவைமிக்க உணவுகள் :

- **பண்ணைக் கோழிகள்** • **காடைகள்**
- **வெண்பன்றி இறைச்சி & இறைச்சிப் பொருட்கள்**
- **முட்டைகள்**




உங்கள் புரதத் தேவைக்கு

**TAPCO**

முழுமையான ஊட்டமுள்ள முட்டை, கோழி, இறைச்சி நிலையம்
8, கிரீன்வேஸ் சாலை (சத்யா ஸ்டுடியோ பின்புறம்)
சென்னை-28 தொலைபேசி: 417147
பெரும்பான்மையான அரசு மருத்துவமனைகளுக்கு
நாங்கள் முட்டைகள் வழங்குகிறோம்,

# Department of Continuing Education
# Institute for Social Sciences and Research

## Vellore - 632 006.

**Announces the following One-Year Post-graduate Diploma Programmes by Correspondence-cum-Contact Classes for the academic year 1986-87:**

1. Hospital Administration
2. Health Education
3. Public Health Administration
4. Social Welfare Administration
5. Family Welfare and Child Development
6. Nutrition and Dietetics
7. Educational Administration
8. Personnel Management
9. Public Relations
10. Journalism and Mass Communication
11. Computer Programming-BASIC Language.

**ELIGIBILITY : Graduates and Post-graduates of any discipline, including Doctors and Nurses with or without experience can join in any of the above courses**

The cost of prospectus and application form is Rs. 25 by D.D./M.O. drawn in favour of the Institute.

**LAST DATE : 31-7-'86**

**Phone : 24645**

**Registrar.**



# கறுப்பு ரோஜா

## புலவர் இளஞ்செழியன்

வானுயர்ந்த தமிழ்நாட்டுத் தலைவர்! நல்ல
வரலாற்றுப் பெருந்தலைவர் காமராஜர்:
தானுயர்ந்த தன்மைபோல் தாம்பிறந்த
தமிழகமும் உயர்ந்திடவே உழைத்தார்! மின்னும்
மீனுயர்ந்தார் நாட்டினிலே பிறந்த மேதை!
மிகஉயர்ந்த இமயம்போல் உயர்ந்து நின்றார்!
ஏனுயர்ந்தார் எவ்வாறு உயர்ந்தார் என்றால்,
எளிமையினால் கடமையினால் உயர்ந்தார் என்போம்!

விருதுபல பெற்றவராம் காம ராஜர்
விருதுநகர் பெற்றெடுத்த செல்வ மாவார்!
நிருவாகத் திறமைபெற்ற ஏந்தல்! மக்கள்
நெஞ்சத்தில் இடம்பெற்ற கறுப்பு ரோஜா!
திருமணத்தை நிறுத்திவைத்துத் துறவி யாகத்
திருநாட்டுத் தொண்டரானார்! புகழ்ப டைத்தார்!
வருந்தலைவர் அனைவர்க்கும் உவமை யானார்!
வரலாற்றில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டார்!

படிக்காத மேதையென்னும் காரணத்தால்
படித்தவரின் பிழையவர்பால் படிய வில்லை!
வடிக்காத காவியமாய் வையக த்தில்
வாழ்ந்திருந்து மறையாமல் மறைந்து போனார்!
குடிக்காத தமிழகத்தைப் படைத்துக் காட்டக்
கொண்டிருந்தார் நெஞ்சத்தில் உறுதி! ஆனால்,
முடிக்காத தொடர்கதையாய் இடையில் அந்த
முடிசூடாத் தமிழ்க்காந்தி மூச்சை விட்டார்!

ஏழைபங்கா ளர்அவர்! பங்க ளாக்கள்
ஏதுமில்லாப் பாங்காளர்! அவரைப் போலக்
கூழைத்தான் காய்ச்சித் தான் குடிப்போர் தம்மைக்
கொண்டுயர்த்த தொண்டுசெய்தோர்! எவருமில்லை!
வாழத்தான் முடியாமல் ஒவ்வோர் நாளும்
வாடத்தான் பிறந்துவிட்டோர் நிலையை மாற்றி
ஆளத்தான் வந்தபச்சைத் தமிழ ரானார்!
அவரைத்தான் போற்றுகின்றோம் தமிழைப் போல!

ஜாலியன்வாலாபாக் படுகொலையே இளைஞர் காமராஜரின் உள்ளத்தில் தேச பக்திக் கனலைத் தூண்டிவிட்டு, தேசீய இயக்கத்தில் அவரை இணைய வைத்தது.

காமராஜர் அதிகம் சாப்பிடமாட்டார். காலையில் ஒரு கப் காபி. மதியம் குறிப்பிட்ட நேரத்தில் சாப்பாடு என்பது கிடையாது. அதனால் பல சமயங்களில் சாப்பாடு தவறிப் போகும். இரவில் இரண்டு இட்டிலி, ஒரு கிளாஸ் பால் மட்டுமே.

காமராஜர் காலையில் 6 அல்லது 7 மணிக்கு எழுந்து கொள்வார். இரவு படுக்கப் போக நடு நிசியாகிவிடும்.

காமராஜர் உடற் பயிற்சி எதுவும் செய்தது இல்லை. சொத்து எதுவும் சேர்த்தது இல்லை. விருதுநகரில் ஒரு சிறு வீடுமட்டுமே அவருக்குச் சொந்தமாக இருந்தது. அதில்தான் அவரது தாயாரும் சகோதரியும்வாழ்ந்து வந்தனர். ஒரு அங்குல நிலம் கூட அவருக்குக் கிடையாது.

காமராஜர் மூன்று பேரைத் தமது அரசியல் குருவாகக் கொண்டிருந்தார். அவர்களில் தலையாயவர் காந்தியடிகள். காந்தியடிகளின் எளிமை, அஞ்சாமை, உறுதி, கொள்கைகளில் விட்டுக் கொடுக்காத தன்மை, சத்தியம், அகிம்சை ஆகியவை காமராஜருக்கு காந்தியடிகளிடம் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியிருந்தன.

இரண்டாவதாக அவரைக் கவர்ந்த தலைவர் நேரு. தேசீயம், சோஷலிசம், மனிதாபிமானம் ஆகிய பண்புகளுக்காக நேருவைக் காமராஜர் தமது தலைவராக ஏற்றார்.

மூன்றாவதாக சத்தியமூர்த்தியைத் தமது குருவாகக் கொண்டிருந்தார் காமராஜர். சத்தியமூர்த்தியின் தீவிர தேசபக்தி காமராஜரை ஆட்கொண்டிருந்தது.

(இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா 24-1-1965 இதழிலிருந்து)





ஐந்து வயதினிலே அறியாப் பருவத்திலே...

**1903 ஜூலை 15**
விருதுபட்டி என்னும் விருதுநகரில் குமாரசாமி நாடார் - சிவகாமி அம்மாள் தம்பதிக்கு மகனாகத் தோன்றினார்.

**1907**
தங்கை நாகம்மாள் பிறப்பு

**1908**
காமராஜர், திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப் பெற்றார். அரிச்சுவடியும் ஏட்டுக் கணக்கும் பயின்றார். சிறிது காலம் கழித்து ஏனாதி நாயனார் வித்யாசாலா வில் சேர்க்கப்பட்டார்.

**1909**
சத்திரிய வித்தியாசாலாவில் சேர்க் கப்பட்டார்.

**1910**
தந்தையார் குமாரசாமி நாடார் திடீரென்று காலமாகிவிட்டார். தாய் மாமன் கருப்பையா நாடார் காமராஜரின் குடும்பத்துக்கு உதவி செய்தார்.

**1914**
6ஆம் வகுப்பு படித்துக்கொண் டிருந்தபோது பள்ளி செல்வதை நிறுத்திக் கொண்டார்.

**1919 ஏப்ரல்**
ரவுலட் சட்டத்தை எதிர்த்து காந்தியடிகள் விடுத்த அழைப்பை ஏற்று, காங்கிரசின் முழுநேர ஊழிய ரானார்.



அண்ணலின் தொண்டராக ஆர்வமுடன் உழைத்தவராம்....

**1920**
ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். தாயார், திருமணப் பேச்சைத் தொடங்கினார்; மணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார் காமராஜர்.

**1922**
சாத்தூர் தாலுகா காங்கிரஸ் மாநாட்டில் வரவேற்புச் செயலாள ராகப் பணியாற்றினார்.

**1923**
மதுரையில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.

**1926**
சத்தியமூர்த்தி - சீனிவாச அய்யங் கார் ஆகியோருடன் பணி ஆற்றி னார். பொதுத் தேர்தலில் பல ஊர்களுக்குச் சென்று தேர்தல் பணிபுரிந்தார்.

# பெருந்தலைவர்

**1927**
சென்னையில் கர்னல் நீல் சிலை அகற்றும் போராட்டத்தை நடத்த அண்ணல் காந்தியிடம் அனுமதி பெற்றார். ஆனால் போராட்டம் நடைபெறவில்லை. நீல் சிலையை அரசாங்கமே அகற்றி விட்டது.

**1928**
மதுரைக்கு வருகைபுரிந்த சைமன் குழுவை எதிர்த்தார். வேதாரண் யத்தில் நடைபெற்ற உப்பு சத்யாக் கிரகத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டார். இரண்டாண்டு சிறைத் தண்டனை பெற்றார். அலிபூர் சிறையில் அடைக்கப்பட் டார்.

**1931**
காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் காரணமாக காமராஜர் விடுதலை செய்யப்பட்டார். விருதுநகரில் மாபெரும் வரவேற்பு அளிக்கப் பட்டது.

**1933**
இங்கிலாந்தில் நடைபெற்ற வட்ட மேஜை மாநாடு தோல்வியுற்றதால் நாடெங்கும் கிளர்ச்சி ஏற்பட்டது. பல தலைவர்கள் கைது செய்யப் பட்டனர். காமராஜரும் ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றார்.

**1934 ஜனவரி**
பீகாரில் ஏற்பட்ட பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வேண்டுமென பாபு ராஜேந்திர பிரசாத் விடுத்த வேண்டுகோளை ஏற்று, தன்னால் முடிந்த உதவி களைச் செய்தார் காமராஜர்.

**1936**
காரைக்குடியில் நடைபெற்ற காங் கிரஸ் கமிட்டித் தேர்தலில் சத்திய

மூர்த்தி தலைவராகவும் காம ராஜர் செயலாளராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

**1937**
சட்டமன்றப் பொதுத் தேர்தலில் சாத்தூர்த் தொகுதியில் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். விருதுநகர், நகராட்சி மன்றத் தேர்தலில் 7வது வார்டில் போட்டியிட்டு வென்றார். நக ராட்சித் தலைவராகும்படி பலரும் வேண்டியும், அவர் மறுத்துவிட்டார்.

**1940**
தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். யுத்த நிதிக்குப் பணம் தர வேண்டாம் என்று மக்களி டையே பிரச்சாரம் செய்ததால் அந்நிய ஏகாதிபத்தியத்தால் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

# வாழ்க்கைக் குறிப்பு

**1941 மே-31**
சிறையிலிருந்த காமராஜர், விருது நகர் நகராட்சி மன்றத் தலைரவாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட் டார்.

**1942 மார்ச்**
காமராஜர் விடுதலை பெற்றார். விருதுநகரில் மகத்தான வரவேற்பு. மாநகராட்சிக் கூட்டத்தில் முதன் முறையாகக் கலந்து கொண்டு, அன்றைய தினமே கட்சிப் பணியின் காரணமாக நகராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். ஆகஸ்ட் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டார்.

**1945**
இரண்டாவது உலகப் பெரும் போரில் வெள்ளையர்கள் வெற்றி பெற்றதனால், பாதுகாப்புக் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். காமராஜரும் அவர்களுள் ஒருவர். திருப்பரங் குன்றத்தில் நடைபெற்ற காங்கி கிரஸ் ஊழியர் மாநாட்டில் காம ராஜரின் கை வலுத்தது.

**1946 மே 16**
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற் றார்.

**1947 ஆகஸ்ட் 15**
இந்தியா விடுதலை பெற்றது. பண்டித நேருவின் தலைமையில் இடைக்கால அரசு உருவானது. இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்த அண்ணல் காந்தியடிகளைப் போற்றி ஓர் அறிக்கை வெளியிட் டார் காமராஜர்.



ஆசிய ஜோதியுடன் அரும்பணிகள் ஆற்றிவந்தார்.

**1948**
கோயம்புத்தூரில நடைபெற்ற தமிழ் மாகாண மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவ ராகப் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1949**
இலங்கை இந்தியர் அழைப்பின் பேரில் இலங்கைக்குச் சுற்றுப் பய ணத்தை மேற்கொண்டார்.

**1950**
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற் றார்.

**1951**
பிரதமர் நேரு, அனைத்திந்திய காங் கிரஸ் கமிட்டியின் தலைவராகத் தேர்வு பெறுவதற்குக் காமராஜர் மிகவும் உதவியாக இருந்தார்.

**1952**
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக டாக்டர் சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வழி வகுத்தார் காமராஜர்.

சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பூரண பெரும்பான்மையை அடைய வில்லை. ராஜாஜி முதலமைச்சரா



சுப்பராயன் தோழரானார் அர்ப்பணிப்பே வடிவமானார்.

வதற்கு காமராஜர் ஒத்துழைப்பு நல்கினார். டிசம்பர் திங்களில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் காமராஜர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1953**

இலங்கை சுற்றுப்பயணத்தை இரண்டாவது முறையாக மேற்கொண்டார்.

**1954 பிப்ரவரி:**

மலாய்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். முதலமைச்சர் ராஜாஜி அறிமுகம் செய்த குலக் கல்வித் திட்டம் பெருத்த எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டதால் அவர், பதவியில் நீடிக்க முடியவில்லை. ராஜினாமா செய்தார். நிலைமையைச் சமாளிப்பதற்காக சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவிக்குக் காமராஜர் போட்டியிட்டு வென்றார்.

**1954 ஏப்ரல் 13**

காமராஜர் சென்னை மாநிலத்தின் முதல்வரானார். குடியாத்தம்



தமிழகத்தின் முதல்வரானார் சமதர்மம் தழைக்கச் செய்தார்.

தொகுதியில் இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்று சட்டமன்ற உறுப்பினரானார்.

**1955**

ராமநாதபுரத்தில் கிழக்குப் பகுதியில் புயலாலும் பேய் மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்த்து, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்.

**1956**

மொழிவாரி மாகாணம் என்ற திட்டத்தின்படி, புதிய தமிழகம் உருவாவதற்கு ஆதரவு தெரிவித்தார்.

பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகம் செய்தார்.

**1957**

பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, மீண்டும் முதலமைச்சரானார்.

**1960**

ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் 11ஆம் வகுப்பு வரை இலவசக்



கொஞ்சுமொழிப் பிஞ்சுகளின் தமிழ்ச்சாப்பில் தாம்மகிழ்வார்.

கல்வி அளிப்பதற்கு ஆணையிட்டார்.

**1961 அக்டோபர் 9**

சென்னை மாநகராட்சியினர் உருவாக்கிய காமராஜர் திருஉருவச் சிலையைப் பிரதமர் நேரு திறந்து வைத்தார்.

**1962**

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றார்—மூன்றாம் முறையாக முதலமைச்சர் ஆனார்.

**1963**

எல்லாருக்கும் இலவசக் கல்வித் திட்டத்தை அமல்படுத்தினார்.

**அக்டோபர் 2**

காமராஜர் திட்டத்தின்படி பதவியை ராஜினாமாச் செய்தார்.

பின்னர் காமராஜர் அனைந்திந்திய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1964 ஜனவரி 9**

பிரதமர் நேரு மே 27-ல் மறைவெய்தியதால் - அடுத்து லால் பகதூர் சாஸ்திரி பிரதமராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு ஆவன செய்தார் காமராஜர்.

**1965**

இந்தியா - பாகிஸ்தான் போர் ஏற்பட்டது. பஞ்சாபில் போர்



சாஸ்திரியைத் தேர்ந்தெடுத்து சரித்திரத்தில் இடம்பெற்றார்.



போர்முனை நோக்கிச்சென்று வீரர்க்கு வாழ்த்துச் சொன்னார்.

முனைப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தார். பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி யுத்த நிதி திரட்டுவதற்காகச் சென்னைக்கு வந்தபோது— காமராஜர் பேராதரவு தெரிவித்தார்.

**1966**
தாஷ்கண்ட் சென்ற பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி, எதிர்பாராது மறைவு எய்தியதால் மறுபடியும் பிரதமர் தேர்வு நடைபெற்றது. இந்திரா காந்தி பிரதமராவதற்குக் காமராஜர் பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டார்.

**ஜூலை 22**
காமராஜர் சோவியத் நாட்டில் இருபது நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

**நவம்பர் 7**
டெல்லியில் சில விஷமிகள் - காமராஜரின் இல்லத்தைத் தாக்கினர். ஆயினும், ஆபத்தின்றித் தப்பித்தார்.

**1967**
பொதுத் தேர்தலில் போட்டியிட்ட காமராஜர் தோல்வியுற்றார். பேரறிஞர் அண்ணா பெரும்பான்மை பெற்று முதல்வரானார்.

**1969**
நாகர் கோவில் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் காமராஜர் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**1971**
நாடாளுமன்ற இடைத்தேர்தல் வந்தது. காமராஜர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.



இந்திராவைத் தேர்ந்தெடுத்து இலட்சிய தீபம் ஏற்றிவைத்தார்.

**1972**
தாமிர பத்திர விருது பெற்றார்.

**1975 அக்டோபர் 2**
பிற்பகல் 2 மணி அளவில் எதிர்பாராமல் காமராஜருக்கு உடல் வியர்த்தது. டாக்டர் வருவதற்குள் அவர் உயிர் துறந்தார். அவரது உடல் பொதுமக்களின் பார்வைக்காக ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

**அக்டோபர் 3**
அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. காமராஜரின் தங்கையின் பேரன் கனகவேல் உடலுக்கு எரியூட்டினார்.

காமராஜருக்கு கிண்டியில் நினைவகத்தைத் தமிழக அரசு உருவாக்கியது.

**1976**
ஜூலை 15 ஆம் நாளன்று காமராஜர் நினைவு 25 காசு அஞ்சல் தலையை மைய் அரசு சென்னை கலைவாணர் அரங்கத்தில் வெளியிட்டது.
பாரத ரத்னா விருது வழங்கியது.



அண்ணலின் தொண்டரென அக்டோபர் 2ல் மெய்ப்பித்தார்.

**1977 ஆகஸ்டு 18**
தமிழ்நாடு சட்டப் பேரவையில் காமராசர் படம், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டியால் திறந்து வைக்கப் பட்டது.

**1978 ஜூலை**
தியாகராய நகரில் காமராஜர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி நினைவில்லமாக்கியது தமிழக அரசு.

சென்னைக் கடற்கரைச் சாலைக்குக் காமராஜர் சாலை என்று பெயர் சூட்டியது தமிழக அரசு.

**1984 ஜூலை 15**
விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் மாவட்டத்தைத் தமிழக அரசு உருவாக்கியது.

தொகுப்பு தமிழ்ப்பித்தன்
ஆதாரம்: முருக தனுஷ்கோடி எழுதிய காமராஜர் ஒரு சரித்திரம்




## சென்ற இதழில்....

தமிழக அரசு, கடந்த 9 ஆண்டுகளில் ஆற்றிய அரும்பணி மகுடத்தின் முத்துக்கள் சிலவற்றை, சென்ற இதழ் ( 1 .7.86) அட்டை அலங்கரித்தது.

# சமுதாய மேதை

### கவிஞர் வானம்பாடி

சரித்திரத்தில் உருவானோர் பலரைக் கண்டோம்.
சரித்திரத்தை உருவாக்கும் சக்தி மிக்கோர்
சரித்திரத்தில் மிகச்சிலரே! சித்த மெல்லாம்
சலியாது உழைப்பதிலே தேக்கி வைத்து-
சரித்திரத்தை அற்புதமாய் மாற்றி, இங்கு
சமதர்மம் காப்பதற்கு முனைந்து நின்று-
சரித்திரத்தைத் தந்தவொரு தீரன்; இந்த
சமுதாய மேதையவன்; காம ராஜன்!

மக்களது உள்ளத்திலே மலர்ந்த மேதை
மகாத்மா காந்தியண்ணல் மதித்த கீதை!
பக்கபலம் தேடுதற்குப் பாடங் கேட்டு
பட்டங்கள் பெற்றதனால் மேதையல்ல!
தக்கபல செயல்கண்டு தன்னைக் கொண்டு
தலைநிமிர்ந்த மேதையவன்; தாயைப்போல
மிக்கநலம் புரிந்திருந்த காம ராஜன்
மண்ணாண்ட மேதைகளில் மேதை யன்றோ?

நெஞ்சத்தில் சுமைமிகுந்த நேரு ஜிக்கு
நேசமுடன் காமராஜன் திட்டம் தந்தான்!
கொஞ்சத்தில் மறந்திடுமோ சரிதம்? அந்தக்
கோமகனாம் நேருபிரான் வீழ்ந்த நேரம்
வஞ்சத்தில் பாரதத்தை விழுங்க யெண்ணி
வலைவிரித்துக் காத்திருந்தோர் வாய் புதைக்க-
மஞ்சத்தில் லால்பகதூர் அமர்ந்த தெல்லாம்
மாமேதை காமராஜன் செயலா வன்றோ?

எத்தனையோ பேரறிஞர் இந்த நாட்டில்
இருந்ததைநா மறிந்திடுவோம்; எனினும் அன்று,
அத்தனைபேர் மத்தியிலும் அருமை நேரு
அடுத்தபடி இந்நாட்டை வழி நடத்த
சித்தனைப்போல் வாழ்ந்துவரும் காமராஜன்
சீர்தலைமை பெறுகவென்று சொன்னா ரன்றோ
இத்தனையும் ஜெகமறியும் என்றால் அந்த
இசைமிகுந்த மேதைபுகழ் இயம்பப் போமோ?

சொல்வதெனில் சொல்லலாம் நூறு நூறு-
சொல்பிந்தி செயல்முந்தி என முடித்த
வல்லமையின் சின்னமந்த காம ராஜன்
வழிகாட்டும் மேதையென்போம், தியாகத் தாயின்
செல்வமகன் கூட்டிவைத்த பெருமை இங்கு
செந்தமிழர் நாட்டுக்கே புதுமை யாகும்!
கல்வியெனும் வெள்ளமதில் மிக்க நம்மோர்
கண்திறந்த மேதையவன்; போற்றி! போற்றி!



15.7.86 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 84-வது பிறந்த நாளையொட்டி, அண்ணா சாலையிலுள்ள காமராஜர் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மாலை அணிவித்தார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



DIPR/Efficient

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

